புத்த தம்மம்

அடிப்படைக் கொள்கைகள்



ஆங்கில மூலம்

டாக்டர் எஸ்.ஏ. எதிரிவீர

தமிழில்

டாக்டர் வீ. சித்தார்த்தா

(பெரியார்தாசன்)

புத்த தம்மம்

அடிப்படைக் கொள்கைகள்

ஆங்கில மூலம்

டாக்டர் எஸ்.ஏ. எதிரிவீர

M.B.B.S., F.R.C.S. (Eng). F.R.C.S. (Edin)
Postgraduate Diploma in Buddhist Studies (Merit)
University of Kelaniya
7, Annie Avenue, Dehiwala, Sri Lanka.

தமிழில்

டாக்டர் வீ. சித்தார்த்தா, எம்.ஏ.பி.எச்.டி
(பெரியார்தாசன்)

வெளியிடுபவர்

பிக்கு யு ரதனபால

மகா போதி சொஸைட்டி

17, *கென்னட் லேன்,*

எழும்பூர், சென்னை - 600 008.

பவுத்தம் :

" போதனைகள் அனைத்திலும் சிறந்தது இதுவே. புரியவும், தேரவும் கடினமேயாயினும் ... ஒரு முறை புரிந்துகொள்ளப்பட்டதும் அது முடிவிலா, அளவிலா பேறுகளையும் இன்பங்களையும் கொணர்கிறது."

கொரியன் மிஷன்
கி.மு, 500ல் ஜப்பானிய
அரசவையில் பவுத்தத்தை
அறிமுகப்படுத்திக் கூறியது.

First Publication, Printed by: GLOBE PRINTOGRAAPHERS.
14, Murugappa Mudali Street, Purasawalkam, Madras - 600 007, Phone : 642 1991.

PUBLISHER'S NOTE

(of First Publication)

Keeping in mind the interest shown by the Tamil speaking masses about Buddha's teachings, we thought of bringing out yet another book on Buddhism on Buddha Poornima Day of 1993. By chance we came across a book written in English titled as "Essentials of Buddhism" by Dr. S.A. EDIRIWEERA, M.B.B.S., F.R.C.S. (Eng.) F.R.C.S. (Edin).

We felt if this book was translated into Tamil it would be very useful. It contains many basic teachings of Buddha in brief. Time was very short. We consulted Dr. Siddhartha (Prof. Periyardasan) and asked him whether he could translate the book. He readily agreed to our request and within a short period of time the translation was ready. We are very much thankful to Prof. Siddhartha for his efforts inspite of heavy work in the academic field as well as in the social field.

We are very much thankful to the author Dr.S.A.Ediriweera for giving us readily his consent to translate the book and publish. It was a further encouragement for us in our endeavour. May this merit of Dhamma service bring him long life, peace and harmony.

We are also thankful to Dr. Raman of the Archeological Survey of India for giving us useful suggestions.

Without the help of some of our well wishers like Bhagya Lakshmi Travels, we would not have been able to bear the printing cost. We are also very thankful to them and may this service of Dhamma bring them long life, peace and harmony.

Finally, the Globe Printograaphers, of Madras, we cannot but ever remember their helpful nature shown to us when we were facing the task of getting this book printed in a short period of time. May they also be happy and peaceful.

We hope this book, though a translation, give a sufficient material to know what Buddhism is in brief. The text wherever it is in verse has been translated into Tamil verses freely wherever possible. Pali original terms have been given to contain important titles and subjects.

May all be benefitted by Dhamma.

May there be peace and harmony.

Ven. U. Ratanapala
Maha Bodhi Society,
17, Kennet Lane,
Egmore, Madras - 600 008.

நமோ தஸ்ஸ பகவதோ அரஹதோ ஸம்மா ஸம்புத்தஸ்ஸ

1. திரிஸரணம்

புத்தங் ஸரணங் கச்சாமி.
தம்மங் ஸரணங் கச்சாமி.
ஸங்கங் ஸரணங் கச்சாமி.

துதியம்பி புத்தங் ஸரணங் கச்சாமி.
துதியம்பி தம்மங் ஸரணங் கச்சாமி
துதியம்பி ஸங்கங் ஸரணங் கச்சாமி.

ததியம்பி புத்தங் ஸரணங் கச்சாமி.
த்தியம்பி தம்மங் ஸரணங் கச்சாமி.
ததியம்பி ஸங்கங் ஸரணங் கச்சாமி.

2. பஞ்ச ஸீலங்

பாணாதிபாதா வேறமணி ஸிக்காபதங்
ஸமாதியாமி.

அதின்னாதானா வேறமணி ஸிக்காபதங்
ஸமாதியாமி.

காமேஸு மிச்சாசாரா வேறமணி
ஸிக்காபதங் ஸமாதியாமி.

முஸாவாதா வேறமணி ஸிக்காபதங்
ஸமாதியாமி.

ஸுறா மேரய மஜ்ஜ பமா
தட்டானா வேறமணி ஸிக்காபதங்
ஸமாதியாமி.

வந்தனம் பகவரே வந்தனம் அறவோரே
வந்தனம் உயர்ஞானம் எய்திய புத்தரே!

திரிசரணம்

புத்தராம் அறவோரிடம் புகுகிறேன் அடைக்கலம்
தம்மமாம் அறத்தினிடம் புகுகிறேன் அடைக்கலம்
சங்கமாம் துறவோரிடம் புகுகிறேன் அடைக்கலம்

மீண்டும் புத்தராம் அறவோரிடம் புகுகிறேன் அடைக்கலம்
மீண்டும் தம்மமாம் அறத்தினிடம் புகுகிறேன் அடைக்கலம்
மீண்டும் சங்கமாம் துறவோரிடம் புகுகிறேன் அடைக்கலாம்

மீண்டும் மீண்டும் புத்தராம் அறவோரிடம் புகுகிறேன் அடைக்கலம்
மீண்டும் மீண்டும் தம்மமாம் அறத்தினிடம் புகுகிறேன் அடைக்கலம்
மீண்டும் மீண்டும் சங்கமாம் துறவோரிடம் புகுகிறேன் அடைக்கலம்

பஞ்ச சீலம்

உயிர்வதை புரிவதைத் தவிர்த்திடும் அறத்தினை
உவந்தேற் கின்றேன்.

பிறர்பொருள் கவறலைத் தவிர்த்திடும் அறத்தினை
உவந்தேற் கின்றேன்.

பிழையுறு காமத்தைத் தவிர்த்திடும் அறத்தினை
உவந்தேற் கின்றேன்.

பொய்யுரை புகலலைத் தவிர்த்திடும் அறத்தினை
உவந்தேற் கின்றேன்.

மனத்தினை மயக்கியே பிழை செயத் தூண்டிடும்
மதுக்குடி வெறியினைத் தவிர்த்திடும் அறத்தினை
உவந்தேற்கின்றேன்.

பொருளடக்கம்

அத்தியாயம்		பக்கம்
1.	புத்தரும் பவுத்தமும்	1
2.	புத்தரின் வாழ்க்கை	2
3.	தம்மம்	5
4.	சில அடிப்படை போதனைகள்	7
5.	நான்கு உன்னத வாய்மைகள்	9
6.	உன்னத எண்வழிப்பாதை	13
7.	மனித ஆளுமையின் பகுப்பாய்வு	17
8.	இருப்பின் உண்மை நிலை	20
9.	'ஆன்மா இல்லை'	23
10.	படைப்புக் கடவுள் இல்லை	26
11.	சார்புநிலைத் தோற்றுவாய்	29
12.	கம்மா	33
13.	மறுபிறப்பு (மீள்-உருவாக்கம்)	36
14.	வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வு	39
15.	விடையளிக்கப்படாத வினாக்கள்	43
16.	மனத்தைப் பண்படுத்தல் (தியானம்)	46
17.	நிப்பாணம்	49
18.	அரஹந்த் (அறவோர்)	51
19.	சங்கம்	53
20.	அறவியல்	56
21.	அரசியல் சிந்தனைகள்	67
22.	பொருளாதாரச் சிந்தனைகள்	71
23.	சமூகப் போதனைகள்	75
24.	விடுதலை	86
	குறிப்புக்கள்	89

அத்தியாயம் 1

புத்தரும் பவுத்தமும்

புத்தர் யார் ?

புத்தர் பூரண ஞானம் பொலிந்தவர்.

புத்தர் ஒரு முழு நிறைவுற்றவர் ; உயர்வுற்றமாமனிதர் ; ஓர் அற்புத மனிதர் : 'உயர்பேருண்மையாம்' தம்மத்தை வழங்கியவர் - மனிதர், தேவர் யாவர்க்கும் போதகர்.

ஏறத்தாழ 2600ஆண்டுகளாய்ப் புத்தருடைய போதனைகள் கோடானு கோடி மக்களின் வாழ்க்கையில் தாக்கம் ஏற்படுத்தி வந்துள்ளன,

பவுத்தம் யாது ?

பவுத்தம் பூரண ஞான சமயமாகும் - அதில் பெரும் கருணைக்கும் பேரறிவிற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

பவுத்தம் குருட்டு நம்பிக்கைகளை நிராகரிக்கிறது. இயற்கை மீறிய சக்திகளின் பால் கொள்ளும் அச்சத்தை அகற்றுகிறது ; சிந்தனைச் சுதந்திரத்தை வழங்குகிறது ; தர்க்கத்தை ஊக்குவிக்கிறது; பகுத்தறிவை வளர்க்கிறது ; அது வெற்று விசுவாசத்தை ஊக்குவிப்பதில்லை.

பவுத்தம் முழு அன்புறு கருணையையும், பொறையுடைமையையும், நல் விருப்பையும் நிறைவுறக் கொண்டதோர் நல்வாழ் நெறியாகும். அது அனைத்து உயிர்களுக்கும் அமைதியையும் இன்பத்தையும் நல்குவதாகும்.

புத்தரின் போதனைகள் உலகத் துன்பங்கள் யாவினுக்கும் உரிய மருந்தெனக் கருதப்பட்டுக் கீழ்க் கண்டவாறு போற்றப் படுகிறது :

" எண்ணிலா மருந்துகள் உண்டு இப்புவியினில்
ஆற்றலில் அவைகள் வெவ்வே றானவை ;
*அவைகளில் ஒன்றும் தம்மமாம் * மருந்திற்கு*
இணையான தன்று ! அருந்துவீர் அதனையே! " (1)

* புத்த தம்மம்

அத்தியாயம் 2

புத்தரின் வாழ்க்கை

பிறப்பு

புத்தர் இமயத்தின் அடிவாரத்திற்கருகே, இப்போதைய நேபாளத்தின் எல்லையில் உள்ள கபிலவஸ்துவில், லும்பினி சோலையில், கி.மு. 623ல், மே திங்கள் பவுர்ணமி நாளில் ஓர் இளவரசராகப் பிறந்தார்.

அவருடைய தந்தை அரசர் சுத்தோதனர் - தாய் மஹா மாயா.

இளவரசர் சித்தார்த்தா என்று பெயரிடப்பட்டார். அவருடைய குலப்பெயர் கோதமா (கவுதமர்) என்பதாகும். எனவே அவர் சித்தார்த்த கவுதமர் என்று வழங்கப்பட்டார்.

இல்லறம்

இளவரசர் செல்வச் செழிப்பில் திளைத்து வளர்ந்தார். அவர் காலத்திய கலைகளிலும் விஞ்ஞானங்களிலும் கற்றுத்தேர்ந்த நல்மாணவராய்த் திகழ்ந்தார்.

அப்போதைய வழக்கப்படி, அவர் தம் பதினாறாவது வயதில் யசோதரை என்னும் அழகிய இளவரசியை மணம்புரிந்து கொண்டார். அவருடைய இல்லற வாழ்வு இனிமையானதாய் இருந்தது. அவர் தம் 29வது வயதில் ஓர் ஆண் குழந்தைக்குத் தந்தையானார். அக்குழந்தைக்கு இராஹுலன் என்று பெயர் சூட்டப்பட்டது.

துறவு

இளவரசர் சித்தார்த்தர் மிகுந்த அறிவாற்றலும், மிகுந்த உணர்வும் உடையவராயிருந்தார். அரச சுகங்களையும், வசதிகளையும் மீறி, வாழ்க்கை எப்போதும் இன்பமயமானதாய் இல்லை என்பதை அவர் கவனித்தார் - ஆங்கு தளர்வும் (முதுமையுறல்), பிணியும், மரணமும், துன்பமும் சமூகத்தில் நிலவுவதை அறிந்துணர்ந்தார். இந்த அதிருப்தியான நிலையில் இருந்து வெளிப்படும் வழியொன்றைக் கண்டுபிடிக்க அவர் விழைந்தார்.

தமது 29வது வயதில் அரச சுகங்களைத் துறந்து, மனித குலத்திற்கு ஆறுதலைக் கொணரும் வழியைக் கண்டுபிடிக்கும் பேரார்வத்துடன் துறவியானார்.

உண்மைக்கான தேடல்

'உண்மைக்கான தேடலில்' துறவி சித்தாத்த கவுதமர் புகழ்பெற்ற பல மதகுருக்களை நாடினார். போதிக்கப்பட்ட அனைத்தையும் கற்றார். இருப்பினும் அந்தப் புகழ்பெற்ற குருக்களுக்குத் தெரிந்தவைகள் குறைவேயென்றும், வாழ்வின் உண்மைத் தன்மையை அவர்களால் விளக்க இயலவில்லை என்றும் அவர் உணர்ந்தார். எனவே, முழு 'உண்மையை' உணரத் தாமே முயற்சி செய்ய அவர் முடிவெடுத்தார்.

கடின முயற்சி, இடையறாத் தேடல், ஆழ்ந்த தியானம் மற்றும் ஒருமுகப்படும் மனம் ஆகியவற்றை ஆறாண்டு காலம் மேற்கொண்டமையால், அவர் தம் மனத்தை மாசற்றதாகவும்-தெளிவுற்றதாகவும் அமைதியுற்றதாகவும் ஆக்கிக் கொள்ள முடிந்தது.

மிக்குயர்ந்த பூரண மெய்ஞ்ஞானம் எய்துதல்

நன்கு வளப்படுத்தப்பட்ட, முழுமையாய் அமைதியுற்ற மனத்துடன், துறவி கோதமரால் 'உள்ளவற்றை உள்ளவாறு' நோக்க முடிந்தது - அறியாமை அகன்றது - பேரறிவு மலர்ந்தது-அவர் வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளையும் அவற்றின் தன்மைகளையும் உள்ளது உள்ளபடி நன்குணர்ந்தார். அவர் பூரண ஞானம் பொலிந்த புத்தரானார்.

மிக்குயர் மெய்ஞ்ஞானம் மேவியபோது புத்தருக்கு வயது 35. அப்போது அவர் புத்த கயாவில் ஒரு போதிமரத்தடியே ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருந்தார். (இப்போதைய பீஹாரில் உள்ளது கயா).

புத்தராய் வாழ்ந்த பெருவாழ்வு

புத்தர் தம் வாழ்வைப் பெருங்கருணையோடு மனிதகுல நன்மைக்காக அர்ப்பணித்தார். உலகம் ஒழுக்கத்தில் உயரும் பொருட்டு அவர் தன்னலமில்லா தனிப்பெருந்தொண்டு புரிந்தார். அனைத்துயிர்களின் நன்மைக்காகவும், இன்பத்திற்காகவும் அவர் தளர்வின்றி உழைத்தார்.

மறைவு (மஉறாபரிநிப்பாணம்)

45 ஆண்டுகால வெற்றிகரமான போதனை வாழ்வுக்குப் பின், தமது 80வது வயதில், கி.மு.534ல் குசினாரா பகுதியில் (இப்போதைய இந்தியாவில் உத்தரப்பிரதேசம்) இருந்த சால்மரத் தோப்பில் படுத்துக் கொண்டிருந்தபோது புத்தர் மறைந்தார்.

"அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது.
நிலையாமை உடையவாழ்வு கடினமாகும்.
நிலையான உண்மையினை உணர்தல் கடினம்.
அரிதரிது புத்தருடைய அரிய தோற்றம்".

தம்மபதம் 182(2).

அத்தியாயம் 3

தம்மம்

புத்தரின் போதனைகள் '**தம்மம்**' என்று வழங்கப்படுகின்றன. தம்மம் 'திபிடகங்களாக'த் தொகுக்கப்பட்டுள்ளன.

திபிடகங்கள் மூன்று முக்கியப் பகுதிகளாகப் பகுப்பட்டுள்ளன.

1. பேருரைப் பகுதி **(சுத்த பிடகம்)**
2. நன்னடத்தைப் பகுதி **(விநய பிடகம்)**
3. உன்னதக் கோட்பாட்டுப் பகுதி **(அபிதம்மபிடகம்),**

மேற்கண்ட ஒவ்வொரு பகுதியும் பற்பல உட்பிரிவுகள் கொண்டதாக உள்ளது. (3 & 4). புத்தகங்கள் என்னும் வகையில் திபிடகம் மொத்த எண்ணிக்கையில் முப்பத்தொன்றாக உள்ளது.

பேருரைப் பகுதி (சுத்த பிடகம்)

இப்பகுதி பிக்குகளுக்கும் இல்லறத்தார்க்கும் பல்வேறு சமயங்களில் வழங்கப்பட்ட பேருரைகளைக் கொண்டுள்ளது. இவைகள் ஒழுக்கம், நன்னெறி, சமூகக் கடமைகள், மற்றும் அன்றாட பிரச்னைகளைப் பற்றிய பேருரைகளாகும்.

சுத்த பிடகம் அய்ந்து தொகுப்புக்கள் அல்லது நிகாயங்களைக் கொண்டதாகும்.

அவைகளாவன:

அ) நீண்ட பேருரைகள் **(தீக நிகாயம்)**

ஆ) இடைப்பட்ட அளவு பேருரைகள் **(மஜ்ஜிம நிகாயம்),**

இ) உறவுடைக் கூற்றுகள் **(சம்யுத்த நிகாயம்)**

ஈ) படிப்படியான உரைகள் **(அங்குத்தர நிகாயம்)**

உ) சிற்றுரைத் தொகுப்பு **(குத்தக நிகாயம்)**

சிற்றுரைத் தொகுப்பு மட்டுமே **(குத்தக நிகாயம்)** பதினைந்து நூற்களையுடையதாய் உள்ளது. அவற்றில் நன்கறியப்பட்டதாய் உள்ளவை **தம்மபதம்** (தம்ம வழி) மற்றும் **சுத்த நிபாதம்** (தொகுக்கப்பட்ட போதனைகள்) என வழங்கப்படுகின்றன. (3.4)

மிகப்பிரபலமான நூல்களில் ஒன்றாக **தம்மபதம்** விளங்குகிறது இது எல்லாச் சமயங்களுக்கும் ஏற்ற அறிவுரை இரத்தினங்கள் நிறைந்த, மிகவும் போற்றத்தக்க, தொடர்ந்து பயிலத்தக்க நூலாக விளங்குகின்றது.

"இவையாவும் புத்தரின் கூற்றுக்கள்.
அவர் குரல் கேட்டதாய் உணருங்கள்.
ஒருமுறை படித்திதை ஒதுக்காதீர்.
ஒவ்வொரு நாளும் பயிலுங்கள்."

(டாக்டர் ஓமெயோன்சா எம்.டி.எப்.ஆர்.சி.பி தம்மபதம் பற்றி எழுதியது)

2. நன்னடத்தை பற்றிய பகுதி **(விநயபிடகம்):** பிக்குகள், பிக்குணிகள் ஆகியோர்க்கான நடத்தை விதி முறைகளை விளக்குவதாகும். இது அய்ந்து நூற்களாக உள்ளது. (3,4)

3. உன்னதக் கோட்டுப்பாட்டுப் பகுதி **(அபிதம்ம பிடகம்)** உன்னதமான தத்துவங்களை விளக்குவதாகும். இது ஏழு நூற்களை உடையது. (3,4)

பகவன் புத்தரின் போதனைப் பேருரைகள், கேட்ட ஒவ்வொருவர்க்கும் மகிழ்வூட்டின. அடிக்கடி அவர்கள் வியந்து கூறினர்.

"அற்புதம்! அய்யன்மீர்! அற்புதம்! அய்யன்மீர்! வீழ்ச்சியுள்ளதை ஒருவன் எழுப்பி நிற்கவைத்தது போலவும், மறைக்கப்பட்டதை வெளிக்கொணர்தல் போலவும், வழிதவறிய ஒருவர்க்கு வழிகாட்டுதல் போலவும், இருளில் ஒளிவிளக்கை ஏந்துவது போலவும், இவ்வாறாகத் கண்ணுள யாவரும் காணத்தக்கதாய் உள்ளது உம்முரை" (2).

"உயர்வெய்திய புத்தரால் தம்மம்
நன்குரைக்கப்பட்டது - அது
இப்போதே இங்கேயே
செயற்படுத்தத் தக்கது.
வாரீர்!வாரீர்! என்றழைத்து யாவரும்
வந்து காணச் சொல்வது.
அறிவுற்றோர்கள் அனைவரும்
அறிந்து ஏற்கத் தக்கது" (5).

அத்தியாயம் 4

சில அடிப்படை போதனைகள்

புத்தர் வழங்கிய செய்திகள் அனைத்தும் முறைமையும், விஞ்ஞானத் தன்மையும் உடையவை - அவற்றில் அதிசயங்களுக்கும் விசித்திரங்களுக்கும் இடமில்லை. அவருடைய போதனைகள் கீழ்க்கண்ட கூறுகளை உள்ளடக்கியனவாக உள்ளன.

1. நான்கு உன்னத உண்மைகள்
2. உன்னதமான எண்வழிப் பாதை
3. உயிர்க்கூறு பகுப்பு ஆய்வு (அய்ந்து கூட்டுப் பொருள்கள்)
4. இருப்பின் உண்மை நிலை (முப்படி நிலை)
5. படைப்புக் கடவுள் இல்லை.
6. சார்புநிலைத் தோற்றுவாய்.
7. கம்மம்
8. மீளாக்கம் (மறு உயிர்ப்பு)
9. நிப்பாணம்
10. உயர்ந்த ஒழுக்கக் கோட்பாடும், உன்னத நன்னெறியும்.

" பவுத்தமோ, பவுத்தமல்லாததோ ஆன உலகப் பெரிய சமய-முறைகள் ஒவ்வொன்றையும் நான் ஆராய்ந்துள்ளேன். அவை எவற்றிலும், புத்தரின் உன்னத எண்வழிப்பாதை மற்றும் நாற்பெரும் வாய்மைகளை விஞ்சிய அழகும் இயைபுமுள்ள எதையும் நான் காணவில்லை".

– பேராசிரியர் டி.டபில்யூ. ரைஸ் – டேவிட்ஸ் (6)

"உலகம்; எக்காலத்திலும் அறிந்துள்ள
ஒழுக்கக் கோட்பாடுகளில் முழுநிறைவானது
புத்தரின் கோட்பாடேயாகும்."

– பேராசிரியர் மாக்ஸ் முல்லர் (6)

வாழ்வின் துன்பமயமான பகுதியைப் பவுத்தம் ஒருபோதும் மறைத்துக் காட்டுவதில்லை. மாறாக அது உண்மை நிலையைக் காட்டுவதோடு, அனைத்துத் தொல்லைகளையும் வெல்லுவது எப்படியென்றும் வழி காட்டுவதாயுள்ளது.

" ஒரு காரணத்தினின்று எழும் அனைத்திற்கும்
உரிய காரணம்தனை உரைத்தார் புத்தர்.
உரிய வழியினில் அவற்றை விலக்கவும்
உயர்போதனை அளித்தபெரும் துறவியவர்"

- (அஸ்ஸஜி)

புத்தரின் போதனைகள் கற்கத் தக்கன ; பயிலத் தக்கன ; உணரத் தக்கன. நடைமுறைப்படுத்தலும், உணர்தலும் வலியுறுத்தப் படுகின்றன. ஏனெனில் அவைகள் உடனுக்குடன் பயனளிக்கின்றன.

எந்தப் போதகரும், அவர் எத்துணை பேரறிவும் பெருங்கருணையும் உடையவர் ஆயினும், கற்கவும், நடைமுறைப் படுத்தவும் மறுப்போர்க்கு அவரால் உதவ இயலாது. புத்தர் உரைத்தார்.

" உனக்கு நீயே முயற்சிக்க வேண்டும்,
புத்தர்கள் உனக்குப் போதகர் மட்டுமே".

"என் போதனைகளை யாரொருவர் நன்கு
நடைமுறைப் படுத்துகிறாரோ அவரே நன்கு
என்னைப் பெருமைப் படுத்துபவராகிறார்.
தம்மத்தைக் காண்பவர் எவரோ அவரே
என்னைக் கண்டவர்."

புத்தரின் போதனைகள் **(தம்மம்)** கீழ்க்கண்டவாறு போற்றப்படுகின்றன.

" தொடக்கத்தில் புகழ்மிக்கது.
தொடர்ச்சியில் புகழ்மிக்கது.
முடிவினில் புகழ்மிக்கது."

அத்தியாயம் 5

நான்கு உன்னத வாய்மைகள்

பவுத்தத்தின் படி ஈண்டு நான்கு உன்னத வாய்மைகள் உள்ளன. இந்த வாய்மைகள் காலத்தால் மாறுவனவோ, மாற்றப்படக் கூடியனவோ அன்று. அவையாவன-

வாய்மை 1 - 'துக்கம்' வாழ்வில் உள்ளது. (துக்கம்)

வாய்மை 2 - 'துக்கத்திற்குக்' காரணம் உள்ளது.
(துக்க சமுதயம்)

வாய்மை 3 - 'துக்கம்' ஒழிக்கப்படக் கூடியது. (துக்க நிரோதம்)

வாய்மை 4 - 'துக்கத்தை' ஒழிக்க வழி உள்ளது.
(துக்க நிரோத காமனீ படிபதா)

'துக்கம்' என்பது, திருப்தியற்ற வாழ்நிலை, மகிழ்ச்சியின்மை, இயைபின்மை, ஆதங்கம், பரபரப்பு, கவலை ஆகிய பொறுக்கமுடியா துன்பங்களைக் குறிக்கும்.

1. முதல் உன்னத வாய்மை - வாழ்வில் துக்கம் உள்ளது. (துக்கம்)

தனி மனிதர்க்கு மகிழ்ச்சியின்மை பலவழிகளில் வருகின்றது - 1) பிறப்பு, 2) முதுமை, 3) பிணி, 4) இறப்பு, 5) துன்பமானவற்றோடு தொடர்பு, 6) இன்பமானவற்றோடு பிரிவு,7) விழையும் ஒன்றைப் பெற இயலாமை, 8) பல்வகையான உடல்துன்பங்கள், மற்றும் உள்ளத் துன்பங்கள், 9) பற்றோடு தொடர்புற்ற அய்ந்து கூட்டுப் பொருள்கள் அனைத்தும் துன்பங்களே (அத்தியாயம் 7).

துக்கத்தைக் கண்டறிதலும் மூவகைப்படுகிறது.

அ) அனைத்து உடலியல், மனவியல் பிணிகள் = துன்பத்திற்குக் காரணமாகின்றன.

ஆ) மாறும் சூழ்நிலைகள் - இயைபின்மையை விளைவிக்கின்றன.

இ) தனி நபர்க்குரியதான நிலையாமை - அது மகிழ்வின்மையை உண்டாக்குகிறது.

'துக்கத்தைப்' புரிந்து கொள்ளுதல் விரக்தியடைதல் அன்று. அது உண்மை நிலையை உய்த்துணர்வதேயாகும்.

2. இரண்டாவது உன்னத வாய்மை – துக்கத்திற்கு ஒரு காரணம் உண்டு. (துக்க சமுதயம்)

வாழ்வில் துக்கத்திற்கு அல்லது மகிழ்ச்சியின்மைக்குக் காரணம் 'அவா' அல்லது 'தன்னை மையப்படுத்திய ஆசை'யேயாகும். அவா தன்னைப் பல வழிகளில் வெளிப்படுத்திக் கொள்ளும் பேராசை, தன்னலம், ஆசை, பற்று, பாசம், அன்பு முலானவைகயாக.

பொதுவாக மூன்று வகை அவாக்கள் உண்டு -

1) புலனின்பங்களுக்கான அவா **(காம தண்ஹா)**

2) இருத்தலுக்கான அவா (அமரத்வமாய் வாழ அவா) **(பவ தண்ஹா)**

3) இல்லாதிருக்க அவா (அழிந்துவிட அவா) **(விபவதண்ஹா)**

'அவா'வோடு இணைந்தது 'அறியாமை' -இருப்பின் உண்மை நிலையை அறியாமை – இது துன்பத்திற்கு வழி நடத்துகிறது.

அவாவுறுதல் மகிழ்ச்சியின்மையை எவ்வாறு உண்டாக்குகிறது? ஓர் எடுத்துக்காட்டு இதை விளக்க உதவும்: – ஒருவன் அனைத்து நல்ல பொருள்களுமுள்ள கடைக்குள் நுழைந்து, ஆங்குள்ள பொருள்கள் அனைத்தையும் விரும்புவானாயின், அவன் அந்தக் கடையை விட்டுச் செல்லும்போது, தான் வாங்கிய பொருள்களால் கூட மகிழ்ச்சியின்மையையே அடைகிறான். ஒருவன் எல்லாப் பொருள்கள் மீதும் ஆசைப்படாவிடில், ஆங்கு மகிழ்ச்சியின்மைக்கே இடமில்லை.

உலகியல் இன்பங்களின்பால் உள்ள ஆசை தீராத ஆசை

"பொன்னாலான மலையே யாயினும்
பொன்னால் மட்டுமே ஆனதே யாயினும்
ஒருவனுக்கஃது அளிக்கப்படுமெனில்
அப்போதும் அவன்
போதும் என்று புகலவே மாட்டான்",

இதுதான் பெரும்பாலான மனிதர்களின் இயல்பு.

"அவாவினின்று எழுகிறது துன்பம்.
அவாவினின்று எழுகிறது அச்சம்"

- தம்மபதம் 213

3. மூன்றாவது உன்னத வாய்மை – துக்கம் ஒழியக் கூடியதே. (துக்க நிரோதம்)

மிக்குயர்ந்த இன்பநிலை ஒன்று உள்ளது - துக்கம் நீங்கிய அந்நிலையே **நிப்பாண** நிலை. (அத்தியாயம் 17).

நிப்பாணம் என்பது அனைத்துக் கவலைகளிலிருந்தும் விடுபடுதல் அல்லது உயர்வுறுதல் - கவலைகள், தொல்லைகள், துன்பங்கள், துயரங்கள் அனைத்தினின்றும் விடுபடுதல். எடுத்துக்காட்டாக, ஒருவன் அரிப்பினால் அவதிப்படுகையில், அதைச் சொறிந்து கொள்வது தற்காலிக ஆறுதல் தரலாம். இருப்பினும், அந்த அரிப்பு முழுமையாய்க் குணப்படுத்தப்பட்டுவிடுமாயின் மட்டுமே, சொறிவதற்கவசியம் இல்லாமலே, அவன் உண்மையில் மகிழ்ச்சியடைய முடியும். அதேபோல் எல்லாவகையான துன்பங்களில் இருந்தும் விடுபடுதலே பேரின்பமாகும்.

ஈண்டு, பிறத்தல், முதுமையடைதல், பிணியுறுதல், பல்வகை ஏமாற்றங்களை எதிர்கொள்ளுதல்,இறத்தல், மீண்டும் பிறத்தல் ஆகிய துன்பங்கள் தொடர்கின்றன- இந்தத் துயருறு நிலையிலிருந்து விடுபட ஒரு வழி உள்ளது. நான்காவது உன்னதவாய்மையை வளர்ப்பதன் மூலம் மூன்றாவது வாய்மையை உணரமுடியும்.

" எவரொருவர் அவாவை அறவே அறுத்தவரோ
அவருக்கு இல்லை துன்பமும் தொல்லையும்".

-தம்மபதம் 213.

4. நான்காவது உன்னத வாய்மை – துக்கத்தை ஒழிக்கத்தக்க வழி ஒன்று உள்ளது. (துக்க நிரோத காமனீ படிபதா)

இந்த வழி உன்னதமான எண்வழிப்பாதை என வழங்கப்படுகிறது. இது தீவிர நிலைகளைத் தவிர்ப்பதனால் இடைநிலை வழி எனவும் அறியப்படுகிறது- தன்னை வருத்திக்கொள்ளும் தவநிலை, மற்றும் தீவிரமான இன்ப நுகர்ச்சி

நிலை ஆகியவையே தீவிர நிலைகள். (பண்டைக் காலத்தில் நடைமுறையிலிருந்த சமய முறைகள் இவை).

புத்தரால் போதிக்கப்பட்ட உன்னத எண்வழிப்பாதை அமைதிக்கும், உள்நோக்கிற்கும், பூரணஞானத்திற்கும், உன்னத இன்பத்திற்கும் வழிகோலுவதாயுள்ளது. (இது 6ம் அத்தியாயத்தில் விளக்கப் படுகிறது.)

பவுத்தம் ஒரு சிகிச்சையைப் போன்றது:

துக்கம் - அனைத்து உயிர்களையும் பாதிக்கும் பிணி.
அவா - அப்பிணியை விளைவிக்கும் காரணம்.
நிப்பாணம் - பிணி தீர்ந்த நிலை.
உன்னத எண்வழிப்பாதை- பிணிதீர்ந்திட ஏற்ற மருந்து.

பவுத்தம் துக்கத்தைப்பற்றிப் (மகிழ்ச்சியின்மை, துன்பம்) பேசுகிறது. எனவே பவுத்தம் விரக்தித் தத்துவமா? புத்தர் துக்கத்தைப்பற்றி மட்டும் பேசியிருப்பாரேயாயின், அவரைவிரக்தித் தத்துவவாதி என அழைக்கலாம். ஆனால் புத்தர் துக்கமற்ற நிலையை - பேரின்ப நிலையயை - நிப்பாணத்தைப்பற்றிப் பேசியுள்ளாரே. எனவே புத்தர் ஒரு நல்லெண்ண நோக்கர் என்றே கருதப்படவேண்டும். உண்மையில் புத்தர், வாழ்வின் உண்மை இருப்பு நிலையையும், பேரின்ப நிலையை அடையச் சரியான வழியையும் காட்டியள்ளார்.

வாய்மைகளில் சிறந்தவை - நான்கு உன்னத வாய்மைகளே.
வழிகளில் சிறந்தவை - உன்னதஎண்வழிப்பாதைகளே.
நிலைகளில் சிறந்தது - நிப்பாண நிலையே.
மனிதரிற்சிறந்தவர் - இவற்றைக்காண்பவரே

—தம்மபதம் 273

"அறிவுடையோன் எப்போதும் இன்புறுகிறான்.
தனக்குள் முழுமையாய்ச் சுதந்திரம் அடைகிறான்.
புலனாசைகளால் அவன் கறைப்படுவதில்லை.
பற்றற்றவனவன் பாதிப்புறுவதில்லை!

—சம்யுத்த நிகாயம்.

அத்தியாயம் 6

உன்னத எண்வழிப்பாதை

உன்னத எண்வழிப்பாதையே நான்காவது உன்னத வாய்மையாகும். அது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைப் படுத்தப்படவேண்டிய எண் வழிகளைக்கொண்டது. அவையாவன:

1. நல்லுணர்வு	- சம்மா திட்டி	}	மெய்யறிவு (பஞ்ஞா)
2. நல்நினைவு	- சம்மா சம்கப்ப		
3. நல்லுரை	- சம்மா வாச்சா		
4. நற்செயல்	- சம்மா கம்மந்த	}	நல்லொழுக்கம் (சீல)
5. நல்லூதியம்	- சம்மா ஆஜீவ		
6. நன்முயற்சி	- சம்மா வாயாம		
7. நல்லூற்றம்	- சம்மா சதி	}	நற்சமாதி (சமாதி)
8. நற்சமாதி	- சம்மா சமாதி		

நல்லுணர்வு என்பது யாது?

இது நான்கு உன்னத வாய்மைகளை உணர்தலாகும். நான்கு உன்னதவாய்மைகளை அறிவது மட்டும் போதாது- அவற்றை மெய்ம்மையாய் உணர்ந்தேற்றல் வேண்டும். மெய்யான உள்ளுணர்வைப் பெற மனம் மாசற்றதாயிருக்க வேண்டும்.

தெளிந்த மனத்தோடு மட்டுமே உள்ளதை உள்ளவாறு காணமுடியும்- தோற்றத்தைக் கொண்டு தவறான புரிதல் கொள்ளாதிருக்கமுடியும். ஒவ்வொருவரும் வாழ்வின் மெய்ம்மை நிலையை உணரவேண்டும். நிலையாமை (**அநிச்சா**), திருப்தியின்மை (**துக்கம்**) மற்றும் ஆன்மாஇன்மை (**அநத்தா**) (அத்தியாயங்கள் 8& 9).

நல்நினைவு என்பது யாது?

இது நல்நினைவுகளை வளப்படுத்துதலும் தீய நினைவுகளை நீக்குவதும் ஆகும். நல்லெண்ணங்கள்-வளப்படுத்தப்படவேண்டிய சரியான சிந்தனைகளாவன-

அ) அன்புறு நேயம் - அனைத்துயிர்களிடத்தும்.

ஆ) கருணை-அனைத்துயிர்களிடத்தும்.

இ) தன்னலமின்மை.

மேற்காணும் நற்சிந்தனைகளை வளப்படுத்துகையில், பேராசை, தன்னலம், வெறுப்பு, சினம்,தீயவிருப்பு, கொடுமை, பழிதீர்த்தல் போன்ற தீய எண்ணங்களிலிருந்து விடுபட வேண்டும்.

நல்லுரை என்பது யாது ?

இது கீழ்க்கண்டவற்றிலிருந்து தவிர்ந்திருத்தல் ஆகும்.

அ) பொய்யுரை புகலல்.

ஆ) புறங்கூறல்.

இ) இன்னாச் சொல் உரைத்தல்.

ஈ) பயனில் சொல் உரைத்தல்.

முழு நிறைவான இனிய சொற்களை 1) அவசியம், 2) மெய்ம்மை, 3) இனிமை, 4) பயன், 5) கனிவு ஆகியவற்றுடன் உரைத்திடல் வேண்டும்.

பிறர்தம் நன்மைக்கும், இன்பத்திற்கும் துணையாகாதெனின் உண்மை கூட உரைக்கப்படாமை நன்று.

நற்செயல் என்பது யாது?

இது கீழ்க்கண்டவற்றிலிருந்து தவிர்ந்திடுதல் ஆகும்-

அ) கொல்லுதல் அல்லது துன்புறுத்தல் - உயிர்கள் எதையும்

ஆ) பிறர் பொருள் கவறல் அல்லது நேர்மையின்மை

இ) பிழையுறு காமம் அல்லது புலன்களைத் தீயவழியில் செலுத்துதல்.

நன்னெறிச் செயல்கள் வளப்படுத்தப்பட, 1) உயிர்கள் யாவினுக்கும் அன்பும் நேயமும் காட்டல், 2) பிறர்தம் உடைமைக்கு உரிய மதிப்பளித்தல், 3) நல்லொழுக்கநெறிநின்று புலன்களைக் கட்டுப்படுத்தல் ஆகியவற்றைக் கைக்கொள்ள வேண்டும்.

நல்லூதியம் என்பது யாது?

பிறர் எவர்க்கும் தொல்லைதராத தொழில்களில் ஈடுபட்டுப் பொருள் ஈட்டுதலே இது. கீழ்க்கண்ட அய்ந்து வகைத் தொழில்கள் கைவிடப்பட வேண்டும்: அ) அடிமை வணிகம்; ஆ) இறைச்சி வணிகம் - உயிர்களை வளர்த்துக் கொல்லுதல்; இ) ஆயுத வணிகம்;

ஈ) போதைப் பொருள் வணிகம்; உ) விஷப் பொருள் வணிகம்; ஆகியவற்றில் ஈடுபடலாகாது.

ஈடுபடத்தக்க நற்தொழில்களாவன :-

அ) உழவு; ஆ) கால்நடைவளர்ப்பு-பால், தயிர், வெண்ணெய், நெய் வணிகம்; இ) வணிகம்; ஈ) ஆலைத் தொழில்; உ) அரசுப்பணிகள்.

நன்முயற்சி என்பது யாது?

நன்முயற்சி நால்வகைப்பட்டதாகும். அதாவது :

1) தீய நிலைகள் எழுவதைத் தடுத்தல்.

2) முன்னமே முளைத்த தீய நிலைகளை ஒழித்தல்.

3) நன்னிலைகளை எழுப்புதல்.

4) முன்னமே முளைத்த நன்னிலைகளை வளப்படுத்தல்.

நல்லூற்றம் என்பது யாது?

அ) உடலின் செயற்பாடுகள்; ஆ) மனத்தின் செயற்பாடுகள் - உணர்ச்சிகள், சிந்தனைகள், மற்றும் மனநோக்குங்கள் ஆகியவற்றைப் பற்றிய விழிப்புணர்வும், இடையறா ஊக்கமும் உடைய தன்மையே நல் லூற்றம் என்பதாகும்.

மனத்தின் விழிப்புணர்ச்சி தவறான கருதுதல்களை அறியவும் ஒழிக்கவும் உதவும். அதாவது பொருள்கள் அவாவத்தக்கவை - அவை இன்பமளிக்கக் கூடியவை - அழிவற்றவை, நிலையானவை என்னும் தவறான கருதுதல்களை ஒழிக்க உதவும்.

நற்சமாதி என்பது யாது?

இது மனத்தை ஒருமுகப்படுத்தி வளப்படுத்தலும், மனம் சலனப்படுவதைத் தவிர்த்தலும் ஆகும். மிக்குயர்ந்த நிலையுடைய மன ஒருமுகப்படுத்தல், உள்ளதை உள்ளவாறு நன்குணர வழிவகுக்கும். மன ஒருமுகப்படுத்தலென்னும் நற்சமாதி தியானப் பயிற்சியால் கைகூடுவதாகும்.

1) நல் லுரை, நற்செயல், நல் லூதியம் ஆகியவை ஒருவரை நல்லொழுக்கமுடையவராக்கும்.

2) நன்முயற்சி, நல்லூற்றம், நற்கவனம் ஆகியவை ஒருவரை மன ஒருமையும், மனக்கட்டுப்பாடும் உடையவராக்கும்.

3) நல்லெண்ணமும், நல்லுணர்வும் ஒருவர்க்கு மெய்யறிவை உண்டாக்கும்.

இந்த எண்கூறுகளும் ஒன்றையொன்று சார்ந்து நிற்பவைகளும், ஒன்றுக்கொன்று ஆதாரமானவைகளும் ஆகும். ஒருவர் ஒழுக்க சீலராயின் (நன்னெறி) நற்கவனம் எளிதாகி, அது மெய்யறிவு பெறவும் உள்ளதை உள்ளவாறு காணவும் உதவுகிறது - இது **நிப்பாணம்** அல்லது மிக்குயர் பேரின்பத்திற்கு வழிவகுக்கிறது.

நன்னெறி யாண்டுளதோ - ஆங்கு மெய்யறிவு உள்ளது.
மெய்யறிவு யாண்டுளதோ - ஆங்கு நன்னெறி உள்ளது.

உள்ளதை உள்ளவாறு அறிதல் எங்ஙனம் இன்பத்தைக் கொணர்கிறது? ஓர் எடுத்துக்காட்டு இதை விளக்க உதவும்:- ஒருவர் ஒரு கயிற்றைக் கண்டு பாம்பென எண்ணிக் கொண்டால் - ஆங்கு அச்சம், சலனம், கவலை, துன்பம் அனைத்தும் தோன்றுகிறது. இருப்பினும், அது உண்மையில் ஒரு துண்டுக் கயிறே என்று அவர் அறியமுற்படின், ஆங்கு அச்சம், சலனம், கவலை, துன்பம் ஆகிய ஏதும் இல்லை. மாறாக மகிழ்ச்சியும், நம்பிக்கையுமே நிலவும். இவ்வாறாக, உள்ளதை உள்ளவாறு உணர்தல் பெரும் இன்பதைக் கொணர்கிறது.

"மீண்டும் மீண்டும் பிறப்பதோ இறப்பதோ?
மீண்டும் மீண்டும் சவக்குழி புகுவதோ?
தெள்ளிய பார்வையும் தேறிய பாதையும்
நிப்பாணம் உய்விக்கும். பிறப்பினை அறுக்கும்".

(சம்யுத்த நிகாயம் 7–2.2).

அத்தியாயம் 7

மனித ஆளுமையின் பகுப்பாய்வு

அய்ந்து கூட்டுப் பொருள்கள்

ஒரு தனிமனிதர் மனம், உடல் ஆகியவற்றின் சேர்க்கையாக உள்ளார் (நாம - ரூபம்). மனமும் உடலும் ஒன்று, ஆளுமைப் படுத்துகின்றன - ஒன்றோடொன்று உட்தொடர் புடையனவாய் உள்ளன.

மனம் உடலைச் சார்ந்துள்ளது.
உடல் மனத்தைச் சார்ந்துள்ளது.

ஈண்டு ஆறு செயல்திறன்கள் (தொடர்பின் அடிப்படைகள் அல்லது புலன்வாயில்கள்) வாயிலாக மனிதன் உலகோடு தொடர்பு கொள்கிறான். அவையாவன: 1. கண்கள், 2. காதுகள், 3. மூக்கு, 4. நாக்கு, 5. உடல் மற்றும் 6. மனம். ஈண்டு மனம் என்பது (புலனுணர்வின் அடிப்படையான) செயல்திறனாகக் கருதப்படுகிறது. மற்றவை 'உடலில்' உள்ளன.

மேலும் தொடரும் பகுப்பாய்வுகள் காட்டுவது யாதெனின்: உடல் திடம், திரவம், வெப்பம் அல்லது இயக்கம் ஆகிய தன்மைகளுடைய பொருள்களின் சேர்க்கையாக உள்ளது. எடுத்துக்காட்டாக பற்கள், எலும்புகள், நகங்கள் ஆகியவை கடினமான திடப்பொருள்கள். பித்தநீர், சளி, இரத்தம் ஆகியவை திரவப்பொருள்கள். இதமான வெப்பம், கடும்வெப்பம், குளிர் ஆகியவற்றிலிருந்து வேறுபட்டது. அசைவு, காற்று ஆகியவற்றால் இயக்கம் நிகழ்கிறது.

மனம் நினைப்பு நிலைகளால் உருவாகியுள்ளது:-

1) புலனுணர்ச்சிகள், 2) உணர்வுகள், 3) மனஉருவாக்கங்கள், 4) தன்னுணர்வு.

1) புலனுணர்ச்சிகள் - கண்கள், காதுகள், மூக்கு, நாக்கு, உடல் மனம் ஆகியவற்றின் தொடர்பால் ஏற்படும் உணர்ச்சிகள்.

இது பொருள்களை நுகர்வதாகும்.

2) உணர்வுகள் - பொருகளை அறியவும் வகைப்படுத்தவுமான ஆற்றல் - பார்வை, ஒலி, வாசம், சுவை ஆகிய உடலியல் பதிவுகள் அல்லது எண்ணங்கள்.

3) மன உருவாக்கங்கள் விருப்புறு செயல்கள் அல்லது ஆறு செயல்திறன்களால் உருவாகும் நிகழ்வுகள்.

4) எந்த ஒரு செயல்திறனுக்குமான பிரதிபலிப்பே தன்னுணர்வாகும். தன்னுணர்வு ஆறு வகைப்படும் -

i) கண்ணின் தன்னுணர்வு
ii) காதின் தன்னுணர்வு
iii) மூக்கின் தன்னுணர்வு
iii) நாவின் தன்னுணர்வு
V) ஸ்பரிசத் தன்னுணர்வு
Vi) மனத்தின் தன்னுணர்வு

மேற்கூறப்பட்ட அனைத்து மனநிலைகளும் சூழல்களால் தோன்றுபவை - சூழல்களோடு மறைபவை. எனவே, அவைகள் நிலையற்றவைகளாகும்.

இவ்வாறாக, பவுத்தத்தின்படி ஒரு 'மனிதர்'. ஒரு 'தனி மனிதர்' அல்லது 'நான்' என்பது அய்ந்து கூட்டுப்பொருள்களின் சேர்க்கை அல்லது குழுக்களின் (கந்தங்கள்) சேர்க்கையாகும்.

அவைகளாவன -

1. உடல் (**ரூபம்**)	
2. புலன் உணர்ச்சிகள் (**வேதனா**)	
3. உணர்வுகள் (**சஞ்ஞா**)	மனம் (நாம)
4. மன உருவாக்கம் (**சங்காரா**)	
5. தன்னுணர்வு (**விஞ்ஞானம்**)	

மேற்கண்ட ஒவ்வொரு சேர்க்கையும் இடையறாமல் மாறிக் கொண்டுள்ளது. உடலும், மனமும் எப்போதும் மாறிக் கொண்டுள்ளது. எனவே, ஒரு மனிதர் அல்லது தனிமனிதர் என்பது மாறுதலுக்குட்படும் ஓர் இருப்பு நிலையாகும். எவரிடத்திலும், 'நான்', 'தான்', 'ஆன்மா'என வழங்கத்தக்க நிலையான பொருள் ஏதுமில்லை.

'நான்', 'தான்' என்னும் சொற்களெல்லாம் கருத்துத் தொடர்புக்காகப் பயன்படுத்தப்படும் பழக்கச் சொற்களேயாகும்.

> *"பாகங்கள் யாவும் உரியபடி பிணைக்கப்பட்டபின்*
> *'தேரெனும்' சொல்லால் குறிக்கப்படும் அது (தேர்).*
> *கூட்டுப் பொருள்கள் சேர்ந்து இருக்கையில்*
> *மனிதனென அழைக்கப்படுவது வழக்கமே".*

—சம்யுத்த நிகாயம் 5.10

பவுத்தம் 'தான்'; 'நான்' என்பனவற்றை ஒரு மாறுபாடடையும் முறைமையாகக் கொள்கிறதேயன்றி, நிலைத்த தன்மைகள் உடையனவாய்க் கொள்வதில்லை. ஒரு மனிதரின் இருப்பு என்பது உண்மையில் படிப்படியாய் நிகழும் மாற்றமாகவே உள்ளது - ஒரு நிலை உறுவதும் - அந்நிலை நீங்குவதுமாகவே உள்ளது. நாம் நம் வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் பிறந்து, இறந்து, மீண்டும் பிறந்து..... இவ்வாறே தொடர்கிறோம். எடுத்துக்காட்டாக:

1) ஒரு 12 வயதுக்குழந்தை, அது 12 வருடங்களுக்கு முன் இருந்த நிலையில் இல்லை. அது பெரியவனான பின், அது கைக்குழந்தையுமன்று, சிறுகுழந்தையுமன்று, முற்றிலும் வேறானதுமன்று. இருந்தும் அது யாரென அறியத்தக்கதாகவே உள்ளது.

2) ஒரு மனிதன் 'தீ' அல்லது 'நதி' போன்றவன்.

அ) ஒரு மெழுகின் சுவாலை இரவெல்லாம் எரிகையில் அது அப்படியே இருப்பதுமில்லை - வேறாகிவிடுவதும் இல்லை - எனினும் அது அடையாளம் காணத்தக்கதாவே உள்ளது. ஆ) ஓடும் நதி அதுவாகவும் இல்லை. வேறாகவும் இல்லை- எனினும் அது அடையாளம் காணத் தக்கதாகவே உள்ளது.

வாழ்க்கை என்பது ஒரு தொடர்ச்சியான மாறுதலாகவே உள்ளது. எப்போதும் மாறிக் கொண்டுள்ள ஐந்து கூட்டுப்பொருள் சேர்க்கைகள் (மனமும், உடலும்) வசதியாக 'நான்' என வழங்கப்படுகின்றன. உண்மையில், உள்ளபடி, 'நான்' எனும் ஒன்று இல்லை. 'நான்' அல்லது 'தான்' இடையறாது மாறிக் கொண்டுள்ள வெறும் தோற்றமே.

'மக்களென் உடைமை', 'வளங்களென் உடைமை'
முட்டாள் மனிதன் முழங்குவான் இங்ஙனம்.
அவனே அவனுக்குரியவன் அன்றெனில்
மக்களா உடைமைகள்? வளங்களா உடைமைகள்?

-தம்மபதம் 62

அத்தியாயம் 8

இருப்பின் உண்மை நிலை

(மூன்று முத்திரைகள்)

இருப்பு நிலையின் மூன்று தன்மைகளாவன:-

1. நிலையாமை (**அனிச்சா**)
2. திருப்தியின்மை (**துக்கம்**)
3. ஆன்மா இன்மை (**அநத்தா**)

இம்மூன்றும் மூன்று முத்திரைகள் (திலக்கனா) என வழங்கப்படுகின்றன.

நிலையாமை (அனிச்சா)

பிரபஞ்சத்தில், மாறாததும், நிலையானதும், எப்போதும் ஒன்றாகவே இருப்பதுமான ஏதுமே இல்லையெனப் பவுத்தம் போதிக்கின்றது.

அனைத்துப் பொருள்களின் இயல்பாக நிலையாமை உள்ளது – அது மனிதராயினும், விலங்காயினும், வலிமைமிக்க 'தேவ'ராயினும் அல்லது வேறெதுவேயாயினும். இருப்பு நிலையுற்ற எதுவொன்றும் நீடித்திருக்க இயலாமல் இறுதியில் அழிந்தே தீரும்.

ஒவ்வொரு நிமிடமும்
ஒவ்வொரு மணியிலும்
ஒவ்வொரு பொருளும் - ஆம்
அனைத்துமே
மாறிக் கொண்டுள்ளது.

பவுத்தம் முதலாவதாக மனிதர்களையே பொருட்படுத்துகிறது – அது மனிதர்கள் (ஐந்து கூட்டுப்பொருள் சேர்க்கையாய் இருப்பவர்கள், அல்லது மனமும், உடலுமாய் இருப்பவர்கள்) இடையறாது மாறுதலுக்காட்படுகிறார்கள். (அத்தியாயம் 7)

அனைத்து பொருள்களும் தோற்றமும், மறைவும் உடையவை – அவை நிலையற்றவை.

*"ஊருக்குரிய விதியன்று. நகருக்கரிய விதியன்று.
இனத்திற்குரிய விதியன்று. குலத்திற்குரிய விதியன்று.
இம்மை மறுமை அனைத்துக்கும்
உரியவிதியே இதுவாகும். எதுவும் நிலையிலை என்பதுவே".* (7)

திருப்தியின்மை (துக்கம்)

இருப்பு நிலையின் மற்றொரு தன்மை திருப்தியற்ற நிலை - ஒருமையின்மை அல்லது துக்கமாகும். விரும்பத்தகா நிகழ்வுகள் நிகழ்வதும், பொறுக்க முடியாச் சுமைகளும், துன்பத்திற்கு, துயரத்திற்கு, வருத்தத்திற்கு, வேதனைக்குக் காரணமாகின்றன.

அனைத்து உயிர்களும் மகிழ்ச்சிக்குரியனவற்றைத் தேடுவதும், மகிழ்ச்சியற்றனவற்றை வெறுப்பதுமாய் உள்ளன. எல்லோரும் இன்பத்தை விரும்புகின்றனர். துன்பத்தை வெறுக்கின்றனர்.

இருப்பினும், மகிழ்ச்சி எப்போதைக்குமாய் நீடிப்பதில்லை - அவை நிலையற்றவை - மாறுதலுக்குரியவை. மகிழ்ச்சி முடிவுறுகையில், மகிழ்ச்சிக்குரியவை இல்லாமற்போகையில் ஒருவர் கடுமையும், வேதனையும் அடைகிறார். எனவே, வாழ்க்கையில் எப்போதும் ஒரு திருப்தியற்ற தன்மையும், ஒருமையின்மையும், மகிழ்ச்சியற்ற நிலையும், துக்கமும் உள்ளது.

'துக்கத்தின்' இருப்பை உணர்வது விரக்தித் தத்துவமன்று. அது வாழ்வின் இருப்பு நிலையான அடிப்படைத் தன்மையை உணரும் விழிப்புடைமையாகும்.

ஆன்மா இன்மை (அநத்தா)

இருப்பு நிலையின் மற்றொரு தன்மை 'ஆன்மா இன்மை' (அநத்தா) என்பதாகும். (அத்தியாயம் 9 காண்க).

"கருத்துக்களின் வலை"

'மீன் வலை' உவமை. இருப்பின் உண்மை நிலையை உணர்தல் கடினமானதாகும். ஏனெனில் நாம் சிலமுறைகளில் சிந்திப்பதை வழக்கமாய்க் கொண்டவர்களாகவும், சில குறிப்பிட்ட கருத்து நோக்கையே உடையவர்களாகவும் இருக்கிறோம். 'மீன்வலை' உவமை வாயிலாகப் புத்தர் காட்டுவது இதுவே:

மனிதர்கள் அவாவினுக்காட்பட்டு, தம் புலன்களை இன்புறச் செய்து, பல்வித கருத்து நோக்குகளுடையவராய், 'கருத்துக்களின் வலையில்' பிடிபட்டு விடுகின்றனர். (8)

"நன்கு திறனுடன் பின்னப்பட்ட வலை ஒரு சிறிய நீர்க்குட்டையின் விரிக்கப்படுகையில், அவ்வலையில் அனைத்து ஜீவன்களும் சிக்கிக்கொள்கின்றன. அவை எங்குள்ளனவோ, ஆங்காங்கே வலைக்குள் சிக்குகின்றன".

'கருத்துக்களின் வலையை' நல்லுணர்வின் மூலம் அறுத்தெறிவதன் வழிதான் ஒருவர் விடுதலைதரும் மெய்யறிவெய்தமுடியும்.

பொருள்கள் 'நிலையானவை' என்னும் கருத்தோடு நாம் பிணைந்து விடுகிறோம். அவை 'திருப்தியானவை', 'ஆன்மா உள்ளது' போன்ற கருத்துக்களாயுள்ளன. ஆனால் உண்மையோ, வேறாக உள்ளது. பொருள்கள் யாவும், நிலையற்றனவாய், திருப்தியற்றனவாய், ஆன்மா அற்றனவாய் உள்ளன.

'இல்லனவற்றை உள்ளனவென்றும்
உள்ளனவற்றை இல்லனவென்றும்
தவறிய கருத்தைப் பேணிடுவோர்கள்
உண்மையை என்றும் அடைவதேயில்லை'.

தம்மபதம் 11.

அத்தியாயம் 9

'ஆன்மா இல்லை'

ஆன்மா உண்டென்பதை பவுத்தம் மறுக்கிறது.

'ஆன்மா' என்னும் கருத்து ஓர் நிலையான உள்பொருள் உள்ளது என்னும் நம்பிக்கையிலிருந்து வருகிறது. அந்த உள்பொருள் எப்போதும் அழியாமல் நிலைத்திருக்கும் படைப்புக் கடவுளின் பகுதி அல்லது தெய்வீக சாராம்சமாய் ஒவ்வொரு மனிதர்க்குள்ளும் உள்ளது என நம்பப்படுகிறது.

ஒவ்வொரு மனிதனும் மனமும் உடலும் (விரிந்த பொருளில் அய்ந்து கூட்டுப்பொருள்களின் சேர்க்கையான) உடையவனவாய் உள்ளான். அவைகள் எப்போதும் மாறிக் கொண்டேயுள்ளன என்று காட்டுகிறது பவுத்தம். (அத்தியாயம் 7). எங்கு மாற்றம் உள்ளதோ அங்கு நிலையான உள்பொருளான அழிவில்லா ஆன்மா இருக்கவே இயலாது.

உடல் 'ஆன்மா-அற்றதாய்' உள்ளது (**அநத்தா**), ஆன்மா இரக்குமாயின், இந்த உடல் நிலையாமைக்காட்படாது - மாறுதலுக்கும் துன்பத்திற்கும் உட்பாது. உடல் ஆன்மா உடையதாயிருப்பின் 'அது இதுவாயிருக்கட்டும் அல்லது அதுவாயிருக்கட்டும்' என்பதற்கான வாய்ப்புடையதாயிருக்கும் (3)

அநத்தாலக்கணசுத்தத்தில் இதைப் புத்தகர் தெளிவாக விளக்குகிறார்.

> *"பிணியுறும் போதோ முதுமையுறும் போதோ*
> *உடல் உம்சொல்லைக் கேட்கிறதோ?"*
> *"இல்லை-இல்லை-அது கேட்பதில்லை"*
> *ஆணையிட்டுப் பிணியை ஒருவன் அகற்றவியலாது.*
> *ஆணையிட்டு முதுமையினைத் தடுக்கவியலாது.*
> *ஆணையிட்டு மரணத்தை நிறுத்தவியலாது.*
> *ஒவ்வொரு கணமும் மாறும் இவ்வுடலம்*
> *மாறா ஆன்மாவைப் பெற்றிருப்ப தெங்ஙனம்?*
> *அதனால் இயலாது.*

அதேபோல மனமும் ஆன்மா-அற்றதே. கணந்தோறும் மாறும் மனம் எங்ஙனம் மாறாத ஆன்மாவை உடையதாயிருக்க இயலும்? அதனால் இயலாது. புலனுணர்ச்சிகள், உணர்வுகள், மன

உருவாக்கங்கள் மற்றும் தன்னுணர்வு அனைத்துமே கணந்தோறும் மாறுபவை.

மனமும், உடலும் எப்போதும் மாறிக்கொண்டே இருப்பதனால் 'ஆன்மா எதுவும்' இருக்க இயலாது. ஒருவர் அனைத்தும் மாறிக் கொண்டேயிருக்கும் உண்மை நிலையை உணர்வாராயின், 'எனக்கு நானே' 'என்னுடையதே' என்றெல்லாம் எதுவும் இல்லை என்பது தெளிவாகும். உண்மையில் 'தான்' என்று ஒன்று இல்லை. வெறும் உரையாடல் வசதிக்காகவே 'தான்' எனும் சொல்லை நாம் பயன்படுத்துகிறோம்.

நம் மனங்கள் அவாவினால், அகந்தையால் தவறான கருத்துநோக்குகளால் மாசுற்றிருப்பதன் காரணமாக நாம் 'நான்', 'எனது' என்ற வகையில் சிந்திக்கிறோம்.

ஒருவர் 'இது என்னுடையது' என எண்ணும்போது, அது அவாவினால் உந்தப்பட்டதாயுள்ளது. (**தன்ஹா**)

ஒருவர் ' இது நான்' என எண்ணும் போது அது அகந்தையால் உந்தப்பட்டதாயுள்ளது. (***மானி***)

ஒருவர் 'இது நானே' என எண்ணும்போது அது தவறான கருத்து நோக்கால் உந்தப்பட்டதாயுள்ளது. (**திட்டி**)

உடையதாயிருத்தல் பற்றிய பவுத்தத்தின் வரையறை யாதெனில், ஏதேனும் 'எனதாய்' இருப்பின் அதனை நான் முழுக்கக் கட்டுப்படுத்தக் கூடியதாய் இருக்க வேண்டும். ஒருவர் 'இது என்னுடையது', 'இது நான்','இது நானே' என்று எண்ண விழைகிறாரேயன்றி, உண்மையில் எதுவும் ஒருவரின் முழுக்கட்டுப் பாட்டில் இல்லை.

> "***உண்மையில் வாழ்க்கை மிகச் சிறியதேயாம்.***
> ***ஒருவர் நூறாண்டுக்குள் மடிவது திண்ணம்.***
> ***உடைமைகள் யாவும் விட்டே செல்வர்.***
> ***எனினும் எண்ணுவர் 'இது எனதென்றே'***".

(**சுத்த நிபாதம் 4.6**)

நிலையற்றதாய், துன்பம் நிறைந்ததாய், மாறுதலுக்குரியதாய் உள்ள 'மனத்தையும், உடலையும்' 'இது நான்', 'இது எனது','இது நானே' என்றெல்லாம் எண்ணுவது நியாயமா? இல்லை.

'தான்','ஆன்மா', 'அகம்','நான்' அல்லது 'எனது' ஆகியவற்றிலான நம்பிக்கை நடைமுறையில் பாதுகாப்பின்மை, பதற்றம், அச்சம், ஆதங்கம், வேதனை ஆகியவற்றிற்கு வழிவகுக்கிறது.

'தான்', 'நான்', 'எனது' ஆகிய கருத்துக்கள்யின்மை ஆதங்கத்தை முடிவுக் கொண்டு வந்து, நலம், இன்பம் ஆகியவற்றைக் கொணர்கிறது. 'காட்டின் தாவரங்கள்' என்னும் உவமை இதை நன்கு விளக்குகிறது.

"ஏதேனும் புல்லோ, நாணலோ, மரத்தின் கிளைகளோ காட்டிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு எரிக்கப்பட்டால், ஒருவன் அதனால் பதறுவதில்லை - பாதிக்கப்படுவதில்லை - ஏனெனில், அவற்றின் மீது அவனுக்கு எந்தப் பற்றுமில்லை - அது அவனுடையதில்லை - அது ஒருவர்க்கும் உரியதில்லை". *(9)*

'தான்' எனும் கருத்தைக் கைவிடுவதே, நலத்தையும் இன்பத்தையும் கொணர்கிறது. பொருள்கள் 'எனதல்ல', 'எனக்குரியதல்ல' என்பதை அறிதலே வேதனையை நீக்குகிறது. 'தான்' என்பதே இல்லாதபோது அவாவுவதற்கு ஏதுமில்லை - அச்சமுமில்லை - துன்பமுமில்லை.

'தான் என்பது இல்லை' **(அநத்தா)** என்னும் போதனை புரிந்துக் கொள்ளக் கடினமானது. ஏனெனில் ஒருவன் 'நான்', 'எனது', 'நானே', 'என் ஆன்மா' என்றெல்லாம் கருதுவதற்குப் பலகாலமாய்ப் பழகியிருக்கிறான். இருப்பினும் 'தான்' போன்ற சொற்கள் 'தான் இல்லை' 'ஆன்மா இல்லை' என்ற உன்னதப் பொருளில் வழங்குதற்குப் பயன்படும் வசதிச் சொற்களேயாகும்.

"தானல்லாததைத் கண்டுணர்தல் கடினம்.

திண்ணமாய் இவ்வுண்மை தேறுதல் எளிதன்று .
அவாவினை அறவே அறுத்தவர் எவர்க்கும்
பற்றுகொள ஏதுமில்லை - அவர் மட்டும் அறிவார்". (10)

அத்தியாயம் 10

படைப்புக் கடவுள் இல்லை

எல்லாம்வல்ல படைப்புக் கடவுள் ஒருவர் உண்டு என்று பவுத்தம் நம்புவதில்லை. உலகைக் கடவுள் படைத்தார் எனக்கூறுவது, ஒருவரைக் கடவுளை யார் படைத்தார் எனக் கேட்கச் செய்யும்.

"படைப்புக் கடவுளின்றியே உலகம் இருக்கிறது"

– புத்தர்.

கடவுளே உலகையும் மனிதனையும் படைத்தார் என்னும் கருத்து ஒரு குருட்டு நம்பிக்கையும், பெற்று ஆரவாரக் கொள்கையும் ஆகும். "படைப்புக் கடவுளை எவரும் எப்போதும் கண்டதேயில்லை. வரிசையாய் நிற்கும் குருடர்கள், ஒவ்வொருவரும், தமக்கு முன் இருப்பவர் கூறுவதைத் திருப்பிக் கூறுவதுபோல் - தாமே காணாததை - வீணாய் வெற்றுரையாய்க் கூறுவதுபோல்தான் உள்ளது கடவுளை விவரிப்பவர்களின் கூற்றறும்". (11)

"நான் கடவுளை நேசிக்கிறேன்" எனக்கூறுவது, "நான் உலகிலேயே மிக அழகிய பெண்ணை நேசிக்கிறேன் - அவளைப்பற்றியோ, அவள் எங்கிருக்கிறாள் என்றோ எனக்கொன்றும் தெரியாது" - என்று கூறுவதைப் போல முட்டாள்தனமானப் பேச்சேயாகும்". (11)

பவுத்தர்கள் மற்ற மதங்களைக் கண்டிப்பதில்லை.

"தன்னுடைய மதத்தைப் பெருமைப்படுத்துவதற்காக யாரேனும் பிறர் மதத்தை இழிவுபடுத்தினால், அதன் காரணமாக அவன் தன் மதத்தையே இழிவுபடுத்திக் கொள்கிறவனாவான். இவ்வாறு செய்வது மேல்நோக்கி எச்சில் உமிழ்பவன் தன் முகத்தையே கறைப்படுத்திக் கொள்வது போலாகும்".

இருப்பினும் பவுத்தம், சிந்தித்தலை, கேள்வி கேட்பதை மற்றும் பகுத்தறிவதை ஊக்குவிக்கிறது. எனவே, எல்லாம்வல்ல படைப்புக் கடவுள் கருத்தையும் அது கூர்ந்து நோக்கி, இக்கருத்து மிகவும் திருப்தியற்றதாய் உள்ளமையைக் காண்கிறது.

கடவுள் எப்படித் தோன்றினார்? ஒரு எல்லாம்வல்ல கடவுள் இருந்தால், அவர் ஏன் இத்துனை தொல்லைகள், அநீதி, சமத்துவமின்மை, வன்முறை ஆகியவற்றை அனுமதிக்கிறார்?

கடவுள் கருத்து மனிதனின் அறியாமை, மூடநம்பிக்கை, அச்சம், பொருளியல் வசதிக்கான விருப்பம் ஆகியவற்றால் தோன்றுவதே-யாகும்.

ஈண்டு பலவகையான உயிர்கள் - மனித உயிர்கள், விலங்குகள், சிலவகை கீழ்நிலை, பிற உயர்நிலை - சில ஒளி(அறிவு) மிக்கவை - (இவை 'தேவர்' என அழைக்கப்படுகின்றன) ஆகிய வகைகளில் உள்ளன எனப்பவுத்தம் போதிக்கிறது. எல்லா உயிர்களும் பிறக்கின்றன - வாழ்கின்றன - இறக்கின்றன. வலிமைமிக்கவையும் கூட (**தேவர்கள்**) இறந்து அழிவனவே. உலகின் உண்மை இயல்பு யாதெனில் அனைத்தும் நிலையற்றவை - ஒன்றும் நிலையானதன்று - எதுவும் சர்வவல்லமையுடையதன்று - அனைத்தும் மாறுதல் அடைவ-துவே.

மனிதன் தன்னைத்தானே காத்துக் கொள்ள முடியும் எனக்காட்டினார் புத்தர்.

எடுத்துக்காட்டாக -

ஒருவன் ஓடும் நதிவெள்ளத்தில் சிக்கிக் கொள்வானாயின், அவன் தன் பெரும் முயற்சியால் தன்னைத் தற்காத்துக் கொள்ள முடியும்.

'ஒருவன் ஓடும் நதி வெள்ளத்தில் சிக்கிக் கொள்ளும்போது. அவன் கடவுளைத் தொழுது கொண்டிருப்பானாயின், அவன் மூழ்கிப் போய் விடுவான்..

மனிதன் தனக்கான முழு விடுதலையையும் இன்பத்தையும் பெற்றுக் கொள்ள முடியும். தேவை யாதெனின், 'நல்லுணர்வு தான்'- வாழ்க்கையின் உண்மை நிலையை உணர்வதே.

" ஒரு இயந்திரத்தின் இயக்கத்தைப் பற்றிப் புரியாதவரையில் ஒருவன், அதற்குள் இருந்து அதனைக் கடவுள்தான் இயக்குகிறார் என்று எண்ணக்கூடும். இயந்திரத்தின் இயக்கத்தை அவன் புரிந்துகொண்ட உடனே அதில் 'கடவுள்' எதுவும் இல்லை என அவன் உணர்ந்து கொள்வான்."

இதேபோல், நல்லுணர்வின் புரிதல், மனிதனின் 'விதி' கடவுளின் விருப்பத்தைச் சார்ந்ததாய் இல்லை என்பதைக் காட்டுகிறது. மனிதனின் விதி மனிதனையே சார்ந்துள்ளது.

"மனிதனே மனிதனின் 'விதிக்குத்' தலைவன்
மனிதனே அவனுடைய 'அழிவாளன்' அல்லது 'பாதுகாவலன்'
' தானே தனக்குப் பாதுகாவலன்
ஒருவனை மற்றவன் காக்கஇயலாது.
நல்லொழுக்கமாம் நடத்தையுள்ளவன்,
வெல்லற்கரியதையும் வென்றுவிடுகிறான்.

– தம்ம பதம் 160

அத்தியாயம் 11

சார்புநிலைத் தோற்றுவாய்

சார்புநிலைத் தோற்றுவாய் என்பது பவுத்தத்தில் மட்டுமே காணப்படுகிற போதனையாகும். இது, வாழ்க்கையோடு பொருத்தப்பட்ட 'காரண காரியக்' கோட்பாடாகும்.

சார்புநிலைத் தோற்றுவாய் (பட்டிச்ச சமுப்பாதா), காரணமும் விளைவும் ஒன்றோடொன்று தொடர்புடையது எனக்கூறுகிறது. இந்தப் போதனை கீழ்க்கண்டபடி புரிந்து கொள்ளப்படவேண்டும்.

இது இருப்பின் - இது விளைகிறது
இதன் விளைவால் - அது விளைகிறது.
இது இல்லையெனில் - அதுவும் இல்லை.
இது மறைந்தால் - அதுவும் மறைகிறது.

இதையே வேறொரு வகையில் கூறுவதானால் :

'அ'வின் காரணமாக - 'ஆ' விளைகிறது.
'ஆ'வின் காரணமாக - 'இ' விளைகிறது.
'அ' இல்லையாயின் - 'ஆ'வும் இல்லை.
'ஆ' இல்லையாயின் - 'இ'யும் இல்லை.

சார்புநிலைத் தோற்றுவாய் ஒரு நிலையின் நிகழ்வு, அதற்கு முந்திய நிலையைச் சார்ந்திருக்கிறது என விளக்குகிறது - அதாவது காரணமும் விளைவும். பொருள்கள் உட்சார்புடையவை - ஒரு வட்டத்தை ஒத்தவை - நிகழ்வுகளின் சங்கிலிக் கோர்வை போன்றவையல்ல என இது காட்டுகிறது.

சார்புநிலைத் தோற்றுவாய்க் கோட்பாடு, 1) காரணமின்றி எதுவும் தோன்றுவதில்லை; 2) ஒரு தனிக் காரணத்திலிருந்து எதுவும் தோன்றுவதில்லை ; 3) சார்பற்று எதுவும் இருப்பதில்லை - மற்றவற்றின் பாதிப்பின்றியும், தொடர்பின்றியும் ; (4) முதற்காரணம் என்று எதுவும் இல்லை - எனவே படைப்புக் கடவுள் கோட்பாடு நிராகரிக்கப்படுகிறது - என்று விளக்கிக் காட்டுகின்றது.

இயற்கை மீறிய ஒரு கடவுள் அமர்ந்து கொண்டு நம் செயல்களுக்கான தீர்ப்பை அளிக்கிறார் என்னும் கருத்து ஒப்புக்கொள்ள முடியாததும், அவசியமற்றதும் ஆகும். ஒழுக்க விதி என்பது காரண காரியத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் இயற்கை முறைமையேயாகும். நற்செயல்கள் நல்விளைவுகளை

உண்டாக்குகின்றன - தீய செயல்கள் தீய விளைவுகளை உண்டாக்குகின்றன. இவை பரிசில்களாகவோ, தண்டனை களாகவோ அன்று - மாறாகச் செயல்களின் விளைவுகளாக. பவுத்தம் 'செயல்களும் விளைவுகளும்' பற்றியே போதிக்கிறது - 'பரிசில்கள் தண்டனைகள் பற்றியன்று.

சார்புநிலைத் தோற்றுவாய் உலகத்தின் தோற்றம் பற்றிய கோட்பாடன்று - ஆனால் பொருள்களின் இருப்பு எவ்வாறுள்ளதென சமயப்பார்வையில் விளக்குகிற கோட்பாடாகும். சார்புநிலைத் தோற்றுவாய் மனித இன்னல்களுக்கான காரணத்தைக் காட்டுகிறது- ஒவ்வொருகணமும் வாழ்க்கையில் நிகழ்வுகள் எவ்வாறு நிகழ்கின்றன-வாழ்நாள் முழுதும்-பிறப்பு இறப்பெனும் சுழற்சியில் (சன்சாரா) என்று விளக்குகிறது.

'வாழ்க்கைச் சுழற்சி' 12 சார்புத் தொடர்புகளைக்கொண்டு விளக்கப்படுகிறது (1)தோற்ற வரிசையிலும் (2) மறைவு வரிசையிலும் (12 & 13)

1. தோற்ற வரிசையில் அவைகள்:-

1) அறியாமை நம் இன்னல்களை விளைவிக்கின்றது.

2) அறியாமையைப் பொறுத்து- விருப்புள்ள செயல்கள் விளைகின்றன.

3) விருப்புள்ள செயல்களைப் பொறுத்து தன்னுணர்வின் மீள்தொடர்பு விளைகிறது.

4) தன்னுணர்வின் மீள் தொடர்பைப் பொறுத்து மனமும் உடலும் தோன்றுகின்றன.

5) மனத்தையும் உடலையும் பொறுத்து ஆறு புலன் அடிப்படைகள் தோன்றுகின்றன.

6) ஆறு புலன் அடிப்படைகளைப் பொறுத்து தொடர்பு (ஸ்பரிஸம்) தோன்றுகிறது.

7) தொடர்பைப் பொறுத்து - உணர்ச்சி தோன்றுகிறது.

8) உணர்ச்சியைப் பொறுத்து - அவா தோன்றுகிறது.

9) அவாவைப் பொறுத்து - பற்று தோன்றுகிறது.

10) பற்றினை ப் பொறுத்து - உருவாக்கம் தோன்றுகிறது.

11) உருவாக்கத்தைப் பொறுத்து - பிறப்பு தோன்றுகிறது.

12) பிறப்பைப் பொறுத்து - முதுமை, இறப்பு, துன்பம், வேதனை, மகிழ்ச்சியின்மை - துக்கம் தோன்றுகிறது.

அவிஜ்ஜா பச்சயா	சங்காரா
சங்காரா பச்சயா	விஞ்ஞானம்
விஞ்ஞானா பச்சயா	நாமரூபம்
நாமரூபா பச்சயா	சலாயதனம்
சலாயதம பச்சயா	பஸ்ஸோ
பஸ்ஸ பச்சயா	வேதனா
வேதனா பச்சயா	தன்ஹா
தன்ஹா பச்சயா	உபாதானம்
உபாதானா பச்சயா	பவோ
பவ பச்சயா	ஜாதி
ஜாதி பச்சயா	ஜரா, மரணம் சோக, பரிதேவ, துக்க, தோமனஸ்ஸ, உபாயாசம்

2. மறைவு வரிசையில் அவைகள் :

(1-2) அறியாமையின் மறைவோடு - விருப்புள்ள செயல்கள் மறைகின்றன.

3) விருப்புள்ள செயல்களின் மறைவோடு தன்னுணர்வின் மீள் தொடர்புகள் மறைகின்றன.

4) தன்னுணர்வின் மீள் தொடர்புகளின் மறைவோடு மனமும் உடலும் மறைகின்றன.

5) மனம், உடல் ஆகியவற்றின் மறைவோடு ஆறு புலன் அடிப்படைகள் மறைகின்றன.

6) ஆறு புலன் அடிப்படைகளின் மறைவோடு தொடர்பு (ஸ்பரிஸம்) மறைகிறது.

7) தொடர்புகளின் மறைவோடு - உணர்ச்சி மறைகிறது.

8) உணர்ச்சியின் மறைவோடு - அவா மறைகிறது.

9) அவாவின் மறைவோடு - பற்று மறைகிறது.

10) பற்றுவின் மறைவோடு - உருவாக்கம் மறைகிறது.

11) உருவாக்கத்தின் மறைவோடு - பிறப்பு மறைகிறது.

12) பிறப்பின் மறைவோடு முதுமை மரணம், துன்பம், வேதனை மகிழ்ச்சியின்மை துக்கம் மறைகிறது.

உருவாக்கம் என்பது இருப்பின் பழைய வினைகளின் பயனான பரிணாமத்தைக் குறிக்கிறது.

இந்தச் சுழற்சியை உடைக்கும் மையப்புள்ளி அவாவுக்கும் ஈர்ப்புக்கும் இடையில் உள்ளது. ஒருவர் அவாவைக் கைவிட்டு விடுவாராயின் - ஆங்கு ஈர்ப்பு ஏதும் இல்லை. அறியாமை அழிக்கப்பட்டு அறிவாக மாற்றப்படுமாயின் அவாவென்னும் அபாயம் முற்றாக நீக்கப்படுகிறது - காரணகாரிய சுழற்சி முறிக்கப்படுகிறது.

அறியாமை என்பது யாது?

மெய்ப்பொருளை அறியாமையே அது. நான்கு உன்னத வாய்மைகளைப்பற்றிய உண்மை அறிவு இன்மையே அறியாமை - 1) துக்கம் உள்ளது 2) துக்கத்திற்குக் காரணம் உள்ளது 3) துக்கம் ஒழிக்கப்படக் கூடியது 4) துக்கத்தை ஒழிக்கும் வழி - இவற்றை அறியாதிருப்பதே அறியாமை.

நோய் தோன்றுகையில் - அறிகுறிகள் தோன்றும்
மருந்து உண்கையில் - அறிகுறிகள் மறையும்
அறியாமை தொடர்கையில் - துன்பங்கள் இருக்கும்
அறியாமை நீங்கிட - துன்பமும் நீங்கும்.

" உண்மையில் இந்த சார்புநிலைத் தோற்றுவாய்ப் போதனை மிகச்சிறந்ததாகும். இந்தக் கோட்பாட்டை உணராமலும், உய்த்தறியாமலும் இருப்பதாலேயே உயிர்கள் சிக்கலான நூலுருண்டைபோல் சிக்கலுக்காட்பட்டு விடுகின்றன." (13)

குவலயம் தனில்பலர் குருடராய் உள்ளனர்.
குறைவறத் தெளிந்த மனத்தினர் ஒருசிலர்,
அவதியாம் வலைகிழித் தோடும் பறவைபோல்
அடைகுவர் நல்லின்ப நிலையினை எட்டியே.

– தம்மபதம் 174

அத்தியாயம் 12

கம்மா

'கம்மா' என்பது விருப்புள வினை அல்லது விழைந்து புரியும் செயல்.

விருப்புற்ற ஒருவன், தன் உடலால், உரையால், உளத்தால் 'கம்மா'வாகிற செயல்களைப் புரிகிறான். அனிச்சையான, விருப்பற்ற, தற்செயலான செயல்கள் 'கம்மா' ஆவதில்லை - அதாவது செயல்கள் யாவும் 'கம்மா' அன்று.

'கம்மா' கடந்த செயல்கள் மட்டுமன்று. அது கடந்த வினைகள், தற்போதைய வினைகள் (செயல்கள்) இரண்டையும் குறிப்பதாகும்.

'கம்மா' ஒருவனின் சொந்தச் செயற்பாடுகளே ஆகும். 'கம்மா' அழிவுநிலை வாதமன்று - ஏனெனில் ஒருவர் தன் செயல்களை நல்லனவாகவோ, தீயனவாகவோ மாற்றிக்கொள்ளும் ஆற்றல் அவர்க்கு உள்ளது. ஒருவர் தன் சொந்ததக் 'கம்மா'வைத் தாமே உருவாக்கிக் கொள்கிறார். அது பிறரால் திணிக்கப்படுவதன்று.

விருப்புறு செயல்கள் நல்லனவாகவும் இருக்கலாம் - தீயனவாகவும் இருக்கலாம் - எனவே 'கம்மா' நற்கம்மாவாகவும் இருக்கலாம் - தீயகம்மாவாகவும் இருக்கலாம்.

விருப்பெனும் வேண்டுதல் செயலில் பெரும்பங்கு வகிக்கிறது. எடுத்துக் காட்டாக 1)ஒருவன் ஒரு கத்தியை எடுத்து மற்றொ- ருவனைக் கொல்லும் விருப்போடோ, தாக்கும் விருப்போடோ அவனை அறுத்தால் இச்செயல் குறைபாடுடையதாகும். தீயதாகும் - 'தீயகம்மா'வாகும். 2) இதற்கு மாறாக ஒருவர் கத்தியை எடுத்து மற்றொருவர் உயிரைக்காக்கும் விருப்போடும், அவருடைய நோயைப் போக்கும் நோக்கோடும் (அறுவை மருத்துவர் செய்வது போல்) அறுத்தால் அச்செயல் நிறைவுடையதாகும் - நல்லதாகும் - 'நற்கம்மா'வாகும்.

நல்லதற்கும் தீயதற்கும் இடையிலான வேறுபாட்டை உண்டாக்குவது விருப்பநோக்கமேயாகும்.

நல்ல, நிறைவான, திறன்மிக்க, ஈகை, கருணை, நல்லுணர்வு ஆகியவற்றின் அடிப்படையிலான செயல்கள் 'நற்கம்மாக்கள்' ஆகின்றன. (குசலகம்மா)

தீய, குறைபாடான, திறனற்ற - பேராசை, வெறுப்பு மற்றும் ஏமாற்றுதல் ஆகியவற்றின் அடிப்படையிலான செயல்கள் 'தீய கம்மாக்கள்' ஆகின்றன. (அகுசலகம்மா).

'கம்மா' நடத்தைகாரண விதியாகும். கம்மா வாழ்வில் தாக்கமேற்படுத்தும் வலிய மன ஆற்றலாகும்.

அனைத்து உயிர்களும், அவைகள் தம் கம்மாவின் வாரிசுகள்.
அனைத்து உயிர்களும் அவைகள் தம் கம்மாவால் தோன்றுபவை.
அனைத்து உயிர்களும் அவைகள் தம் கம்மாவோடு உறவுடையவை.
அனைத்து உயிர்களும் அவைகள் தம் கம்மாவால் ஆதரிக்கப் படுகின்றன.
அனைத்து உயிர்களும் அவைகள் தம் கம்மாவின் கடந்த, தற்போதைய கம்மாவின் உரிமையாளர்களே.

–புத்தர்
(கம்மா – விருப்புறு வினைச் செயல்கள்).

விபாக

கம்மாவின் விளைவுகள் 'விபாக' அல்லது 'கம்ம-விபாக' என வழங்கப்படுகின்றன. கம்மா என்பது, செயல்கள் மட்டுமே - விளைவுகள் அன்று . 'விபாக' என்பதே செய்ல்களின் விளைவு.

நற்செயல்கள் (நற்கம்மாக்கள்)-நல்ல பயனுள்ள விளைவுகளைக் கொணர்கின்றன. (நல்ல விபாகங்கள்).

தீய செயல்கள் (தீய கம்மாக்கள்) - தீய பயனற்ற விளைவுகளைக் கொணர்கின்றன. (தீய விபாகங்கள்)

'விபாக' என்பது இயற்கைமீறிய நீதிபதி எவராலும் வழங்கப்படும் பரிசோ, தண்டனையோ அல்ல - அது ஒருவரின் செயற்பாடுகளின் விளைவேயாகும் - கம்மாவும் விபாகவும் காரணமும் விளைவுமாகும்.

"விதைக்கும் வண்ணமே அறுவடை அமையும்.
எங்கோ - எப்போதோ - இம்மையிலோ மறுமையிலோ.
இன்று நாம் அறுப்பது என்றோ நாம் விதைத்தது
தற்போதோ முன்போ". (3)
வந்துற்றபோது - நாமறிந்ததில்லை.
எங்குநாம் செல்வோம் - ஏதும் அறியோம்.

எப்போது செல்வோம் - அதுவும் அறியோம்.
செல்வது உண்மை - அதைநாம் அறிவோம்.

நாம் செல்லப்போவது (இறப்பது) நிச்சயம். ஆதலால் நன்மையே செய்வதில் கவனமாயிருத்தல் வேண்டும். சரியாக 'விதைக்க' வேண்டும் - அப்போது தான் நாம் 'அறுப்பதும்' நன்மையானதாய் இருக்கும்.

கம்மா எங்கே சேமித்து வைக்கப்படுகிறது?

காற்று எங்கே சேமித்து வைக்கப்படுகிறது? தீஎங்கே சேமித்து வைக்கப்படுகிறது? ஒரு மரம் கனிகளைத் தரும்போது அது எந்தச் சேமிப்பிலிருந்து தருகிறது? சூழல்கள் பொருந்தியிருக்கும்போது, காற்று வீசுகிறது - தீ எழுகிறது - கனிகள் தோன்றுகின்றன.

அதேபோல் கம்ம ஆற்றல், சூழல் நேர்கையில் தன்னைத்தானே வெளிப்படுத்திக் கொள்கிறது.

"நாம்நம் உடலால், உரையால், உளத்தால்
புரியும் செயல்கள் யாவுமே 'கம்மம்'.
அவைகளின் இயல்பு இவ்வா றிருக்கும்
நல்லது, தீயது, நடுநிலை யானது.

நல்லதோ தீயதோ ஆற்றிய வினைக்கு
உடனோ பிறகோ விளைவுகள் தோன்றும்.
இறைவனின் ஆணை ஏதுமே யின்றி
செயல்களை விளைவினை எங்கும் காணலாம்.
நற்கம்மாவின் விளைவுக ளாக
இன்பம், அழகு ஆற்றல் நீள்வாழ்வு
அனைத்தும் பெறலாம். தீய கம்மாவால்
துன்பம் வேதனை துயரமே விளையும்".

(டாக்டர். ஒ.ஆர். மெடோன்சா) (14)

அத்தியாயம் 13

மறுபிறப்பு

(மீள்–உருவாக்கம்)

வாழ்க்கை மரணத்துடன் முடிவதில்லை எனப் பவுத்தர்கள் நம்புகிறார்கள். வாழ்க்கை மரணத்திற்குப் பின் தொடங்குகிறது (ஒருவர் நிப்பாணம் அடையும் வரை). உண்மையில், இந்தப் பிறப்புக்கு முன்னும் வாழ்க்கை இருந்திருக்கிறதெனப் பவுத்தர்கள் நம்புகிறார்கள். 'வாழ்க்கை' என்பது பிறப்பு, இறப்பு, மீண்டும் பிறப்பு எனச் சுழலும் வாழ்க்கைச் சக்கரமேயாகும். இது 'சம்சாரா' என வழங்கப்படும்.

நாம் இதற்குமுன் பிறந்திருப்போமேயானால், ஏன் நம் முன்பிறவிகள் நம் நினைவில் இல்லை?

தம் கடந்த வாழ்வுகளை நினைவில் வைத்திருப்போர் பற்றிய எடுத்துக்காட்டுக்கள் அரிதாகவே உள்ளன. (3) ஆனால் பெரும்பான்மை மக்களுக்கு "நம் நினைவாற்றல் முழுநிறைவான தன்று – அது மிகவும் அளவிட்டதாயுள்ளது. இப்பிறவியில் நாம் பிறந்ததே நம் நினைவில் இல்லை. இருந்தும் நாம் பிறந்திருக்கிறோம். நம் நினைவில் பின் நோக்கித் தேடுகையில் ஓரளவே நம்மால் செல்லமுடிகிறது." (15)

'ஆன்மா' இல்லையாயின் எவ்வாறு ஒருவன் மறுபடி பிறக்க முடியும்?

பவுத்தம் மீள் – உருவாக்கத்தைப் (மறுபிறப்பைப்) போதிக்கிறது, அது அழிவிலா ஆன்மாவிற்கூடான மறு அவதரிப்பினின்று முற்றிலும் வேறுபட்டது.

எடுத்துக்காட்டாக, அவதரிப்புக் கருத்துப்படி,

"வெவ்வேறு பாத்திரங்கள் இருப்பின் – ஒரு குவளை, கோப்பை, கிண்ணம், பானை முதலிய அவற்றில் ஒரு கோலியை முதலில் ஒரு பாத்திரத்திலும், அடுத்து ஒன்றிலும், மீண்டும் ஒன்றிலும் என வரிசையாய் இடுவதாக வைத்துக் கொள்வோம். இவ்வண்ணமே 'கோலி' போன்றது ஆன்மா. 'பாத்திரங்கள்' போன்றவை உடல்கள். இவை அடுத்தடுத்து ஆன்மாவால் குடியேறப்படுவனவாய் உள்ளன." (10)

ஆனால், பவுத்தக் கருத்து யாதெனில், தீச்சுவாலை தீக்குச்சியினின்று, மெழுகுக்கும், விளக்கிற்கும் செல்வதை ஒத்தது. தீக்குச்சியில் எரிந்த அதே தீச்சுவாலைதானா இப்போது தீபத்தில் எரிவது? இவ்வினாவிற்கு ஒருவர் 'ஆம்' என்றும், 'இல்லை'யென்றும் இருவிதமாகவும் பதிலளிக்கலாம். இரண்டும் சரியே. (10).

இதே போல ஒரு கம்பளிப்புழு வண்ணத்துப் பூச்சியாய்த் ஆகிறது. வண்ணத்துப்பூச்சி கம்பளிப்புழுவினின்று வேறானதா? இரண்டும் ஒன்று தான் என்பதுமில்லை - வேறு வேறுதான் என்பதுமில்லை. மாற்றத்தில் ஒரு தொடர்ச்சி உள்ளது.

இந்த வாழ்க்கையிலேயே நாம் கணத்துக்குக் கணம் மாறிக் கொண்டிருக்கிறோம் - நம் எண்ணங்கள் மாறுகின்றன ; நம் வடிவம் மாறுகிறது ; நாம் பிறக்கிறோம் - வாழ்கிறோம் - இறக்கிறோம். இருப்பினும் நாம் கடந்தகாலம் - நிகழ்காலம் - எதிர்காலம் எனத் தொடர்கிறோம். இந்த வாழ்விலேயே, வளர்ந்த மனிதன் 'பிறந்த குழந்தையோ' 'சிசுவோ,' 'சிறுவனோ' அல்ல - இருப்பினும் முற்றிலும் வேறானவனும் அல்ல.

ஆன்மாஇன்மையும், மறுபிறப்பும் என்னும் புதிர் 'தீச்சுவாலை' அல்லது 'இப்பிறவியிலேயே ஏற்படும் மாற்றம்' போன்றது தான் - அது இரண்டும் ஒன்றுமன்று - முற்றிலும் வேறுபட்டதுமன்று". வலிமையுள்ள கம்ம ஆற்றல் - விருப்புச்செயலின் ஆற்றல் வாழ்க்கை முழுவதும் மரணத்திற்குப் பின்னும் இயங்குகிறது.

'இருப்பிற்கான அவா' மரணத்தோடு முடிவுறுவதில்லை. 'வாழ்வதற்கான விருப்பு', என்னும் வலிய மன ஆற்றல் வாழ்க்கைச் சக்கரத்தைச் சுழலவைக்கிறது.

> "*மரணத்தில் தொடங்குகிறது வாழ்வு - மரணத்தில் முடிகிறது வாழ்வு.*
> *செயல்கள் நடந்து முடிந்தபின்*
> *காம விருப்பும், கடின வெறுப்பும்*
> *மாயத்தோற்றம் தருவதால் வருவது நம் பரிமாணம்,*
> *இடையறாவண்ணம், பொருளிலாவழியில்.*
> *ஆழ்சிந்தனையால் மட்டும் நாம் அறிவோம்.*
> *வாழ்க்கை முறையை நாம் உணர்கிறோம்.*
> *உள்நோக்காலே உடைக்கிறோம் தோற்றத்தை*
> *மெய்யறிவாலே நம்மை நாம் விடுவிப்போம்*
> *நாமே பின்னிய வலைகளினின்று.*" (6)

ஐயுறுவோர்க்கான அறிவுரை

கம்மா, மறுபிறப்பு ஆகியவை பற்றி ஐயம் எழுப்புவோருக்கு, அவர்கள் பகுத்தறிவு வழிமுறையைப் (அபஞ்ஞக பட்டிபதா) பின்பற்ற வேண்டும் என்று அறிவுரை கூறினார் புத்தர் .

புத்தர் புகன்ற அறிவுரை : "வாழ்வு (மறுபிறப்பு) மற்றும் நடத்தை காரணம் (கம்மா) ஆகியவை உண்மையெனக் கொண்டு நாம் இயங்கினால், பின் அவை உண்மையாகிவிடின், நாம் இம்மை மறுமை இரண்டிலும் இன்புறுவோம்; அது உண்மையல்லவெனின், அப்போதும் நம் இவ்வாழ்வை ஒழுக்கப் பொறுப்புடன் நடத்தியமைக்காக அறிஞர்களால் நாம் போற்றப்படுவோம்."

"ஆனால் மறுபிறப்பும், நடத்தைக் காரணமும் (கம்மா) உண்மை இல்லையெனக் கொண்டு நாம் நடப்போமாயின், - பின் அவைகள் உண்மையாயிருப்பின், நாம் மறுமையில் மகிழ்ச்சியற்றிருப்போம்; அது உண்மையல்லவாயினும், ஒழுக்கப்பொறுப்பின்றி இவ்வாழ்வில் நடந்தமைக்காக அறிஞர் பெருமக்களால் தூற்றப்படுவோம்.' (16)

எனவே பகுத்தறிவு முறைமையென்பது, ஒருவர் 'கம்மா' மறுபிறப்பு ஆகியவற்றை நம்பினாலும் இல்லையென்றாலும் 'நல்லதைச் செய்யவும் தீயதைத் தவிர்க்கவும்' வேண்டும்.

"இங்கும் துன்புறுகிறான் பின்னும் துன்புறுவான்
இம்மை மறுமை இரண்டிலும் தீயவன்
துன்பம் உறுகிறான் துன்புற்று அழிகிறான்
தன்னுடை மாசுறு செயல்களைக் கண்டே .

தம்மபதம் 15

இங்கும் இன்புறுகிறான் பின்னும் இன்புறுகிறான்
இம்மை மறுமை இரண்டிலும் நல்லவன்
இன்பம் உறுகிறான் இன்புற்று மகிழ்கிறான்
தன்னுடைத் தூயச் செயல்களைக் கண்டே .

தம்மபதம் 16.

அத்தியாயம். 14

வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வு

பவுத்தத்தின்படி ஒரு மனிதனின் வாழ்க்கை பல காரணிகளால் நிர்ணயிக்கப்படுகிறது. அவைகள் பொதுவாக அய்ந்து முறைமைகளாக வகுக்கப்பட்டுள்ளன. (நியாமங்கள்) அவையாவன ;

1. உயிரியல் முறைமை
2. பவுதிக முறைமை
3. இயற்கை முறைமை
4. உளவியல் முறைமை
5. ஒழுக்கவியல் முறைமை

1. உயிரியல் முறைமை (பீஜ நியாமம்)

பாரம்பரிய, குடும்பக் குணக் கூறுகள் மனிதனிடம் தாக்கமேற்படுத்துகின்றன. எடுத்துக்காட்டு; பிள்ளைகள் பெற்றோரின் கூறுகள் உடையனவாய் உள்ளன. சில நோய்கள் குடும்பத்தினர் அனைவர்க்கும் பரவுகின்றன.

2. பவுதிக முறைமை (உது நியாமம்)

தட்பவெப்பம், காற்று, மழை முதலியன மனிதர் தம் வாழ்வைப் பாதிக்கக் கூடும். எடுத்துக்காட்டு: மிக அதிக வெப்பநிலை, அல்லது மிக அதிகக் குளிர்நிலை வாழ்வைக் கடினமாக்கி விடுகிறது.

3. இயற்கை முறைமை (தம்ம நியாமம்)

புவிஈர்ப்பின், பூகம்பங்களின், எரிமலை வெடிப்பின் விளைவுகள் முதலியன மனிதரின் வாழ்க்கையில் குறுக்கிட்டு அதைப் பாதிக்கின்றன.

4. உளவியல் முறைமை (சித்த நியாமம்)

மனத்தின் ஆற்றல் ஒரு மனிதனின் வாழ்க்கையில் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்துவதாயுள்ளது. தீர்மானிப்பு, முயற்சி, மன உறுதி, கல்வி, கற்றறிதல் ஆகியவையே வெற்றியைக் கொணரும், சோம்பல், சுறுசுறுப்பின்மை, அலட்சியம் ஆகியவை முன்னேற்றத்தை முறித்துவிடும்.

5) ஒழுக்க முறைமை (கம்ம நியாமம்)

மற்ற கூறுகள் அனைத்தும் பொதுவாயிருக்கையில் தனிமனிதர்கள் வெவ்வேறு நிலைகளை எதிர்கொள்ளக் கூடிய வெவ்வேறு திறமைகள் உடையவர்களாக உள்ளனர். இது ஏன் இப்படியென்று கம்ம ஒழுக்க முறைமை மற்றும் மீள் உருவாக்கம் நன்கு விளக்குவதாயுள்ளது.

அனைத்தும் கம்மாவினால்தான் என்பதில்லை என அறியப்படவேண்டும். ஒரு மனிதனின் விதிக்குக் காரணமான வையான பல காரணிகளில் **கம்மா** ஒன்றே. ஒருவனின் கம்ம விளைவுகளின் அனுபவிப்பில் கூட 1) பிறப்பு வகை (**உபாதி**) 2) ஆளுமை அல்லது தோற்றம் (**கதி**) 3) பொதுவான காலஅளவு (**காலம்**) மற்றும் 4) தனிமனித முயற்சி (**பயோக**) ஆகியவை தனிமனித விதியின் நிர்ணயத்தை உருவாக்கும் காரணிகளாக உள்ளன.

ஒழுக்க முறைமை (கம்மா மற்றும் விபாக)

ஒரு மனிதனின் 'விதி' பல காரணங்களுக்குட்பட்டது. அவற்றில் ஒன்றே கம்மா, விபாக அல்லது ஒழுக்க முறைமை.

ஏன்? ஒருவர் செல்வராய்ப் பிறக்கிறார் - மற்றவர் ஏழையாய்ப் பிறக்கிறார்
ஒருவர் அழகாயிருக்கிறார் - மற்றவர் அழகற்றிருக்கிறார்
ஒருவர் அறிவாளியாயிருக்கிறார் - மற்றவர் அறிவிலியாயிருக்கிறார்
ஒருவர் நெடுங்காலம் வாழ்கிறார் - மற்றவர் அகால மரணமடைகிறார்
ஒருவர் உயர்வெய்துகிறார் - ஒருவர் தாழ்வு உறுகிறார்?
ஒருவர் நல்வாய்ப்புறுகிறார் - ஒருவர் தீய வாய்ப்பில் உழல்கிறார்.

இவையெல்லாம் படைப்புக் கடவுளின் தன்னிச்சையான முடிவுகள் காரணமாகவா ஏற்படுகின்றன? ஏன் இத்தகைய ஏற்றத்தாழ்வுகள்?

யாதொன்றும் காரணமில்லாமல் நிகழ்வதில்லை என்று போதிக்கிறது பவுத்தம் ஒவ்வொரு 'விளைவும்' ஒரு 'காரணம்' உடையதாயுள்ளது. 'வாய்ப்பு' 'வாய்ப்பின்மை' (அதிர்ஷ்டம், அதிர்ஷ்டம் இன்மை எனப்படுவது) ஆகியவற்றின் காரணம் யாது?

"உயிர்வாழ்வன அனைத்தும் சொந்த கம்மாவை (செயல்கள்) வாரிசுரிமையாய்ப் பெற்றவையாய் உள்ளன. "நாம் நம் சொந்தச் செயல்களுக்கு உரியவர்களாயுள்ளோம்" - இம்மையிலும் முன்பும் புரிந்த செயல்கள் (3) நம் விதியை உருவாக்குபவர்கள் நாமே.

"மாசிலா மனத்துடன் மானுடன் ஒருவன்
பேசுதல் புரிதல் உடையவ னாயின்
அகலுதல் இல்லா நிழலென அவனை
இன்பம் தொடர்தல் அதிநிச் சயமே"
"மாசுள மனத்துடன் மானுடன் ஒருவன்
பேசுதல் புரிதல் உடையவ னாயின்
காளையைத் தொடரும் வண்டியாய் அவனைக்
கவலைகள் தொடர்வது அதிநிச் சயமே".

- தம்மபதம் 2 & 1

கம்மாவும், மீள் உருவாக்கமும் (மறுபிறப்பு) வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளை விளக்குவனவாயுள்ளன. 'அதிர்ஷ்டம்' 'அதிர்ஷ்டமின்மை' எனப்படுவதெல்லாம் ஒருவனின் சொந்த விருப்புறு செயல்களின் (கம்மா) விளைவேயாகும். நற்கம்மாவின் விளைவு நன்மையாய் அமைகிறது. (அதிர்ஷ்டம் எனப்படுகிறது). தீய கம்மாவின் விளைவு தீமையாய் அமைகிறது (அதிர்ஷ்டமின்மை எனப்படுகிறது).

நற்செயல்தாமோ தீச்செயல்தாமோ
நடத்துகின்றானொரு மானுடன் இங்கெனில்
உற்றசொத்தென அவனுக்குள்ளது
உடனவன்கொண்டு செல்வது இவையே.

– (சம்யுத்த நிகாயம் iii-1.4)

இதை அறிந்த அறிவுடையோன் மதிப்புமிக்க நற்செயல் களையே சிறு விஷயங்களிலும் கவனமாய்ப் புரிவான் -

"நல்லுரை தம்மால் நமக்கென்ன லாபம்
என்றொரு போதும் எண்ணுதல் வேண்டாம்.
துளித்துளி நீரால் குவளை நிரம்பும்
துறவியோ தன்மை 'மதிப்பால்' நிறைக்கிறார்.
சிறுகச் சிறுக தான் என்றால் கூட."

– தம்மபதம் 122

*"நன்னெறி மனிதன் இன்புறுகின்றான்
இம்மை மறுமை இரண்டிலும் தானே"*

- தம்மபதம் 169

அத்தியாயம் 15

விடையளிக்கப்படாத வினாக்கள்

நான்கு விதமான வினாக்கள் உள்ளனவென்னக் கருதினார் புத்தர் :

1. நேரடியாக விடையளிக்கப்படக் கூடியவை

2. பகுப்பாய்வு செய்து பதிலளிக்கப்படக் கூடியவை

3. எதிர்க்கேள்விகளால் விடையிறுக்கப்பட வேண்டியவை.

எடுத்துக்காட்டாக ;

ஆன்மா என ஒன்று உள்ளதா?

ஆன்மா என நீங்கள் கூறுவதன் பொருள் என்ன?

4. ஒதுக்கப்பட வேண்டிய வினாக்கள் பதிலிறுக்காமல் ஏனெனில் அவை பொருளற்றவை.

புத்தரின் போதனை நூல்களில் பதிலிறுக்கப்படாத பத்து வினாக்கள் ;

1. உலகம் நிலையானதா?

2. உலகம் நிலையற்றதா?

3. உலகம் அளவுடையதா?

4. உலகம் அளவிலாததா?

5. உடலும் ஆன்மாவும் ஒன்றா?

6. ஆன்மா உடலினின்று வேறுபட்டதா?

7. உன்னதத் துறவோர் (அறவோர்-அறஹந்த்) இறப்புக்குப் பின் வாழ்கிறாரா?

8. அவர் இறப்புக்குப்பின் வாழ்வதில்லையா?

9. அவர் இறப்புக்குப்பின் இருப்பவராகவும் இல்லாதவராகவும், உள்ளாரா?

10. அவர் இறப்புக்குப்பின் இல்லாதவராகவும் இல்லாதவரல்லாதவராகவும் உள்ளாரா?

வினாக்கள் 1 முதல் 4 வரை காலம் - இடம் குறித்தவை - காலத்தின் தொடக்கம் யாது? அல்லது ஆகாயத்தின் அளவு யாது என வினவுதற்கொப்பான வினாக்கள் இவை. இவைகள் பதிலிறுக்கப்பட இயலாதவை.

வினாக்கள் 5ம் 6ம் 'ஆன்மா' பற்றியவை. அது உள்பொருளா இல்பொருளா என வினவுபவை. (அத்தியாயம் 9) வினாக்கள் 7 முதல் 10 வரை உள்ளவை எழவே வழியில்லை - ஏனெனில் அறவோருக்கு (அரஹந்த) 'நான்' என்பதோ 'தான்' என்பதோ இல்லை. அவர் தனக்குவமை இல்லாதவர்" (அத்தியாயம் 18).

இத்தகைய உத்தேசமான வினாக்களுக்கு விடைதேடுவதைவிட, அவசியமானது யாதெனில், உண்மையான பிரச்னைகளை இனங்கண்டு, அவற்றிற்கான சரியான தீர்வுகளைக் காண்பதேயாகும்.

மாலுங்க்ய புத்ரருக்குக் கூறப்பட்ட தம் அறிவுரையில் புத்தர் கூறினார் :

"ஒரு மனிதன் விஷ அம்பொன்றினால் தாக்கப்பட்டுக் காயமுற்றான் என வைத்துக் கொள்வோம். பின் அவனை அவனுடைய நண்பர்களும், உறவினரும் ஒரு அறுவைமருத்துவரிடம் அழைத்துச் செல்கின்றனர். அப்போது அந்த மனிதன், "யார் இந்த அம்பை எய்தார்கள் என அறியும் வரை நான் இந்த அம்பை எடுக்க விடமாட்டேன். அம்பெய்தவனின் பெயரென்ன? அவன் உயரமென்ன? அவன் நிறமென்ன? அவன் எங்கிருப்பவன்? அவன் பயன்படுத்திய வில் எவ்வகையானது? எவ்வகையான அம்பு பயன்படுத்தப்பட்டது? எவ்வகையான நாண் ஏற்றப்பட்டது?"- முதலியனவற்றைக் கேட்பதாக வைத்துக் கொள்வோம். இவ்வினாக்களுக்கான விடை தெரிவதற்கு முன்னமே அந்த மனிதன் இறந்து விடுவான். உயிரைக் காப்பாற்றுதல் என்னும் உடனடிப் பிரச்னைக்கு அந்த வினாக்கள் பயன்படமாட்டா".

முனிவர் வச்சகோத்தா அவர்களின் 'ஒரு அரஹந்த மீண்டும் பிறப்பாரா?' என்னும் வினாவிற்குப் புத்தர் அளித்த பதில் கூட இதனைத் தெளிவுறுத்துவதாயுள்ளது.

"தங்கள் முன் தீ எரிந்து கொண்டிருந்து, இறுதியில் அது அணைந்து விடுவதாய் வைத்துக் கொள்வோம். அப்போது யாரேனும்

ஒருவர் தங்களை, 'அந்தத்தீ எந்தத் திசையில் போயிற்று - கிழக்கிலா - மேற்கிலா - வடக்கிலா - தெற்கிலா' என்று கேட்பாராயின், தாங்கள் என்ன கூறுவீர்கள்", - இந்த விஷயத்திற்கு இவ்வினா பொருத்தமாய் இல்லை - ஏனெனில் தீ எரிபொருளைப் பொறுத்துள்ளது - எரிபொருள் தீர்ந்ததும் தீயும் தீர்ந்து போகிறது."

இதேபோல், தானெனும் தோற்றமாயையை எவரொருவர் கைவிடுகிறாரோ, அவர் 'நான்' அல்லது 'எனது' என்பதன் பற்றினின்று நீங்கியவராய், மனம் பொருள் ஆகியவற்றினின்று விடுபட்டவராய் இருப்பதால் அவர் பற்றற்றவர் ஆகிறார்.

புத்தரின் போதனைகள், அவற்றைப் பின்பற்றுவோரை விடுதலை இலக்கை அடைய வழி துன்பக்கட்டுக்களிலிருந்து விடுதலை பெற உந்தித்தள்ளி வகுக்கிறது.

"நான் போதிப்பன யாவும்
துன்பமும் அவற்றின் துடைப்புமே". - புத்தர்

ரோஹிதஸ்ஸ சுத்தத்தில், புத்தர் கூறுகிறார் :

"உணர்வுகள், சிந்தைகள் ஆகியவையுடைய இந்த எண்சாண் உடலுக்குள்ளேயே, நான் உலகை - அதன் தோற்றத்தை, அதன் நீக்கத்தை, வேதனை, துன்பம் ஆகியவை உட்பட்ட உலகின் நீக்கத்தைப் பிரகடனப்படுத்துகிறேன்." (17)

'உலகின் இறுதியை, அதனுடைய எல்லையை
நடந்து அடைதல் என்றும் இயலாது.
அறிவுடை, முழுநிறைத்தூய, உள்ளமைதியுறு
மனிதரே அடைவார் உலகின் இறுதியை -
இம்மை மறுமை இரண்டிலும் பற்றற்று.'

உயிர்கள் யாவும் அவா, பற்று, மகிழ்ச்சி, புலனின்ப ஆசை ஆகிய சிக்கல்களுக்குள் கட்டுப்பட்டுவிடுகின்றன. உண்மைப் பிரச்னை இதுவே! எப்படி இவற்றினின்று விடுபடுவது?

"அகநிலைத்தளையும் புறநிலைத் தளையும்
என்று எ தளைகளில் கட்டுண்டு கிடக்கிறோம்.

இந்தத் தளைகளை அறுத்தெறிபவர் எவர்?
நன்னெறி நடத்தையில் நன்கூன்றியவரே
தன்னுணர் உடன் புரிதலை வளர்த்திட்டவரே
இந்தத் தளைகளை அறுத்து வெல்பவர்" (18),

அத்தியாயம் 16

மனத்தைப் பண்படுத்தல்

(தியானம்)

பவுத்தம் மனத்திற்கு மிக முக்கிய இடத்தை அளிக்கிறது.

"*நினைப்புள நிலைகள் யாவுக்கும் முந்தி*
நிற்பதும் தலையாயதும் மனமே!"

–தம்மபதம் 1

தணிவிக்கப்பட்ட, பாதுகாக்கப்பட்ட, கட்டுப்படுத்தப்பட்ட மனத்தைப்போல் ஒரு மனிதனுக்கு நன்மைகளைக் கொணர்வது வேறொன்றுமில்லை.

மனத்தைக் கட்டுப்படுத்துவது கடினமாகும். மனம் அங்கிங்குமாய்த் தனக்குத்தானே அலைபாய்வது - உணரப்படாமலும், அறியப்படாமலும், விரைந்து மாறுவது - ஒன்றைவிட்டு மற்றொன்றிற்குத் தாவும் தன்மையது. பேராசை, பொறாமை, வெறுப்பு, ஏமாற்றம் முதலிய குறைபாடான குணங்களால் எளிதில் கறைபடியக் கூடியது - மனிதர்களைப் பரபரப்புக்கும், கவலைக்கும் உள்ளாக்குவது.

மனத்தைக் தியானத்தால் அமைதிப்படுத்தவும், கட்டுப்படுத்தவும் முடியும்.

பவுத்த நூல்களில் பலவிதமான தியான முறைகள் விவரிக்கப்படுகின்றன. ஒவ்வொருவருடைய மனப்பாங்கிற்கும் பொருந்தக்கூடிய வகை தேர்ந்தெடுக்கப்படலாம். எடுத்துக காட்டாக –

தீயவிருப்பத்தை ஒழிப்பதற்கான நேயத்தைத்
தியானித்த) (மெத்தா) .

கொடுமையை ஒழிப்பதற்கான கருணையைத்
தியானித்தல் (கருணா) .

பொறாமையை ஒழிப்பதற்கான நல்லிரக்க
மகிழ்ச்சியைத் தியானித்தல் (முதிதா) .

பதட்டத்தை ஒழிப்பதற்கான நிதானத்தைத்
தியானித்தல் (உபேக்கா) .

காமத்தை ஒழிப்பதற்கான, மாசுள நிலை
பற்றித் தியானித்தல் (அசுபா).

தியானம் பல நற்பயன்களைக் கொணர்கிறது. நேயத்தைத் (மெத்தா) தியானிப்போர் எதிர்பார்க்கக் கூடிய நன்மைகளில் சில :

1. மகிழ்ச்சியான உறக்கம் 2. அமைதியான விழிப்பு 3. தீய கனவுகள் இன்மை 4. மனித உயிர்களிடத்தும் பிற உயிர்களிடத்தும் நேயமாய் இருத்தல் 5. மனம் உடனே ஒருமுகப்படுதல் 6. மகிழ்ச்சியாயிருத்தலும் தூய தோற்றமும் 7. இறக்கும் தறுவாயில் அமைதியாய் இறத்தல் 8. இன்புறுமறுமை பெறல்.

பவுத்த தியானம் பொதுவாக இருபடிநிலை உடையது:

1. அமைதித் தியானம்

2. உள்நோக்குத் தியானம்

1. அமைதித் தியானம் **(சமத பாவனா)** மனத்தை அமைதிப்படுத்திக் கட்டுப்படுத்துகிறது. காமம் நீக்கப்படுகிறது.

2. உள்நோக்குத் தியானம் **(விபஸ்ஸனா பாவனா)** மெய்யறிவை வளர்க்கிறது. அறியாமை ஒழிந்து, ஒருவர் உள்ளதை உள்ளவாறு காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக;-

i) நிலையாமை (**அநிச்சா**) ii) திருப்தியின்மை (**துக்கம்**) iii) அகந்தையின்மை (**அநத்தா**).

அமைதித் தியானம், உள்நோக்குத் தியானம் இரண்டும் நிப்பாணம் அடைய அத்தியாவசியமானதாகும்.

தியானம், அமர்ந்தோ நின்றோ நடந்தோ அல்லது படுத்தோ செய்யப்படலாம். ஒவ்வொவருநாளும் சில நிமிடங்களாவது தியானம் செய்தல் மிகவும் நல்லது.

தியானத்தின் எல்லா வகைகளிலும், எளிமையான ஒன்றான 'சுவாசித்தலில் விழிப்புடைமை' (ஆநாபானசத்தி) சிறப்பான ஒன்றாகும் - இது புத்தரால் பரிந்துரை செய்யப்பட்டதும் போற்றப்பட்டதும் ஆகும்.

'சுவாசித்தலில் விழிப்புடைமை'யில், முக்கியமானவை யாதெனில் -

ஓர் அமைதியான இடத்தில் அமர்தல்.

தன் சொந்த சுவாசத்தைக் கூர்ந்து கவனித்தல் - உள்ளிழுப்பது - வெளிவிடுவது இரண்டையும்.

உடலுக்குள் சுவாசம் உட்புகுவதையும் வெளிப்படுவதையும் உணர்வதை வளர்த்தல் (மூக்கில் சுவாசக்காற்றின் தொடு உணர்ச்சியைக் கொண்டறிந்து),

தொடக்கத்தில் மனம் அலைபாயத்தொடங்கும் - உள்ளும் புறமுமாய்ச் சுவாசம் செல்வதை உற்றுக் கவனிக்க முயற்சி தேவைப்படுகிறது. இருப்பினும் மீண்டும், மீண்டும், அடிக்கடி பயிற்சி செய்வதால் ஒருவர் நீண்ட நேரத்திற்குச் சுவாச விழிப்புடைமையைக் கூர்ந்து கவனித்தலை ஒருமுகப்படுத்த முடியும்.

'சுவாசத்தில் விழிப்புடைமை' (**ஆநாபாநசத்தி**) என்பது வெறும் சுவாசப்பயிற்சியன்று - அது கவனமுடைமையில் பயிற்சியாகும். சுவாச விழிப்புடைமையால் அடையப்படும் கவன-முடைமை நன்கு பயிற்சி செய்து வளர்க்கப்படுமாயின் அது மனத்தை அமைதியுடையதாகவும், உன்னதமானதாகவும் ஆக்குகிறது.

"ஆனந்தரே!" தியானியுங்கள் - தாமதிக்காதீர்கள் - அதற்காகப் பின் வருந்தநேரும் - இதுவே தங்களுக்கு என் போதனை என்று புத்தர் தம் சீடரான ஆனந்தருக்குக் கூறினார் (19).

'மனத்தைக் கட்டுப்படுத்துதல் நன்று
மகிழ்ச்சியை அளிப்பது கட்டுடை மனமே"

- தம்மபதம் 35.

அத்தியாயம் 17

நிப்பாணம்

நிப்பாணம் என்பது உன்னதமான இன்ப நிலையாகும். அது துன்பமிலா வாழ்நிலையாகும். அதுவே மூன்றாவது உன்னத வாய்மையாகும்.

பவுத்தர்களின் இறுதி இலக்கு நிப்பாணமே. இதுவே பவுத்த இலட்சியம்.

நிப்பாணம் இவ்வாழ்விலேயே அடையப்படுவது - இறந்தபின் அடையப்படுவதன்று. எடுத்துக்காட்டாக புத்தர் தமது 35வது வயதில் **நிப்பாணம்** எய்தி 80வது வயது வரை உயிர்வாழ்ந்தார்.

அவாவை அறவே அறுப்பதன் மூலமும் உன்னத எண்வழிப்பாதையைப் (நான்கு உன்னத வாய்மைகள்) பின்பற்றுவதன் மூலமும் அடையப்படுவதாகும்.

பேராசை, வெறுப்பு, ஏமாற்றல் ஆகியவற்றைக் கைவிடுவதன் மூலம் அடையப்படுகிற முழுமையான மன அமைதியே நிப்பாணமா-கும். நிறைவான மன அமைதியே எல்லையிலா இன்பம். அமைதியுறுகிற, சாந்தமான இவ்வின்பம் பற்றுக்களைக் களைவதன் மூலம் பெறப்படுகிறது.

நிப்பாணம் என்பது ஐம்புலன்களால் உணரப்படுவதன்று. உதாயியின், "ஈண்டு புலனுணர்வு இல்லையாயின் என்ன இன்பம் இருக்க முடியும்!" என்ற வினாவிற்கு புத்தரின் தலைமைச் சீடரான சாரிபுத்ரா பதிலிறுத்தார்: "புலனுணர்வு இன்மையே பேரின்பந்தான்". மெய்யறிவால் உணரத்தக்க மேனிலைப் பேரின்பமே நிப்பாணம்.

நிப்பாணம் எய்தியவர் எவரோ அவர் தானெனும் அகந்தை நிலையின் எல்லா வகைகளினின்றும் விடுபட்டவராவார். 'தான்' எனும் கருதுகோளே இனியில்லை. தானெனும் போலியுணர்வு வேரோடு களைப்பட்டு விடுகிறது. அவாவும், அறியாமையும் உடைய பிறப்பு அறுக்கப்படுகிறது. மனம் எதனோடும் பந்தப்படுவதில்லை - உருவாக்கம் நின்று போகிறது. பிறப்பு இறப்பு இரண்டினின்றும் அவர் விடுபட்டுவிடுகிறார்.

நிப்பாணம் என்பது ஒருவர் புகும் இடமன்று (சொர்க்கம் என்பதுபோல). போற்றுதலுக்குரிய நாகசேனர், மன்னர் மிலிண்டாவின் "நிப்பாணம், எந்தப் பகுதியில் உள்ளது" என்ற

வினாவிற்கு அளித்த பதிலில் "மாமன்னரே! நிப்பாணம் உள்ள இடப்பகுதி எங்கனும் இல்லை. இருப்பினும் நிப்பாணம் உள்ளது. தீ இருக்கும் இடம் என ஓரிடம் எங்கணும் இல்லையாயினும், மனிதன் ஒரு விறகை மற்றொன்றுடன் கடைந்து தீயை உண்டாக்குகிறான் அல்லவா - அது போலவே நிப்பாணம் எங்கணும் இல்லையாயினும் முயற்சியால் அடையப்படுகிறது".

நன்னடத்தையையும், மெய்யறிவையும் நிறைவுறச் செய்வதன்மூலம் எய்தப்படும் முழுமையான அக மாற்றமே நிப்பாணமாகும். நிப்பாணம் என்பது அனுபவிக்கத் தக்கதேயன்றி வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாததாகும். இனிப்பை உணர, ஒருவர் சர்க்கரையைச் சுவைக்கவேண்டுமேயன்றி, அச்சுவையை வார்த்தைகள் உண்மையாய் வெளிப்படுத்த முடியாததைப் போலவே, நிப்பாணப் பேரின்பமும் உணரப்படவேண்டிய ஒன்றாகும்.

வெப்பம் உள்ளதைப் போலவே - குளிர்ச்சியும் உண்டு
தீமை உள்ளதைப் போலவே - நன்மையும் உண்டு
இருள் உள்ளதைப் போலவே - ஒளியும் உண்டு
துக்கம் உள்ளதைப் போலவே - நிப்பாணமும் உண்டு.

வளரும் விழிப்புணர்வால் பிறப்பிறப்பென்னும் சுழற்சியை நிறுத்த முயலுவோம் நாமே!

துன்பம் முற்றாய்த் தீர்ந்ததோர் நிலையை எய்திடும் வரையில் தளரமாட்டோமே!

அத்தியாயம் 18

அரஹந்த்

(அறவோர்)

நிப்பாணம் எய்தியவர் அரஹந்த் என அழைக்கப்படுகிறார். பல அரஹந்த்களில் புத்தரே, நல்வழி கண்டவர், மிகவும் உன்னதமானவர். புத்தர் காட்டிய பாதையைப் பின்பற்றி அரஹந்த் நிலை எய்தியவர்களே பிறர்.

உன்னத எண்வழிப்பாதையின் படி, நன்னெறி, நற்கவனம், மெய்யறிவு ஆகிய தன்மைகளை ஒருவர் வளர்ப்பதன்மூலம், படிப்படியான இலக்குகளை மெல்லமெல்ல அடைகிறார்;

1) தொடக்க நிலை **(சோதாபன்ன)**

2) இடைநிலை **(சகதாகாமி)**

3) இறுதிநிலை **(அநாகாமி)**

4) பூரண ஞானநிலை **(அரஹந்த்)**

பூரண ஞான நிலை அல்லது நிப்பாணம் என்னும் நான்காம் நிலையே பவுத்தர்களின் இலக்காகும். எவரொருவர் உன்னத எண் வழிப்பாதையின் நோக்கத்தை, அடைகிறாரோ, அதை நிறைவு செய்கிறாரோ அவரே, அடையத்தகுந்ததை அடைந்த 'அரஹந்த்' - அறவோர் ஆவார்.

பவுத்தத்தின்படி, ஈண்டு, பத்துத்தளைகள், அல்லது தீய மனநிலைகள் ஒருவனை இருப்புச் சுழற்சியுடன் (பிறப்பு, இறப்பு, சம்சாரச் சுழற்சியுடன்) பிணைக்கின்றன. அவையாவன:

1. 'அகம்' என்பதில் நம்பிக்கை (தான் என்பதில் நம்பிக்கை) **(சக்காய திட்டி).**

2. அய்யம் **(விசிகிச்சா).**

3. சடங்கு சம்பிரதாயங்களை நம்பி இருத்தல் **(சீலப்பதபராமாச).**

4. புலன் இன்ப ஆசைகள் **(காமம்)/(காமச்சந்த),**

5. தீயநோக்கம் **(வ்யாபாத).**

6. அருஉருவ வாழ்வில் அவா **(ரூபராக).**

7. அருவ வாழ்வில் அவா **(அரூபராக).**

8. தற்பெருமை **(மான).**

9. பதட்டம் **(உத்தச்ச).**

10. அறியாமை **(அவிஜ்ஜா).**

1லிருந்து 3வரையான தன்மைகளிலிருந்து விடுபட்டவர் தொடக்க நிலையை அடைகிறார் **(சோதாபன்ன).** 1லிருந்து 3வரையான தன்மைகளிலிருந்து விடுபட்டதோடு, 4, 5ன் மொத்தத் தன்மைகளையும் வென்றவர் இடைநிலையை அடைந்தவராகிறார் **(சகதாகாமி).** 4,5அய் முற்றாக ஒழித்தவர் 1லிருந்து 5வரையிலான தன்மைகளிலிருந்து முற்றாய் விடுபட்டு இறுதிநிலையான **அநாகாமி** ஆகிறார். எவரொருவர் பத்துத்தளைகளிலிருந்து விடுபட்டவரோ அவர் பூரண ஞானம் எய்திய, மதிப்பிற்குரிய **அரஹந்த்** – அறவோர் ஆகிறார். (21)

அரஹந்த் நிலை 'மனத்தை மாசற்றதாக்கி வளர்க்கும்' முறைமையால் அடையப்படுவதாகும். உரையை, செயலை (நன்னடத்தையால்), ஒழுங்குபடுத்தி வளர்ப்பதாலும், மனத்தைக் கட்டுப்படுத்துவதாலும் (நற்கவனத்தால்) உள்நோக்கை வளர்ப்பதாகும் (மெய்யறிவால்) - அதாவது உன்னத எண்வழிப்பாதையைப் பின்பற்றுவதால் இது அடையப்படும்.

ஒரு அறஹந்த் - அறவோர்க்குப் பற்றுக்கள் ஏதும் இல்லை. அவர், "நான்", "எனது" என்னும் அகந்தை அடையாளம் அற்றவராய், "இதுவற்றவர் அது அற்றவர்' எனக்கூற முடியாதவராய் உள்ளார்.

ஒரு அரஹந்த் (அறவோர்) முழு நிறைவான மெய்யறிவும் கருணையும் உள்ளவராவார். அவர் அனைத்துக் கவலைகள், ஒருமையின்மை மற்றும் துன்பம் ஆகியவற்றின்று விடுபட்டு - மாசுகள் அனைத்தும் நீங்கியதன் பயனையும், எல்லையிலா இன்பம், அமைதி ஆகியவற்றையும் அனுபவிப்பராய் உள்ளார்.

அவாவுறுவோர் இடையே நாம்
அவாவற்று வாழ்கிறோம் இன்பமாய்.
வெறுப்புறுவோர் இடையே நாம்
வெறுப்பற்று வாழ்கிறோம் இன்பமாய்
நலமற்றோர் இடையே நாம்
நலமுற்று வாழ்கிறோம் இன்பமாய்
குறைவுற்றோர் இடையே நாம்
குறைவற்று வாழ்கிறோம் இன்பமாய்.

–தம்மபதம் 197–199.

அத்தியாயம் 19

சங்கம்

சங்கம் என்பது துறவோரின் சமூகம், அல்லது பவுத்த பிக்குகளின் முறைமையாகும்.

பவுத்த பிக்குகளின் சங்கம் அய்ந்து துறவோரோடு - புத்தரின் போதனைகளை முதலில் கேட்ட அய்வரோடு தொடங்கியதாகும். விரைவில் அது உன்னதமான அறுபது சீடர்களை உடையதானது - அதன்பின் துறவோரின் சமூகம் விரைந்து பெருமளவுடையதாய் வளர்ந்தது.

முதல் அறுபது உன்னத சீடர்கள் கூடியபோது புத்தர் அவர்களை விளித்து உரைத்தார்: "மிகப்பலரின் நன்மைக்காக - மிகப்பலரின் இன்பத்திற்காக - உலகின்பால் கருணையோடு மானுடர் - தேவர் யாவர்க்கும் நலமும் இன்பமும் அளிப்பதற்காகச் செல்லுங்கள் பிக்குகளே ... ஓ பிக்குகளே! தொடக்கத்தில் சிறந்த - தொடர்ச்சியில் சிறந்த - இறுதியிலும் சிறந்த தம்மத்தைப் போதியுங்கள்".

கடந்த காலங்களில் இருந்தது போலவே, தற்காலத்திலும் அர்ப்பணிப்பும் - முறைமையும் - இலட்சியவேகமும் கொண்ட உயர்வுற்ற பிக்குகள் புத்தரின் அழகிய போதனையைப் பரப்பி அனைவரின் நலத்திற்காகவும் உழைத்து வருகிறார்கள்.

பவுத்த பிக்கு ஆவதால் என்ன பயன்? புத்தர் கூறுகிறார்;

இன்பங்கள் இருவிதமானதாய் உள்ளன
ஓர் இன்பம் இல்லறத் தாரின்பம் - மற்றும்
ஓர் இன்பம் துறவறத் தாரின்பம் - இவ்விரண்டில்
துறவியின் இன்பம் உயர் நிலையாகும் (10).

பவுத்த பிக்கு ஆவதில் என்ன இன்பம் உள்ளதெனப் புரிந்து கொள்ளுதல் இல்லறத்தார்க்குக் கடினமாகும். ஒருவர் தன் வாழ்க்கையைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தல் இதற்கு உதவக் கூடும். சிறுகுழந்தையாயிருக்கையில் ஒருவர் இனிப்புகளை, பொம்மைகளை, தேவதைக் கதைகளை விரும்புவார் - வாலிபப்பருவத்தில் இவற்றில் உள்ள ஆர்வம் இழந்துவிடுகிறார் எனினும் ஆடல்-பாடல்-கூடல்-வீர-விளையாட்டு ஆகியவற்றில் நாட்டமுடையவராயிருக்கிறார். இருப்பினும் வயது செல்லச்செல்ல - பக்குவமுற்று மதிப்பீடுகள் மாறுகின்றன.

பவுத்த பிக்கு ஆதல் என்பது மிகுந்த மெய்யறிவின் உயர்ந்த பக்குவத்தின் அடையாளமாகும்.

"இன்பங்கள் இருவிதமானதாய் உள்ளன.
ஓர் இன்பம் புலனின்பம் - மற்றும்
ஓர் இன்பம் துறவின்பம் - இவ்விரண்டில்
துறவின்பமே மிக்க உயரின்பமாகும்" (10)

"அனைத்தும் தீயில்" என்னும் பேருரை பிக்குகளுக்குப் புத்தரால் வழங்கப்பட்டது.

கண்கள் தீயில் - காட்சிகள் தீயில்
காதுகள் தீயில் - ஒலியெல்லாம் தீயில்
மூக்கும் தீயில் - வாசம் தீயில்
நாக்கும் தீயில் - சுவையும் தீயில்
உடல் தீயில் - ஸ்பரிசம் தீயில்
மனம் தீயில் - நினைப்பும் தீயில்

இங்கு 'தீ' என்பது 'மாற்றத்தை' - அதிருப்தி
'நிலையைக்' குறிப்பதாகும்.

அருஞ்சுவை உணவும் புளித்துப்போகும்
அழகுமிகு உடலும் இறுதியில் அழுகிப் போகும்.

'தீ' அல்லது 'மாறுதலைப்' புரிந்துகொள்ளுதல் என்பது விரக்திதத்துவமன்று. அது புலன்களின் உண்மை இயல்பை உணர்வதேயாகும். இதையறிந்து காணும் அறிஞர் பற்றற்ற வராகிறார். பற்றற்ற தன்மையால் பேராசை பறந்து போகிறது - மனம் விடுதலையாகிறது.

எனவே அறிவுடை மக்கள், சிறந்த நற் காட்சியோடும் தேர்ந்த நல் லுணர்வோடும் பவுத்த பிக்குகளாக ஆகின்றனர்.

"குறைவுள இன்பத்தைக் கைவிட்டுவிடுவதால்
குறைவிலா பேரின்பம் காண்பரேயாயின்
குறைவுள இன்பம் தன்னைத் துறந்து
குறைவிலா பேரின்பம் கருதுவர் அறிவோர்"

– தம்மபதம் 290.

இல்லறப் பற்றுகளுக்குக் கட்டுப்படுத்தப்படாததாலும், குடும்பக் கவலைகள் இல்லாமையாலும் ஒரு பவுத்தபிக்கு தன்னலமின்றி சமுதாய நன்மைக்காக மிக அதிகமாகச் செயல்பட முடியும். "சங்கமுறைமை, ஒரு பிக்கு தமது உயர்நெறி

உய்வுக்கும், மெய்யறிவு வளர்ச்சிக்கும் மட்டுமன்றி பிறர்க்கெனத் தொண்டுபுரிய அவருக்கு வாய்ப்பளிக்கிறது". (22).

அவருடைய சீடர்கள் ஏன் ஒளிமிக்கவர்களாக உள்ளனர் என வினவப்பட்டபோது புத்தர் பதிலிறுத்தார்:

"கடந்தவை எதற்கும் அவர்கள் கவலையுறுவதில்லை.
எதிர்காலம் பற்றியெந்த எதிர்பார்ப்பும் அவர்கட்கில்லை.
நிகழ்காலம் ஒன்றே அவர்கட்குப் போதுமானது.
எனவேதான் அவர்கள் ஒளிமிகுதோற்றம் உடையவராயுளர்". (23)

மும்மணிகள்

ஒரு பவுத்தர்:

புத்தரை வழிகாட்டியாய் ஏற்கிறார்.

தம்மத்தை வழிகாட்டியாய் ஏற்கிறார்.

சங்கத்தை வழிகாட்டியாய் ஏற்கிறார்.

இவைகள் 'மும்மணிகள்' என வழங்கப்படுகின்றன. 'மூன்று அடைக்கலங்கள்' அல்லது 'திஸ்சரணம்' என வழங்கப்படுபவையும் இவையே.

"இந்த அடைக்கலம் மிகவும் பாதுகாப்பானது.
இந்த அடைக்கலம் மிகவும் சிறந்தது.
இந்த அடைக்கலம் தன்னில் ஈண்டு
துன்பத்தினின்று விடுதலை கிட்டும்.

–தம்மபதம் 192

அத்தியாயம் 20

அறவியல்

பவுத்தத்தின் அடிப்படைக் கோட்பாடு பஞ்சசீலமெனும் அய்ந்தொழுக்க அறத்தை நடைமுறைப்படுத்துவதேயாகும். அய்ந்தொழுக்கம் என்பது யாது? அவையாவன :

நான் -

1. கொல்லமாட்டேன்

2. பிறர்பொருள் கவரமாட்டேன்

3. பிழையுறுகாமச் செயல்களில் ஈடுபட மாட்டேன்

4. பொய்புகல மாட்டேன்.

5. போதைப் பொருள்களை அருந்தமாட்டேன்.

இந்த அய்ந்து ஒழுக்கங்கங்களும் சுருக்கமாய்க் குறிப்பிடப்பட்டுள்ளன - அவற்றின் விரிவான உள்ளடக்கங்களின் நோக்கங்கள் கீழ்வருமாறு :

1. 'கொல்லுதல்' என்பது துன்புறுத்தல், வலியுண்டாக்கல், இழிவுபடுத்தல், எவ்வுயிர்க்கும் இன்னா செய்தல் அனைத்தையும் குறிப்பதாகும்.

2. 'பிறர் பொருள்கவறல்' - என்பது தரப்படாத பொருளை எடுத்துக்கொள்ளுதல், இலஞ்சம் வாங்குதல், ஊழல் நடவடிக்கைகள் அனைத்தையும் குறிப்பதாகும்.

3. 'பிழையுறுகாமம்' - என்பது விபச்சாரம், ஒழுக்கமில்லா நடத்தை - புலன்களைத் தவறாகப் பயன்படுத்துபவை அனைத்தையும் குறிப்பதாகும்.

4. 'பொய்ம்மை' என்பது - பொய்கள், கடுஞ்சொற்கள், புறங்கூறல், வீணுரை பேசல் ஆகிய அனைத்தையும் குறிப்பதாகும்.

5. 'போதை' என்பது - போதை மருந்து, குடிவகைகள், புகைத்தல் அனைத்தையும் குறிப்பதாகும்.

இந்தப் போதனைகள் எதிர்மறைக் குறிப்புகளாகக் கடுமையான விளைவுடையனவாகக் கொள்ளப்பட்டுள்ளன உடன்பாட்டு வகையும் இதில் நன்கு உள்ளடங்கியுள்ளன.

எதிர்மறைக்கூறுகள்	உடன்பாட்டுக்கூறுகள்
1. நான் கொல்லவோ, துன்புறுத்தவோ மாட்டேன்.	நான் அனைத்துயிர்கட்கும் அன்புகாட்டுவேன்.
2. நான் பிறர் பொருள் கவர மாட்டேன்.	பிறரின் உடைமை உரிமையை மதிப்பேன்.
3. நான் பிழையுறு காமத்திலோ தவறான புலன் நுகர்ச்சியிலோ ஈடுபட மாட்டேன்.	நான் நல்லொழுக்க நன்னெறியில் புலனடக்கமுடையவனாய் நடப்பேன்.
4. நான் பொய்புகல மாட்டேன் கடுஞ்சொற்கள், புறங்கூறுதல் வீணுரைபேசல் ஆகியவற்றைத் தவிர்ப்பேன்.	வாய்மையே பேசுவேன்- கனிவான அவசியமான பயனுடைய சொற்களை மட்டுமே பேசுவேன்.
5. நான் போதைப் பொருள்களை அருந்த மாட்டேன்.	நான் தெளிந்த மனமுடையவனாக இருப்பேன்.

இந்த ஐந்தொழுக்கங்களும் நாள்தோறும் கடைப்பிடிக்கப்பட வேண்டியவை.

எட்டு ஒழுக்கங்கள்
(அட்டாங்கசீலம்)

குறிப்பிட்ட காலங்களில் எண் ஒழுக்கங்கள் ஏற்கப்பட வேண்டும். மாதத்திற்கொருமுறையோ, இருமுறையோ, வாரத்திற்கொரு முறையோ, வழக்கமாக இவ்வெட்டு ஒழுக்கங்கள் ஏற்கப்படுகின்றன.

இவ்வெட்டு ஒழுக்கங்கள் யாவை?
அவையாவன: -

நான்-

1. கொல்லமாட்டேன்.
2. பிறர்பொருள் கவரமாட்டேன்.

3. எந்தக் காமத்திலும் ஈடுபடமாட்டேன்.
(பிரம்மச்சரியம் கடைப்பிடிப்பேன்).

4. பொய்புகல மாட்டேன்.

5. போதைப் பொருள் அருந்தமாட்டேன்.

6. நடுப்பகலுக்குப் பின் உணவேதும் ஏற்க மாட்டேன்.

7. ஆடல், பாடல், இசை, களிப்புக் காட்சிகள் ஆகியவற்றில் ஈடுபடவோ, ஆபரணங்கள், மாலைகள், நறுமணத் திரவியங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தவோ மாட்டேன்.

8. ஆடம்பரமான உயர்ந்த இருக்கைகளையோ, படுக்கைகளை-யோ ஏற்கமாட்டேன்.

நாள்தோறும் அய்ந்தொழுக்கங்களையும், அவ்வப்போது எட்டொழுக்கங்களையும் கடைப்பிடித்தல் ஒழுக்கத்தைக் கொணர்ந்து படிப்படியாக புலன் நுகர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவலை அதிகரிக்கும்.

கண்களைக் கட்டுப்படுத்துதல் நன்று - செவியினைக் கட்டுப்படுத்துதல் நன்று.

நாசியைக் கட்டுப்படுத்துதல் நன்று - நாவினைக் கட்டுப்படுத்துதல் நன்று.

உடலினைக் கட்டுப்படுத்துதல் நன்று - உரையினைக் கட்டுப்படுத்துதல் நன்று.

மனத்தினைக் கட்டுப் படுத்துதல் நன்று - நன்று எதிலும் எங்கும் கட்டுப்பாடே!

- தம்மபதம் 361.

பவுத்த அறவியல்விதி, தருபவர் எவரையும் பொறுத்த தாயில்லை. இவை வற்புறுத்தலின் பேரிலோ ஆணைகளின்பேரிலோ கட்டாயப்படுத்தபடுபவையன்று. தாமாக ஒருவர் தம் விருப்பப்படிஏற்று, கடைப்பிடிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்களே இப்போதனைகள்.

ஒருவர் தாமே புரிவதே தீமையென்பது
ஒருவர் தம்மைத் தாமே மாசாக்குவது.
ஒருவர் தாமே தீமையைத் தவிர்த்து விடுவது.
ஒருவர் தாமே தம்மைத் தூயராக்குவது

– **தம்மபதம் 165**

முதன்மையான நன்னடத்தைகள் :

நான்கு முதன்மையான நன்னெறிகள் அல்லது மாண்புறு நோக்குகள் (பிரம்ம விஹாரா) என வளப்படுத்தப்பட வேண்டியன;

1. அன்புறு நேயம் (மெத்தா)
2. கருணை (கருணா)
3. இரக்க நல்லின்பம் (முதிதா)
4. நிதானம் (உபேக்கா)

1. அன்புறுநேயம் - அனைவரும் இன்புற்றிருக்கவும் நன்மையுறவும் விழைதல். நல்லுறுதியோடு தோழமை சார்ந்த நன்மைபுரியும் விருப்பம். புத்தரால் வலியுறுத்தப்பட்ட இலட்சியம்: "ஒரு தாய் தன் ஒரே குழந்தையின்பால் காட்டும் அன்பையொத்த நேயத்தை ஒருவர் அனைவர்க்கும் காட்ட வேண்டும்".

2. கருணை என்பது துன்புறுவோர் அல்லது கவலையிலுள்ளோர்க்கு உதவத் தோன்றுகிற உண்மையான ஆவல். கைம்மாறு கருதாமல் பிறர்க்குதவும் கடப்பாடு.

3. இரக்கமுறு இன்பம் - பிறர் இன்புறுகையிலும் வெற்றிபெறுகையிலும் தாமும் இன்புறுதல். பொறாமை யற்றிருத்தல் - ஆனால் பிறரின் வளத்தினைக் கண்டு மகிழ்ச்சியுறுதல்.

4. நிதானம் - வேண்டுதல் வேண்டாமையால் சலனமடையாதிருத்தல். நல்லனவோ அல்லாதனவோ எதுவாயினும் பற்றற்று நோக்குதல்.

"ஈண்டு இவ்வுலகில் கவனமாய் ஒருவர்
நடத்தையைத் தூயதாய்ப் பயின்றிட வேண்டும்.
யாண்டும் நன்னெறி பண்படுத்தப்படின்
கைமேல் பலனாய் வெற்றியை நல்கும்".

–புத்தர்

நல்லதும் தீயதும்

தீயவை (அகுசலா)

தீய, குறைபாடுடைய, திறனற்ற செயல்கள் மூன்று காரணங்களை அடிப்படியாய்க் கொண்டவை. அவையாவன: (i) பேராசை (ராக); (ii) வெறுப்பு மற்றும் (தோஸ) (iii) போலிக்காட்சி (மோஹ).

பேராசை - பலவழிகளில் வெளிப்படும் - தன்னலம், பெரும் ஆசைகள், பொறாமை, பிறர் பொருள் கவர விழைவு ஆகியவற்றில் வெளிப்படும்.

வெறுப்பு - சினம், தீயவிருப்பு, வன்மம், கீழ்மை, மனக்கசப்பு, பழியுணர்ச்சி, தற்பெருமை ஆகியவற்றில் வெளிப்படும்.

போலி அல்லது தவறான காட்சி - "ஆன்மா" போன்றவற்றில் நம்பிக்கை - நிலையானவை உண்டு என நம்புதல் - இன்பம் போலத் தோன்றும் துன்பத்தை விழைதல் - நல்ல அல்லது தீய செயல்களுக்கு விளைவுகள் ஏதும் இல்லை எனக் கருதுதல்.

பேராசை, வெறுப்பு மற்றும் போலிக் காட்சி ஆகியவற்றைக் குறைக்கவும், தவிர்க்கவும் அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டும். தீமையின் இந்த மூன்று வேர்களும், அவற்றை அறிவுபூர்வமாக நோக்குவதாலும், மெய்யறிவை வளர்த்துக் கொள்வதாலுமே அறுத்தெறியப்பட முடியும்.

பேராசைக்குத் தீனிபோட்டு அதனைத் தடுக்க இயலாது.

வெறுப்புக்கு ஆட்பட்டால் அதை வேரறுக்க முடியாது.

போலிக் காட்சியில் ஈடுபட்டு அதனை பொசுக்க இயலாது.

'மெய்யறிவென்னும்' வாளேந்தி இவற்றை வென்றிடத்தான் வேண்டும்.

நன்மை (குசல)

நல்ல, முழுநிறைவான, திறம் மிக்க செயல்கள் மூன்று காரணங்களை அடிப்படையாகக் கொண்டு விளைவனவாகும். அவையாவன :- (1) ஈகை அல்லது பேராசை இன்மை, (2) அன்புறுநேயம் அல்லது வெறுப்பின்மை, (3) மெய்யறிவு அல்லது போலிக்காட்சியின்மை.

ஈகை, அன்புறுநேயம், மெய்யறிவு ஆகியவற்றை வளர்க்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டும்.

எது நல்லது எது தீயது என அறிவது எப்படி?

எது நல்லது, எது தீயது என அறிவது எப்படியெனக் கண்டறிய புத்தர் ஓர் எளிய வழியைக் காட்டியுள்ளார்.

"தங்களின் செயற்பாடுகள் தங்களுக்கோ, பிறருக்கோ - தங்களுக்கும் பிறருக்குமோ துன்பமிழைப்பதாயிருப்பின் அவற்றைப் புரியாதீர்கள் - அவை திறனற்றவை - குறைபாடுடையவை- தீயவை."

"தங்களின் செயல்பாடுகள் தங்களுக்கோ, பிறருக்கோ - தங்களுக்கும் பிறருக்குமோ துன்பமிழையாததாயிருப்பின் அவற்றைப் புரியுங்கள் - அவை திறனுடையவை, முழு நிறைவானவை - நல்லவை". (24).

ஒருவர் செயல்பற்றிய சிந்தனை அல்லது மறுபரிசீலனையின் முக்கியவத்துவத்தைப் புத்தர் வலியுறுத்தியுள்ளார். சிந்தியுங்கள்: (1) செயல்புரிவதற்கு முன்; (2) செயல்படுகையில்; (3) செயல்புரிந்தபின். உடலால், உரையால், உளத்தால் நிகழும் உங்கள் செயலனைத்தையும் நீங்கள் தொடர்ந்து சிந்திக்கப் பழகவேண்டும். (24)

"ஒருவர் தம்மை பற்றி பிறர் பொருட்டு எண்ணுவாராக. பிறரைப் பற்றி தம்பொருட்டு எண்ணுவாராக. பிறர்க்குத் துன்பமோ, இன்பமோ தமக்கும் அது அவ்வாறேயிருக்க வேண்டும்".

"*தொடர்ந்து ஒவ்வொரு எண்ணத்தையும்,*

உரையையும் செயலையும் பரிசீலியுங்கள்".

சிக்கலான அறவியல் கோட்பாடுகளைத் தீர்மானிக்கும்போது புத்தர் கீழ்க்கண்டவற்றைக் கருதும்படி வலியுறுத்தினார்:- (1) ஒருவரின் தன்னுணர்வு, 2) உலகத்தின் அபிப்பிராயம் மற்றும் 3) தம்மத்தை (மெய்ம்மையை) நாடுங்கள்,

நல்லோர்க்கு நான் நன்மை செய்கிறேன்.
தீயோர்க்கு நான் நன்மை செய்கிறேன்.
எனவே நான் நன்மையே அடைகிறேன்.

— **புத்தர்**

புகழ்ச்சிக்குரிய செயல்கள் பத்து (தஸகுசல)

1. ஈகை (தான) 2. ஒழுக்கம் (சீல), 3. தியானம் (பாவனா) 4) மரியாதை (அபசாயன) 5. தொண்டு (வெய்யா வச்ச) 6. பகிர்ந்து கொள்ளல் (பத்திதான) 7. பிறரின் நற்செயல்களில் மகிழ்தல் (அநுமோதனா) 8. தம்மத்தைச் செவிடுமத்தல் (தம்மசவன) 9. தம்மத்தை விவரித்தல் (தம்மதேசனா) 10. கருத்துக்களைச் சீர்படுத்துதல் (திட்டிஜ்ஜுகம்ம)

புகழ்ச்சிக்குரிய அறச் செயல்களை இடையறாமல் முறையாகப் புரிதல் வேண்டும்.

"ஒல்லும் வகையான் அறவினை ஒவாதே
செல்லும் வாயெலாம் செய்திடல் வேண்டும்
நல்லறம் நாளும் மகிழ்ச்சியை நல்கும்
நல்லன குவிந்து நற்பே றாகும்".

- தம்மபதம் 18

இகழ்ச்சிக்குரிய செயல்கள் பத்து (தஸஅகுசல)

உடலால், உரையால், உளத்தால் புரியப்படுகிற செயல்களில் பத்து, இகழ்ச்சிக்குரியனவாகும்.

அ) உடலால் புரியப்படும் மூன்று இகழ்ச்சிக்குரிய செயல்களாவன : 1. கொலை 2. களவு 3. விபச்சாரம் (பாலின்பத்தில் பிழையான நடத்தை)

ஆ) உரையால் புரியப்படும் நான்கு இகழ்ச்சிக்குரிய செயல்களாவன: 1. பொய்யுரைத்தல் 2. கடுஞ்சொற்களுரைத்தல் 3. புறங்கூறல் 4. வீணுரைபுகல.

இ) உளத்தால் புரியப்படும் மூன்று இகழ்ச்சிக்குரிய செயல்களாவன : 1. அவா 2. பகைமை 3. தவறான கருத்துக்கள்.

மேற்கண்ட தீய சிந்தனைகள், சொற்கள் மற்றும் செயல்கள் தவிர்க்கப்படவேண்டியவையாகும்.

"ஒருவன் தீச்செயல் புரிந்திட நேர்ந்திடில்
மறுமுறை அதனைப் புரியலாகாதே.
புரிகிற தீச்செய லால் மகிழ் வுறாதே.
பெருந்துய ரளித்திடும் தீமைகள் சேர்ந்தே".

–தம்மபதம் 117.

சினத்தின் கீழ்மை

சினமுறும் ஒரு மனிதனுக்கு ஏழு தீமைகள் நேர்கின்றன:- அவன் 1) அசிங்கமாகிறான். 2) துன்பத்தில் தோய்கிறான் 3) பொருள்வளம் இழக்கிறான் 4) செல்வந்தனாவதில்லை 5) புகழ் பெறமாட்டான் 6) நண்பர்கள் அற்றவனாய் இருக்கிறான் 7) மறுமையிலும் துன்பநிலையே உறுகிறான்.

சினத்தை வெல்ல ஆறு வழிகள் உள்ளன:

1) அன்புறுநேயம் வளர்த்தல் 2) கருணையை வளர்த்தல் 3) நிதானத்தை வளர்த்தல் 4) தமக்கு இழைக்கப்பட்ட இன்னாச் செயல்களையும், இழைத்தவனையும் மறத்தல் 5) ஒருவன் தன் செயல்களுக்கே வாரிசுரிமையுடையவன் என்பதை நினைத்து அமைதியாயிருத்தல். (25)

பகைவர் இடையிலும் நட்புடனிருத்தல்
வன்முறைக் கிடையிலும் அமைதியாயிருத்தல்
பற்றுளோர் இடையிலும் பற்றற்றிருத்தல்
உற்றவ உன்னத மனிதர் என்பேனே,

– தம்மபதம் 406.

வேண்டத்தக்க அய்ந்து

வேண்டத்தக்க அருமையான அய்ந்து நலன்கள்:

1) நீண்ட வாழ்நாள் 2) அழகு 3) இன்பம் 4) புகழ் 5) இன்பமான மீள் உருவாக்கம் (17)

ஆனால் இந்த அய்ந்து நலன்களும் பிராத்தனைகளாலோ, விரதங்களாலோ பெறக்கூடியன அல்ல - ஆனால் அறிவுற்ற செயற்பாட்டினால் அடையக்கூடியனவாகும். ஒருவர் நீடு வாழ விரும்புவாரேயாயின், அவர் நீள்வாழ்வுக்குப் பொருத்தமான வாழ்முறைப் பாதையைப் பின்பற்ற வேண்டும் - எடுத்துக்காட்டாக அவர் நன்கு தம் உடல்நலத்தைப் பேணுதல் வேண்டும். இதேபோன்று சரியான செயற்பாட்டின் மூலம் நல்வழியில் ஒருவர் அழகை, இன்பத்தை, புகழை, இன்பமயமான மீள் உருவாக்கத்தை எய்த இயலும்.

ஆழ்ந்த சிந்தனைகள் அய்ந்து

கீழ்க்கண்டவற்றை ஆழ்ந்து சிந்தித்தல் நன்று.

1. நான் நிச்சயம் முதுமை அடைவேன் -
நான் முதுமையுறுவதைத் தவிர்க்க இயலாது.

2. நான் நிச்சயம் பிணியுறுவேன் - நான் பிணியுறுவதைத் தவிர்க்க இயலாது.

3. நான் நிச்சயம் இறப்பேன் - நான் இறப்பதைத் தவிர்க்க இயலாது.

4. விருப்பிற்குரிய பாசத்திற்குரிய அனைத்தும் மாறுதலுக்குட்பட்டதே.

5. நான் என் செயல்களுக்குப் பொறுப்பானவன் (கம்மா) (17)

இத்தகைய ஆழ்சிந்தனைகள் தற்பெருமையைத் தவிர்ப்பனவாகும் - அவாவைக் குறைப்பனவாகும் - ஒருவரை அடக்கமுடையவராய்ச் செய்வனவாகும் - தீமையைத் தடுத்து நன்மையை ஊக்குவிப்பவனவாகும்.

உலகியல் நிலைப்பாடுகள் எட்டு:

ஈண்டு எட்டு உலகியல் நிலைப்பாடுகளை மனிதர் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இலாபமும் நட்டமும்.

புகழும் இகழ்வும்.

போற்றுதலும் தூற்றுதலும்.

இன்பமும் துன்பமும். (3)

விரும்பியது நிகழ்ந்து விட்டால் ஒருவர் பெருமிதம் கொள்வதோ, விரும்பாதது நிகழ்ந்து விட்டால் வருத்தத்தில் தோய்வதோ கூடாது. வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளைக் கண்டு சலனமடையாமல் அமைதியாயிருக்கும் மனத்திண்மையை ஒருவர் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

"செல்வவள மாற்றத்தால் சிதைவுறா
உள்ளமே வாழ்விற்சிறந்த பேறாகும்".
"அசைவிலாமல் புயலைத் தாங்கும்
உறுதியான பாறைபோல்

அசைவிலாமல் உறுதி கொள்வர்
அறிஞர் போற்றல் தூற்றலில்".

– தம்மபதம் 81

பத்து நிறைவுகள்: (தஸ பாரமிதா)

உன்னத நற்குணங்கள் என ஒரு மனிதன் வளர்க்கத்தக்கவை பத்து:-

என்றும் ஈகை, நன்னெறி, துறவு,
ஊக்கம், மெய்யறிவு ஆகியவை அய்ந்து.
நன்று பொறையுடைமை, மெய்ம்மை,
நல் லுறுதி, அன்பு, நிதானம் ஆக அனைத்தும் பத்து.

இந்தப் பத்து அறச்செயல்களை மீண்டும் மீண்டும் எண்ணுதலும் ஆர்வத்துடன் செயற்படுத்துதலும் மிகமிக நன்று.

1. நான் ஈகையும், உதவியும் உடையவனாய் இருப்பேன். (தான பாரமிதா)
2. நான் தூய்மை, நன்னெறி, நல்லொழுக்கம் உடையவனாய் இருப்பேன். (சீல பாரமிதா).
3. நான் தன்னலம், அகந்தையற்றவனாய், பிறர்நலம் பேணும் தியாகியாய் இருப்பேன். (நெக்கம்ம பாரமிதா).
4. நான் அறிவுடையோனாய், என் அறிவின் பயனைப் பிறர்க்களிப்போனாய் இருப்பேன். (பஞ்ஞா பாரமிதா).
5. நான் கடும் உழைப்பாளியாய், ஊக்கமுடையவனாய், விடாமுயற்சியுடையவனாய் இருப்பேன். (விரிய பாரமிதா).
6. நான் பொறையுடையவனாய், பிறர் புரியும் இன்னாச் செயல்களைப் பொறுத்துக்கொள்பவனாய் இருப்பேன். (கந்தீ பாரமிதா)
7. நான் நேர்மையும், வாய்மையும் உடையவனாய் இருப்பேன். (சச்க பாரமிதா)
8. நான் அன்பும், கருணையும், நட்பும் உடையவனாய் இருப்பேன். (அதிட்டான பாரமிதா)
9. நான் பணிவும், அமைதியும், சலனமற்ற தன்மையும் தெளிவும் உடையவனாய் இருப்பேன். (மெத்தா பாரமிதா)

10. நான் நிறைவெய்தத் தொண்டாற்றுபவனாய் இருப்பேன். நான் தொண்டாற்றுவதில் நிறைவெய்துபவனாய் இருப்பேன். (26) (உபெக்கா பாரமிதா)

தீமை தவிர்.
நன்மை புரி.
மனத்துக்கண் மாசற்றிரு.

இதுவே புத்தரின் அறவுரை.

அத்தியாயம் 21

அரசியல் சிந்தனைகள்

புத்தரின் குறிப்பிட்ட சில பேருரைகள் நல்ல அரசுக்கான பரிந்துரைகளை வழங்கியவைகளாக உள்ளன. புத்தரின் போதனைகளில் இருந்த தொகுக்கப்படக் கூடிய சில அரசியல் சிந்தனைகளாவன:-

அரசர் (ஆட்சியாளர்) மக்களிடமிருந்தே அதிகாரம் பெறுகிறவராவார். மக்களின் ஒப்புதல் பேரிலேயே அரசர் தெரிவு செய்யப்படுவது சிறப்பாகும். ஆட்சி புரிவதில் வழிகாட்டும் கொள்கையாயிருக்கத் தக்கது நேர்மையேயாகும்.

ஒரு நாட்டின் எழுச்சியோ, வீழ்ச்சியோ ஆட்சியாளரைப் பொறுத்ததேயாகும். "ஒரு நாட்டின் ஆட்சியாளர் நீதிமானாகவும், நல்லோராகவும் இருப்பாராயின், அமைச்சர்களும் நீதிமான்களாகவும் நல்லோராகவும் ஆவர். அமைச்சர்கள் நீதிமான்களாகவும், நல்லோராகவும் இருப்பின், உயர் அதிகாரிகள் நீதிமான்களாகவும், நல்லோராகவும் ஆவர். உயர் அதிகாரிகள் நீதிமான்களாகவும், நல்லோராகவும் இருப்பின், கீழ்நிலை அதிகாரிகள் நீதிமான்களாகவும், நல்லோராகவும் ஆவர்.

கீழ்நிலை அதிகாரிகள் நீதிமான்களாகவும், நல்லோராகவும் இருப்பின், மக்களும் நீதிமான்களாகவும், நல்லோராகவும் ஆவர்" (27). இவ்வாறாக நாடு வளமுறும்.

ஆட்சியாளர் ஊழலுடையவராய் இருப்பின், அமைச்சர்களும், அதிகாரிகளும் ஊழலுடையவர் ஆவர். மக்கள் வன்முறையாளராகவும், முரடர்களாகவும் ஆகி நாடு சீரழியும்.

ஆட்சியாளர்கள் கற்றோராகவும், அறிவுடையோராகவும், அறிஞர்களாகவும், ஆற்றல் உடையோராகவும் இருக்கவேண்டும். மேலும் அவர்கள் ஈகையுடையோராய், கனிவாய்ப் பேசுவோராய், பயன்மிக்க செயலுடையோராய், நடுவுநிலையுடையோராய் இருக்க வேண்டும்.

அரசர்க்குரிய பத்து நன்னெறிகள் என (தச இராஜ தம்மா) வழங்கப்படுபவை: 1. ஈகை, 2. ஒழுக்கம், 3. தியாகம், 4. நேர்மை 5. இரக்கம், 6. நன்னடத்தை, 7. வெறுப்பின்மை, 8. அஹிம்சை 9. பொறையுடைமை, 10. நட்புடைமை.

வஜ்ஜியர்களைப் பற்றிப் பேசுகையில், புத்தர், அவர்கள் தம் ஆட்சியாளர்கள், கீழ்காணும் ஏழு கொள்கைகளைப் பின்பற்றும் வரை அவர்கள் வளமுற வாழ்வர் - தாழ்வுறார் எனக்குறிப்பிட்டார்.

ஆட்சியாளர்கள்:

1. அடிக்கடி, முறையாகக் கூடிப்பேசுதல் வேண்டும்.
2. ஒற்றுமையாய்க் கூடி, ஒற்றுமையாய் எழுந்து, ஒற்றுமையாய்ச் செயல்பட வேண்டும்.
3. நிறுவப்பட்ட விதிகளை மதிக்க வேண்டும். பழைய விதிகளைக் கைவிடலாகாது - புதுப்புது விதிகளை விதித்தல் கூடாது.
4. மூத்தோரின் அறிவுரைகளைக் கேட்டுச் செயல்படவேண்டும்.
5. பெண்டிரை மதிக்க வேண்டும். நன்னெறி நடத்தைகள் உடையோராய் இருத்தல் வேண்டும்.
6. வழிபாட்டுத் தலங்களை நன்கு பேண வேண்டும் - சமயச் செய்முறைகளை ஆதரிக்க வேண்டும்.
7. உன்னதத் துறவோரை ஆதரிக்கவும், போற்றவும், பாதுகாக்கவும் வேண்டும்.

பொருளாதார வளமும், சமமான பகிர்வும் இன்றியமையாததாகும். மக்கள் ஏழைகளாயிருப்பின், ஆங்கு செல்வம் தவறாகப் பகிர்வு செய்யப்பட்டுள்ளதாய் பொருள். இது ஏமாற்றத்தையும், கிளர்ச்சியையும் ஏற்படுத்தும்.

சக்கவத்திசீஹனாத சுத்தத்தில் ஒரு கதை வடிவில் அளிக்கப்பட்ட விரிவுரையில், புத்தர், மக்களிடையே செல்வம் முறையாகப் பகிர்ந்தளிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படவில்லையாயின், வறுமை அதிகரிக்கிறது என்பதை விளக்கியுள்ளார். வறுமை அதிகரிக்குமாயின், திருடுதல் தோன்றிப் பரவும். ஆயுதம் ஏந்திச் செல்வது அதிகரிக்கும். மோதல்கள் தோன்றும், கொலைகள் நிகழும், பொய்கள் உரைக்கப்படும் - சட்டமும் ஒழுங்கும் கெட்டு, மானுட மதிப்புகள் குறைபட்டுவிடும்.

பேராசை, வெறுப்பு, தற்பெருமை ஆகியவற்றால் உண்டாக்கப்பட்ட வன்முறையின் பாற்பட்ட போர், கிளர்ச்சி, ஆக்கிரமிப்பு ஆகியவற்றால் ஒரு நாடு குழப்பத்திற்காட்பட்டுவிடும். வன்முறையில் ஈடுபடுவதால் அச்சமே விளையும் (28).

வன்முறை விளைவிப்பது அச்சமே
தேசமே சச்சரவில் மூழ்கிவிடும்.
கொடூரமாய் மக்கள் திரிவதைக் காணுங்கள்,
வற்றிய குளத்தின் மீன்களாய்த் துள்ளி,
கற்க வேண்டிய பாடங்கள் உண்டிதில்.
அமைதியாயிருக்கப் பயின்றிடல் வேண்டும்
பேராசை, வெறுப்பு, தற்பெருமை - இவற்றைக்
கடந்திட வேண்டும்.
எங்கும் எப்போதும் இன்பமும் அமைதியும்
எய்திடலாமே எல்லா மக்களும் .

(சுத்த நிபாதம்).

கூடதந்த சுத்தத்தில் புத்தர் அதிருப்தியுறுவதையும், கிளர்ச்சிபுரிவதையும் தண்டனையால் நிறுத்த முயலாமல், பொருளாதார வளத்தை முன்னேற்றுவதன் மூலம் நிறுத்துவதை வலியுறுத்துகிறார். மக்களுக்கு 1. உழவு 2. கால்நடை வளர்ப்பு 3. ஆலைத் தொழில்கள், 4. வணிகம் 5. அரசுப் பணிகள் ஆகியவை புரிய வசதி ஏற்படுத்தி ஊக்கம் அளிக்கப்படவேண்டும்.

தொழிலாளர் அனைவரின் நலமும் கவனிக்கப்படவேண்டும் - போதுமான ஊதியம் அளிக்கப்படவேண்டும் - உரிய வருமானம் உறுதி செய்யப்பட வேண்டும்.

எந்த மனிதருக்கும் உணவு, உடை, இருப்பிடம், மருத்துவம் ஆகிய நான்கு அடிப்படைத் தேவைகள் அத்தியாவசியமானவையாகும் - உணவு உடலை வளர்க்க - உடை உடலை மறைக்க - இருப்பிடம் உடலைக் காக்க - மருத்துவம் நோயைத் தீர்க்க.

பசியே பெரும் பிணி
உடல்நலமே பெரும் வரவு

– தம்மபதம் 203/ 204

பசி தீர்க்கப்படவேண்டும். பசித்திருக்கும் மனிதனிடம் போதனை செய்வதில் பொருளில்லை என்று காட்டினார் புத்தர். அலவி என்னுமிடத்தில் ஒரு குறிப்பிட்ட ஏழை மனிதர் மிகுந்த பசியால் வாடியபோதும், தம்ம போதனையைச் செவிமடுக்க வந்தார். புத்தர், அவருக்கு உணவளிக்கக் கூறி, அவர் பசி தணிந்தபின்னரே அவர்க்கு தம்மத்தைப் போதித்தார்.

பிணியுற்றோர் நன்கு கவனிக்கப்பட வேண்டும். பிணியுற்றோரைக் கவனித்துக் கொள்ளல் மிகவும் போற்றப்படுவது - நற்செயல்களில் பெரியதெனக் கருதப்படுவது. நெஞ்சில் நிறுத்தத் தக்க வண்ணம் புத்தர் உரைத்தார்: "எவரொருவர் பிணியுற்றோரைப் பேணுகிறாரோ அவரே என்னை மதிக்கிறவர் ஆவார்".

இருப்பிடம் அளிப்பதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

உணவளிப்பவர் எவரோ அவரே - பலமளிப்பவர்
உடையளிப்பவர் எவரோ அவரே - அழகளிப்பவர்
பயண வசதியளிப்பவர் எவரோ அவரே - வசதியளிப்பவர்
ஒளியளிப்பவர் எவரோ அவரே - பார்வையளிப்பவர்
வீடளிப்பவர் எவரோ அவரே - அனைத்துமளிப்பவர் .

(சம்யுத்த நிகாயம்).

உயிர்கள் யாவும் இன்பத்தை விழைகின்றன - துன்பத்தை வெறுக்கின்றன என பவுத்தம் வலியுறுத்துகிறது.

அரசு அனைவர்க்கும் கவனிப்பும், பாதுகாப்பும் அளிக்க வேண்டும் - மனிதர்கட்கு மட்டுமின்றி பறவைகள் விலங்குகள் ஆகிய அனைத்து உயிர்கட்கும். நலிந்தோர்க்குப் பாதுகாப்பளிப்பது இராஜ கடமையாகும்.

தவறிழைப்போரைத் தண்டித்தல் அவசியமாகக் கூடும். இருப்பினும் தண்டனை திருத்துவதற்காக இருக்க வேண்டுமேயன்றி, தண்டிப்பதற்காக இருக்கலாகாது. கண்டனம், சலுகைகளைத் திரும்பப் பெறுதல், நாடுகடத்துதல், ஆகியவை தவறிழைப்பவரைத் திருத்துவதற்காக மேற்கொள்ளப்படலாம். ஆனால், தண்டனைகள் கொடியவைகளாக இருக்கலாகாது. அச்சமின்றி, சார்பின்றி, அறியாமை, சினம் ஏதுமின்றி நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

'நேர்மையான அரசு' முறைமையும், 'அனைத்து மக்களின் நல்வாழ்வும்' ஆட்சி நிர்வாகத்தின் அடிப்படைக் கோட்பாடுகளாகும்.

"வெற்றியோ வெறுப்பை விளைவிக்கின்றது
தோற்றவர் துன்பத்தில் உழல்கிறவராகிறார்.
அமைதியாயிருப்பவர் இன்பமாய் வாழ்கிறார்
வெற்றி தோல்வி இரண்டையும் விட்டே"

– தம்மபதம் 201

அத்தியாயம் 22

பொருளாதாரச் சிந்தனைகள்

பவுத்தம் இல்லறத்தார்க்கு செல்வம் மகிழ்ச்சிக்கான மூலம் எனப் போதிக்கின்றது. வறுமை துன்பத்திற்குக் காரணமாகிறது.

செல்வம் அடைவது நல்லதெனை ஊக்குவிக்கப்படுகிறது. இருப்பினும் பொருளாதார வெற்றி ஒழுக்க மதிப்பீடுகளை அடிப்படையாய்க் கொண்டு அமைய வேண்டும் - நேர்மையான வழிகளில் பொருள் திரட்டப்பட வேண்டும். நன்னெறிகளில் திரட்டப்பட்ட செல்வம் மகிழ்ச்சியளிக்கிறது. ஒழுக்கக்கேடான செயல்களால் செல்வந்தராவது துன்பத்திற்கு வழி நடத்துகின்றது.

"வளமும் நலமும்" பற்றிய பேருரை (வ்யக்கஹபஜ்ஜ சுத்தம்) (29) வளம்பெறும் நான்கு வழிகளை விவரிக்கிறது.

1. இடையறா முயற்சி
2. விழிப்புடைமை
3. நல்ல நட்பு
4. வரவுக்குப் பொருந்திய வாழ்க்கை

1. இடையறா முயற்சி : ஊக்கத்துடன் கடுமையாய், திறமையாய், ஆற்றலோடு, சுறுசுறுப்பாய், சோம்பலின்றி உழைக்க வேண்டும்.

பணத்தைச் சம்பாதிக்க முறையான வழிகளை வகுக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும். தன் கடமைகளைத் திறமையாக நிறைவேற்றவேண்டும்.

2. விழிப்புடைமை : திரட்டப்பட்டதைக் கவனமாய்ப் பாதுகாக்கவேண்டும். செல்வம் இழக்கப்படலாம் ; தீயாலோ வெள்ளத்தாலோ அழிக்கப்படலாம் ; திருடர்களால் கொள்ளையிடப்படவோ, அரசால் பறிக்கப்படவோ நேரலாம். தீய ஒழுக்கச் செயல்களால் கூட செல்வம் இழக்கப்படலாம் - i) விபச்சாரம் (மிதமிஞ்சிய புலன்நுகர்ச்சிப் பழக்கங்கள் ii) மதுக்குடி iii) சூதாட்டம் iv) தீய செயல் புரிவோருடன் நட்பு.

3. நல்லோர் நட்பு : அறிவுடையோர், நேர்மையானோர்களுடன் இணங்கியிருக்க வேண்டும். நம்பிக்கையும், ஆற்றலுமுடைய மக்களோடு உரையாடவும், விவாதத்தில்

ஈடுபடவும் வேண்டும். நண்பர் என்னும் போர்வையில் இருக்கும் பகைவர்களிடம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். தீய நண்பர்களால் அழிவே வரும்.

4. வரவுக்குத்தக்க வாழ்க்கை : ஊதாரியாகவும் இருக்கலாகாது - கருமியாகவும் இருக்கலாகாது - வரவுக்குத்தக்க வாழ்க்கை வேண்டும். ஒருவர் தன் வணிகத்தில் மிகவும் ஆழ்ந்துவிடக்கூடாது. வணிகச் செயல்களின் தீயவிளைவுகளில் கவனமாய் இருக்கவேண்டும். நடுவுநிலை வகிக்க வேண்டும்.

ஆற்றலுள்ள இல்லறத்தார் தம் செல்வத்தை நான்கு பகுதிகளாகப் பிரிப்பார் என்கிறார் புத்தர் :-

ஒரு பகுதி அவருடைய தேவைகளின் பயன்பாட்டிற்கு.

இரு பகுதிகள் தம் தொழிலை வளர்க்கச் செலவிடப்படும்.

நான்காவது பகுதி தேவைப்படும் காலத்தில் செலவழிக்க.

பவுத்தம் இல்லறத்தார்க்குரிய நான்கு வித இன்பங்களை விவரிக்கிறது.

1) பொருளாதார வெற்றியெனும் இன்பம்

2) உடைமைகளை அனுபவிக்கும் இன்பம்

3) கடனில்லாதிருக்கும் இன்பம்

4) இகழப்படாதிருக்கும் இன்பம்

I. பொருளாதார வெற்றியெனும் இன்பம் :

நேரிய வழிகளில் ஈட்டிய பொருட்செல்வத்தினால் ஒருவர் இவ்வின்பத்தைப் பெறமுடியும்.

குற்றமிலா வழிகளில் பொருளீட்டியவர்
தேனைச் சேர்க்கும் தேனீபோன்றவர்.
எறும்புப் புற்று வளரும் வேகத்தில்
அவர்தம் செல்வம் மலையெனக்குவியும். *(29)*

உயிர்களேதும் துன்புறுத்தப்படாமலும், தீய செயல்கள் எதிலும் ஈடுபடாமலும், அமைதியான தொழில்களில் ஈடுபடுதல் பெரும்பேறாகும். செய்யத்தக்கத் தொழில்களாவன :-

1) உழவு 2) கால்நடை வளர்ப்பு 3)ஆலைத்தொழில் 4) வணிகம் 5) அரசுப் பணிகள் முதலியன. கண்டிக்கத்தக்க தொழில்களாவன :

1) அடிமை வணிகம் 2) இறைச்சி வணிகம் 3) ஆயுத உற்பத்தி 4) விஷங்கள் தொடர்பான தொழில்கள் 5) போதைப் பொருள் விற்பனை.

அனைத்து உயிர்களின் வாழ்வும் மேன்மையானதே என பவுத்தம் போதிக்கிறது.

"உயிரை எவரும் பறிக்கலாம் - ஒருவரும் தர இயலாதே
உயிர் வாழ்வன யாவும் வாழ்வை நேசிக்கின்றதே
எத்தனை சிறிய உயிர்தான் எனினும்
அத்தனை சிறந்தது அருமைமிக்கது அவ்வுயிர் அதற்கே". (30)

II. உடைமைகளை அனுபவிக்கும் இன்பம்

ஒருவர் தம் செல்வத்தைக் கீழ்க்கண்டவற்றிற்குப்பயன் படுத்துவதன் மூலம் கிட்டும் இன்பம் இது:-

1. தம் தேவைகளுக்கு - உண்ண, பருக, உடுக்க முதலியன.
2. தம் மனைவி மக்களுக்காகச் செலவிடுதல்.
3. பெற்றோர்க்களித்தல் - தாய் தந்தையர்க்கு.
4. நண்பர் மற்றும் உறவினரை மகிழ்வித்தல்.
5. அரசுக்குச் செலுத்தவேண்டிய வரி முதலியன.
6. தானம், நற்செய்கைகள் ஆகியவை.
7. உன்னத துறவோர்க்களித்தல்.

செல்வம் தமக்கும் பிறர்க்கும் பயன்படவேண்டும். செல்வம் சேர்த்துவைக்கப்படத்தக்கதன்று - பகிர்ந்தளிக்கப்படத்தக்கது.

III. கடனில்லாதிருக்கும் இன்பம்

கடனுற்றவராயிருப்பது ஒரு கவலை - அக்கடனை அடைக்கச் சிந்தித்துக் கொண்டே இருக்கவேண்டும். கடன்பட்டவர் கடன்தந்தவர்க்குக் கட்டுப்பட்டவராய், கடன்திருப்பித் தரப்படவில்லையாயின் அதனால் ஏற்படக்கூடி தண்டனை பற்றி அஞ்சுபவராய் உள்ளார். கடனில்லாதிருத்தல் பெரிய சுதந்திரமும் மகிழ்ச்சியுமாகும்.

IV. இகழப்படாதிருக்கும் இன்பம்

ஒருவர் எந்தத் தவறும் இழைக்கவில்லை, எந்த இகழ்ச்சிக்கும் ஆட்படவில்லை என்று அறிவது ஒரு பெரும் சுதந்திரமும் மகிழ்ச்சியுமாகும். தெளிந்த உணர்வுடையவராயிருப்பது பெரும் மகிழ்ச்சியை அளிக்கிறது.

பவுத்தம், இல்லறத்தாரை நேரிய வழியில் பொருளீட்டவும், பாதுகாக்கவும் பகிர்ந்து கொள்ளவும் ஊக்கமளிக்கிறது.

"ஆற்றலும் கவனமும் வேண்டும் செயலில்
அவரவர் செல்வம் காத்திடல் வேண்டும்.
நடுநிலை, அறிவறு நேரிய வாழ்வு
நல்கிடும் இன்பமே இம்மையில் மறுமையில்."

அத்தியாயம் 23

சமூகப் போதனைகள்

இல்லறத்தாருக்கு, மகிழ்ச்சியான வெற்றிகரமான வாழ்க்கை வாழத் தேவையான நடைமுறைசார்ந்த அறிவுரைகளை வழங்கும் பேருரைகள் பல திபிடகங்களின் உள்ளன.

'சிகாள - சுத்தம் அல்லது 'இல்லறத்தாரின் கடமைகள்' பற்றிய பேருரை என்பது இல்லறத்தாரின் இல்லறக்கடமைகள், மற்றும் சமூகக் கடமைகள் ஆகியவற்றை அழகுற விவரிக்கிறது. (29) 'ஆறுதிசைகளையும் வணங்குதல்' என்னும் வடிவத்தில் கடமைகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

i) கிழக்கு - பெற்றோரையும், பிள்ளைகளையும்

ii) தெற்கு - ஆசிரியர்களையும் மாணவர்களையும் குறிக்கிறது.

iii) மேற்கு - கணவனையும், மனைவியையும் குறிக்கிறது.

iv) வடக்கு - நண்பர்களையும், உறவினரையும் குறிக்கிறது.

v) கீழே - முதலாளி, தொழிலாளிகளைக் குறிக்கிறது.

vi) மேலே - துறவோரையும், இல்லறத்தாரையும் குறிக்கிறது.

I. கிழக்கு – பெற்றோர், பிள்ளைகள் ஆகியோரின் கடமைகள் :

அ) பிள்ளைகள் பால் பெற்றோரின் கடமைகள் :

1. அவர்கள் தீமை செய்யாமல் தவிருங்கள்.
2. நன்மை புரிய ஊக்குவியுங்கள்.
3. ஒரு தொழிலில் அவர்களைப் பயிற்றுவியுங்கள்.
4. பொருத்தமான திருமண ஏற்பாடு செய்யுங்கள்.
5. உரியநேரத்தில் அவர்களுக்குரிய வாரிசு உரிமைச் சொத்தினை அவர்களுக்கு அளியுங்கள்.

ஆ) பெற்றோர்கள் பால் பிள்ளைகளுக்குரிய கடமைகள் :

1. அவர்களை ஆதரியுங்கள். (முதுமையில்)
2. அவர்களின் கடமைகளைப் புரியுங்கள்.

3. குடும்ப மரபுப் புகழைப் பேணுங்கள்.

4. சொத்துக்குரிய மதிப்புமிக்க வாரிசாய்த் திகழுங்கள்.

5. மறைவுற்ற பெற்றோர் நினைவாக தானமளியுங்கள்.

II. தெற்கு – சீடர்கள் போதகர்களின் கடமைகள்:

அ) மாணவர்கள் பால் ஆசிரியர்களுக்குரிய கடமைகளாவன :

1. நல்லொழுக்க நெறிகளில் அவைகளைப்பயிற்றுவியுங்கள்.

2. அவர்கள் தம் பாடங்களை நன்கு ஈர்த்துக் கொள்ளச் செய்யுங்கள்.

3. அவர்களுக்கு கலை, அறிவியல் இரண்டையும் கற்பியுங்கள்.

4. உயர் பேரறிவும் பெருங்கல்வியும் உடைய பெரியோரைச் சீடர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள்.

5. அவர்களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடு செய்யுங்கள்.

ஆ) ஆசிரியர்கள்பால் மாணவர்களின் கடமைகளாவன :

1. அவர்களுக்கு மரியாதை காட்டுங்கள்.

2. அவர்களுக்குத் தொண்டு புரியுங்கள்.

3. கற்பதில் ஆர்வம் காட்டுங்கள்.

4. கற்கும்போது கவனமாயிருங்கள்.

5. தனிப்பட்ட முறையில் உதவுங்கள்.

III. மேற்கு – கணவன் – மனைவி கடமைகள்:

அ) மனைவியின் பால் கணவனுக்குரிய கடமைகள் :

1. அவளிடம் கனிவாயிருங்கள்.

2. அவளை வெறுக்காதீர்கள்.

3. அவளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள்.

4. அவள் கையில் அதிகாரத்தை ஒப்படையுங்கள்.

5. அவளுக்குரிய அலங்காரங்களை அவளுக்கு அளியுங்கள்.

ஆ) கணவன்பால் மனைவிக்குரிய கடமைகள் :

1. இல்லறத்திற்குரிய கடமைகளை நன்கு புரிக.

2. விருந்தோம்பலைப் புரிக. (உற்றார்க்கும் உறவினர்க்கும்)

3. நம்பிக்கைக்குரியவராயிருங்கள்.

4. கணவனின் செல்வத்திற்குப் பாதுகாப்பாய் இருங்கள்.

5. ஆற்றலும் செயல்திறனும் உள்ளவராய் இருங்கள்.

IV. வடக்கு – நண்பர்கள், இல்லறத்தார் கடமைகள் :

அ) நண்பர்கள்பால் இல்லறத்தார்க்குரிய கடமைகள் :

1. தாராளமாயிருங்கள்
2. கனிவாயிருங்கள்
3. உதவியாயிருங்கள்
4. நடுநிலையாயிருங்கள்
5. நேர்மையாயிருங்கள்

ஆ) இல்லறத்தார்பால் நண்பர்களுக்குரிய கடமைகள் :

1. ஆபத்தில் இருக்கும்போது அவரைக் காப்பாற்றுங்கள்.
2. அவர் விழிப்பற்றிருக்கும்போது அவர் செல்வத்தைக் காப்பாற்றுங்கள்.
3. அவர் ஆபத்தில் இருக்கும்போது அவருக்கு அடைக்கலமாய் இருங்கள்.
4. அவர் தொல்லையிலிருக்கும்போது அவரைக் கைவிட்டு விடாதீர்கள்.
5. அவருடைய குடும்பத்தின்பால் அன்புள்ளவராயிருங்கள்.

V. கீழே–முதலாளிகள்–தொழிலாளர்கள் கடமைகள்:

அ) தொழிலாளர்பால் முதலாளிக்கு (எஜமான்) உரிய கடமைகள்:

1. அவர்கள் திறனுக்கேற்ற வேலைகளை அவர்களிடம் ஒப்படையுங்கள்.
2. அவர்களுக்கு உணவும், போதிய ஊதியமும் அளியுங்கள்.
3. பிணியுற்ற காலத்தில் பராமரித்தல்.
4. இனியவைகளை அவர்களோடு பகிர்ந்து கொள்ளுதல்.
5. உரிய காலங்களில் அவர்களுக்கு விடுமுறை அளித்தல்.

ஆ) முதலாளிகள் பால் தொழிலாளர்களுக்கு உரிய கடமைகள்:

1. அவர்களுக்கு முன் எழவேண்டும். (விரைவில் பணிபுரிய வரவேண்டும்)

2. அவர்களுக்குப் பின் உறங்கவேண்டும் (தாமதமாகப் பணியிலிருந்து செல்ல வேண்டும்).

3. தரப்பட்டதை மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும்.

4. பணியைச் சிறப்புறப் புரியவேண்டும்.

5. அவருடைய பேரையும் புகழையும் போற்றவேண்டும்.

IV. மேலே - உபாசகர்கள் - பிக்குகள் கடமைகள் :

அ) பிக்குகள் பால் உபாசகர்களுக்குரிய கடமைகள் :-

1. பணிவுடன் நடந்துகொள்ளுங்கள்.

2. இன்சொல் பேசுங்கள்.

3. அவர்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி கொள்ளுங்கள்.

4. அவர்களுக்கு வரவேற்பளியுங்கள்.

5. அவர்களின் பொருட் தேவைகளை நிறைவேற்றுங்கள்.

ஆ) உபாசகர்களின் பால் பிக்குகளுக்குரிய கடமைகள் :

1. அவர்களைத் தீயவற்றினின்று தவிருங்கள்.

2. நன்மை புரிய வற்புறுத்துங்கள்.

3. இரக்கமுடையோராயிருங்கள்.

4. அவர்கள் கேட்டறியாததைக் கேட்கச் செய்யுங்கள்.

5. கேட்டறிந்ததைத் தெளிவுபடுத்துங்கள்.

6. உயர்நிலை எய்த உரிய வழி காட்டுங்கள்.

ஒருவர் தம் செல்வத்தையும் மகிழ்ச்சியையும் இழந்துவிடக் கூடியனவாக உள்ள ஆறு விஷயங்களை சிகாள சுத்தம் விவரிக்கின்றது. அவையாவன : 1) சூது 2) மது 3) அகாலத்தில் ஊர்சுற்றுதல் 4) கேளிக்கைக் காட்சிகளை அடிக்கடி காணுதல் 5) தீய நட்பு 6) சோம்பல்பழக்கம்.

மேற்கண்ட காரணங்கள் சண்டைசச்சரவு, நோய், புகழுக்குக் கேடு, பொய் வதந்திகள், குற்றச்சாட்டு, வெறுப்பு ஆகியவற்றை விளைவிக்கும்.

'நன்மதிப்பைப்' பெற ஒருவர் வேண்டுமெனச் சிகாளசுத்தம் போதிக்கிறது.

அறிவுடையோராயும் நன்னெறியுடையோராயும் இருத்தல்.

நல்லதன்மையும், ஈகையும் உடையோராய் இருத்தல்.

பணிவுடையோராயும், அடக்கமுடையோராயும் இருத்தல்.

ஊக்கமுடையோராயும், சோம்பல் அற்றவராயும் இருத்தல்.

இழப்பில் அதிர்ந்து போகாதவராய் இருத்தல்.நடத்தையில் குற்றமற்றவராய், இன்சொல் உடையவராய் இருத்தல்.

தாராளமானவராகவும், தன்னலமற்றவராகவும் இருத்தல்.

வழிகாட்டியாய், போதிப்பவராய், தலைவராய் இருத்தல்.

கருணை, நட்பு, உதவி ஆகியவை உடையவராய் இருத்தல்.

அனைவரிடமும் நடுநிலையுடையவராய் இருத்தல்.

இவ்வாறிருக்கும் மனிதர் திறன்மிக்கவராய், போற்றப்படுபவராய் ஆகிறார்.

(ஆ)

'வளமும் நலமும்' (வியாக்காபஜ்ஜ சுத்தம்) (29) என்னும் பேருரையில் செல்வ வளம், உள்ள நலம் ஆகியவற்றிற்கான நான்கு நான்கு நற்சூழல்கள் விவரிக்கப்படுகின்றன.

செல்வ வளத்திற்கான சூழல்களாவன :

1. இடையறா முயற்சி
2. கவனமுடைமை
3. நல்ல நட்பு
4. வரவுக்கேற்ற வாழ்க்கை

உள்ள நலத்திற்கான சூழல்களாவன :

1. பகுத்தறிவுள்ள நம்பிக்கை
2. நன்னெறி

3. ஈகை

4.மெய்யறிவு

மேற்கண்ட எட்டுச் சூழல்களும் கைக்கொள்ளப்படுமாயின், அவை இம்மையிலும், மறுமையிலும் இன்பத்தை நல்குகின்றன.

(இ)

ஆளவக சுத்தத்தில் புத்தர் போதிக்கிறார் :-செல்வவளம் பெற - உழைப்பாளியாய் இருங்கள் - செய்யத்தக்கன செய்யுங்கள்.

புகழ்பெற - வாய்மையுடையோராயிருங்கள்.

நண்பர்களைப்பெற - தாராளமாயிருங்கள்.

மெய்யறிவுபெற - அறிவுற்று தம்மத்தைக் கேளுங்கள்.

வேதனையுறாதிருக்க - தன்னடக்கத்தோடு செயல்படுங்கள் - ஈகை, வாய்மை, பொறையுடைமை ஆகியவற்றைக் கைக்கொள்ளுங்கள். (32)

(ஈ)

'வீழ்ச்சி பற்றிய போதனை' (பராபவ சுத்தம்) (29) ஒரு மனிதனின் வீழ்ச்சிக்குரிய காரணங்களை விவரிக்கிறது. அவையாவன:

1. தம்ம போதனையிடம் வெறுப்படைதல்.

2. தீயோரை விரும்புதலும் நன்னடத்தையை வெறுப்பதும்.

3. தூக்கம், வீணர்கூட்டு, சோம்பல் , பயனற்றிருத்தல்.

4. தன் வயதுமுதிர்ந்த தாய் தந்தையரைப் பேணாதிருத்தல்.

5. துறவோரை ஏமாற்றுதல், பொய்ம்மைக்கு ஆட்படுதல்.

6. திரண்ட செல்வம் பெற்றிருந்தும் தான் மட்டும் பயன்துய்த்தல்.

7. பிறப்பு, செல்வம், குலம் ஆகியவற்றைக் கொண்டு பெருமைப் பட்டுப் பிறரைத் தூற்றுதல்.

8. சினமுடையவனாய், குடிகாரனாய், சூதாடியாய், செல்வத்தை வீணாக்குபவனாய் இருத்தல்.

9. தன் மனைவியோடு திருப்தியுறாமல் பிறன்மனை விழைதல்.

10.வயது முதிர்ந்தபின் இளம்பெண்ணை மணத்தல் - எப்போதும் பொறாமையில் தகித்தல்.

11.ஊதாரியாயும், குடிகாரராயும் உள்ள ஆணையோ, பெண்ணையோ வேலைக்கமர்த்தல்.

12.மிகப்பெரிய ஆசை - மிகச் சிறிய சாதனம் உடையவராயிருந்தும் ஆட்சி அதிகாரத்திற்கு ஆசைப்படுதல்.

மேற்கண்ட குணங்களில் எது இருப்பினும் அது ஒருவனுக்கு வீழ்ச்சியை உண்டாக்கிவிடும்.

(2)

மானுடத்தின் ஒருமை

புத்தர் 'மானுடத்தின் ஒருமையை'ப் பிரகடனப்படுத்தினார். அவர் சாதி, இன ஏற்றத்தாழ்விற்கும், பாரபட்சத்திற்கும் எதிரானவராயிருந்ததார். வாசெட்ட சுத்தத்தில், அனைத்து மனிதர்களும் ஒரே உயிரியல் வகையைச் சார்ந்தவர்கள் எனக் காட்டினார் புத்தர்.

தாவரங்களுக்கிடையே பல வகைகளும்

இனங்களும் உள்ளன.

விலங்குகளுக்கிடையே பல வகைகளும்

இனங்களும் உள்ளன.

பறவைகளுக்கிடையே பல வகைகளும்

இனங்களும் உள்ளன.

மீன்கள், பூச்சிகள், பாலூட்டிகள் ஆகியவற்றிடையே பல வகைகளும்

இனங்களும் உள்ளன.

ஆனால் மனிதரிடையே - வேறுபாடே இல்லை.

கண்கள், செவிகள், நாசி, வாய், கைகள், கால்கள் அனைத்தும் ஒன்றாகவே உள்ளன. தோல், முடி நிறங்களில் ஏதும் வேறுபாடிருப்பினும் மற்ற விலங்குகள், பறவைகள் இடையேயுள்ள வேறுபாட்டோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது மிகச்சிறிய வேறுபாடாகவே உள்ளது.

"கீழ்ச்சாதி எனப்படும் ஒருவன் விளைக்கும் தீ மேல்சாதி எனப்படும் ஒருவன் விளைக்கும் தீ போலவே ஒளிவிட்டு எரிந்திடும்".

"மேல்சாதி எனப்படும் ஒருவன் தாயிடம் பிறப்பது என்பது கீழ்ச்சாதி எனப்படும் ஒருவனின் தாயிடம் பிறப்பதினின்று ஒரு துளி கூட வேறுபட்டதன்று".

எந்த இனத்தைச் சேர்ந்த மனிதராயினும் பிணி, மூப்பு, சாக்காடு ஆகியவற்றுக்காட்படுவர். (31) சாதி, இன்பம், பிறப்பு ஆகியவற்றின் அடிப்படையில் மனிதர்க்குள் பேதம் காண எந்தக் காரணமும் இல்லை.

மனிதகுலத்தைப் பிரிப்பது அவர்தம் செயல்களே அன்றிப் பிறப்பன்று.

(ஊ)

'கீழ்மக்கள் பற்றிய பேருரை' (வசல சுத்தம்) போதிக்கிறது, (3):-

பிறப்பால் எவரும் கீழ்ச்சாதி இல்லை. (தாழ்வுற்ற மனிதன்)

பிறப்பால் எவரும் பிராமணர் (உயர் மனிதன்)இல்லை.

ஒருவன் தன் செயலால் கீழ்சாதியாகிறான். ஒருவன் தன் செயலால் பிராமணன் ஆகிறான்.

ஒரு கீழான மனிதன் என்பவன் :

1. எவனொருவன் முன்கோபமுடையவனோ, வஞ்சகனோ, தன்னலமுடையவனோ அவனே கீழான மனிதன்.

2. எவனொருவன் உயிர்களை வதைக்கிறானோ, கொல்கிறானோ, ஒடுக்குகிறானோ, கருணையற்றவனோ அவனே கீழான மனிதன்.

3. எவனொருவன் பொய்யுரைப்பானோ, களவாடுகிறானோ, கடனைத் திருப்பித்தராதிருக்கிறானோ அவனே கீழான மனிதன்.

4. நண்பர், உறவோர் ஆகிய பிறன்மனை விழை பவன் எவனோ அவனே கீழான மனிதன்.

5. எவனொருவன் தன் தாய் தந்தையரை ஆதரிக்கவில்லையோ அவனே கீழான மனிதன்.

6. எவனொருவன் தாயை, தந்தையை, சகோதரர்களை, சகோதரிகளை, உற்றார், உறவினரை மருமக்களையெல்லாம் தாக்குகிறானோ, ஏசுகிறானோ, இழிவுபடுத்துகிறானோ அவனே கீழான மனிதன்.

7. எவனொருவன் நல்லறிவுரைகளை மறைத்து விடுகிறானோ பிறரைத் தவறாக வழிநடத்துகிறானோ அவனே கீழான மனிதன்.

8. எவனொருவன் தீயவை புரிந்துவிட்டு நன்மை புரிந்தது போல் நடக்கிறானோ அவனே கீழான மனிதன்.

9. எவனொருவன் பிறர்வீட்டிற்குச் சென்று நல்விருந் துண்பவனாய், தம் வீட்டிற்கு வருபவரை விருந்தோம்பாதவனாய் இருக்கிறானோ அவனே கீழான மனிதன்.

10.எவனொருவன் துறவோருக்கு தானமளிக்காமல் அவர்களை வஞ்சித்து, வெறுப்பூட்டுகிறானோ அவனே கீழான மனிதன்.

11.எவனொருவன் தற்பெருமையால் தன்னை உயர்த்துப் பேசிப் பிறரைத் தாழ்த்துகிறனோ அவனே கீழான மனதின்.

12. எவனோருவன் தீயவை புரிய வெட்கப்படாமல், அஞ்சாமல் இருக்கிறானோ அவனே கீழான மனிதன்.

இத்தகைய மனிதர்கள் ஒதுக்கிவைக்கப்படத்தக்க கீழான மனிதர்களாவர். இம்மையில் இம்மனிதன் இகழ்வுறுகிறான் - மறுமையில் இம்மனிதன் துன்பநிலையுறுகிறான்.

(எ)

மிக்குயர் நற்பேறுகள் :

மஹாமங்கல சுத்தத்தில் வாழ்க்கைக்கு வழிகாட்டப்படுகிறது.

1. *தீயவரோடு இணங்காதிருத்தலும்*
நல்லோரோடு கூடியிருத்தலும்
போற்றற்குரிய யாரையும் என்றும்
போற்றி வாழும் வாழ்வே என்றும்

– பேறுகள்யாவினும் நற்பேறாகும்.

2. *பொருத்தமான சூழலில் வாழ்வதும்*
பெருமைக்குரிய செயல் புரிந்திருத்தலும்
ஒவ்வொருவரையும் நல்வழிப்பாதையில்
ஒழுகச் செய்திடும் வாழ்வே என்றும்

– பேறுகள் யாவினும் நற்பேறாகும்.

3. *மிக்குயர் கல்வி பெற்றிருத்தலும்*
கைவினைத் தொழில்களில் திறன் பெற்றித்தலும்
நன்னடத்தைகள் நற்பயிற்சி உடைமையும்
இன் சொலுடைமையும் ஆன வாழ்வே

– பேறுகள் யாவினும் நற்பேறாகும்.

4. *தந்தை தாயரைப் பேணிடுதலும்*
மனைவி மக்களைக் காத்திடுதலும்
அமைதியான தொழில்கள்யாவிலும்
ஈடுபட்டு வாழ்தலுமான வாழ்வே

– பேறுகள் யாவினும் நற்பேறாகும்.

5. *ஈவதில் செம்மையாய் இருத்தலும்*
இயல்வதில் நன்னெறி யுடைமையும்
உற்றார்க்கு உற்றுழி உதவலும்
குறையிலாச் செயல்களும் ஆனவாழ்வே

– பேறுகள் யாவினும் நற்பேறாகும்.

6. *தீமைகள் யாவையும் தவிர்த்தலும்*
போதைகள் அருந்தாமல் இருத்தலும்
உறுதியாய் எப்போதும் நன்னெறி
உய்வதும் ஆகநீர் வாழ்வதே

– பேறுகள் யாவினும் நற்பேறாகும்

7. *பணிவுடன் அடக்கமாய் இருத்தலும்*
திருப்தியும் நன்றியும் உடைமையும்
தம்மத்தை அடிக்கடி கேட்பதும்
அறிவதும் ஆகநீர் வாழ்வதே

– பேறுகள் யாவினும் நற்பேறாகும்.

8. *பொறையுடைமையொடு பணிதலும்*
துறவோருடன் தொடர் புறுதலும்
சமய வாய்மைகள் பேசலும்
ஆகநீர் அவ்வப்போ திருத்தலே

– பேறுகள்யாவினும் நற்பேறாகும்

9. *தன்னைத் தானே அடக்கலும்*
தானொரு புனிதவாழ் வுறுதலும்
உன்னத வாய்மைகள் உணர்தலும்
உயர்ந்த நிப்பாணம் அடைதலும்

– பேறுகள் யாவினும் நற்பேறாகும்.

10. *செல்வவளத்திற்காய்ச் சிதறாத மனமும்*
துன்பத்தினின்று விடுதலை பெறுவதும்
மாசுகள் அனைத்தும் களைந்திடப்படுவதும்
அச்சம் தன்னை அறவே விடுதலும்

– பேறுகள் யாவினும் நற்பேறாகும்

11. *இன்னவை யாவையும் நிறைவேற்றுவோர்கள்*
என்றும் வெல்லற்கரியராயிருப்பர்
எல்லா வழியிலும் இன்புற் றிருப்பர்
இவைகள் யாவும் பெரும் பேறுகளாம்.

– மஹாமங்கல சுத்தம் (26)

(ஏ)

உய்வுற்றோரும் தாழ்வுற்றோரும்

உய்வுற்றோ ரெவர் - எளிதில் அறியலாம்
தாழ்வுற்றோ ரெவர் - எளிதில் அறியலாம்
தம்மத்தை நேசிப்போர் உய்வுற் றவரே
தம்மத்தை வெறுப்போர் தாழ்வுற் றவரே

– பராபவ சுத்தம்.

அத்தியாயம் 24

விடுதலை

1. அறியாமையிலிருந்து விடுதலை.
2. அச்சத்தினின்றும் மூடநம்பிக்கையினின்றும் விடுதலை.
3. விரதங்கள், பிரார்த்தனைகள் ஆகியவற்றினின்று விடுதலை.
4. சிந்திப்பதற்குச் சுதந்திரம்.
5. வினா எழுப்பச் சுதந்திரம்.
6. துன்பம், துயரம் ஆகியவற்றினின்று விடுதலை.

"***மாபெரும் கடல் முழுதும் ஒரே சுவைதான் உள்ளது - உப்புச்சுவை. அதேபோல இந்தக் கொள்கை, நடைமுறை முழுதும் ஒரு சுவைதான் - வேறேதுமன்று - சுதந்திரச் சுவைதான்***".

– புத்தர்

பவுத்தம் அறியாமையை அகற்றி வாழ்வின் இயற்கை பற்றிய உண்மையான வரைமுறையை அளிக்கிறது. அது 'கடவுள்' மீது அச்சம், கீழ்ப்படிதல், சார்ந்திருத்தல் ஆகியவற்றை நீக்குகிறது. துன்பத்தை வெல்வது எப்படி என்றும், நிறைவான இன்பத்தைப் பெறுவது என்பதும் ஒருவன் முயற்சியாலேயே அடையப்படுவதாகும். இன்பம் மனத்திலுள்ளது - தேவைப்படுவதெல்லாம் மனத்தை நிறைவாக்கித் தூய்மைப் படுத்துவதேயாகும்.

பவுத்தம் குருட்டு விசுவாசத்தை நிராகரித்து மனிதர்கள் சிந்திக்க வேண்டுமென்றும், வினாதொடுக்கவும், பகுத்தறியவும் ஊக்குவிக்கிறது. காலாமர்க்குக் கூறிய அறிவுரையில் புத்தர் கூறினார்:

" மரபுரீதியானது என்பதற்காய் எதையும் ஏற்காதீர்கள்.

சமய நூல்களில் உள்ளன என்பதற்காய் எதையும் ஏற்காதீர்கள்.

சமயக் கருத்துக்கள் என்பதற்காய் மட்டும் எதையும் ஏற்காதீர்கள்.

பெரும்பான்மையினரின் கருத்து என்பதற்காய் எதையும் ஏற்காதீர்கள்.

மதிப்பிற்குரியவரால் போதிக்கப்பட்டது என்பதற்காய் எதையும் ஏற்காதீர்கள் ..."

விமர்சனரீதியில் ஆராயப்பட்டும், சரியாகப் பரிசீலிக்கப்பட்டுமே விஷயங்கள் ஏற்கப்பட வேண்டும். "அறிவுடையோர் தங்கத்தைச் சுட்டும், வெட்டியும், உரைத்தும் பரிசோதித்துப் பார்த்து ஏற்பதுபோலவே நீங்களும் என் சொற்களை நன்கு ஆராய்ந்த பின்னரே ஏற்க வேண்டும் - என்பால் இருக்கும் மதிப்பால் மட்டும் ஏற்றுவிடக் கூடாது". - புத்தர்

புத்தரின் போதனை திறந்த தத்துவமாய் உள்ளது - அது யாராலும் கேள்விகேட்டறியத்தக்கதாயுள்ளது. எண்ணிலா வினாக்களுக்கான பதில்கள் தம்மத்திலேயே உள்ளன. சில குறிப்பிட்ட வினாக்களுக்கான விடைகளால் மகிழ்ச்சியுற்ற சிலர் மகிழ்ந்துரைத்தனர்.

"நான் ஊர் ஊராய்ச் செல்வேன்
நகர் நகராய்ச் செல்வேன்
புத்தரையும் தம்மத்தையும் புகழ்ந்தவாறே.
போதனையில் மிகச் சிறந்த ஒன்று அஃதே."

(ஆளவாக சுத்தம்) (32)

புத்தரின் போதனைகளைத் தெளிவாகப் புரிந்துக்கொள்வது மிகவும் அவசியம். பவுத்தத்தை விமர்சிப்பவர்கள் போதனைகளைச் சரியாகப் புரிந்து கொள்ளாமையாலும், தவறான கருதுகோள்களாலும் அவ்வாறு செய்யக் கூடும். போதனைகளைச் சரியாகப் புரிந்து கொள்ளாமையாலும், குறைவான பயிற்சியாலும் தவறான கருத்துக்கள் தோன்றக்கூடும்.

நன்கு புரிந்துகொள்ள வேண்டியதன் அவசியம் 'பாம்பு உவமை'யால் விளக்கப்படுகிறது.

"ஒரு மனிதன் ஒரு பாம்பைப் பிடிக்கச் செல்லும்போது தவறாகப் பாம்பைப் பிடிப்பானேயானால் - பாம்பு கடித்து வலியும் துன்பமும் அடைவான். அதேபோல் தம்மத்தை ஒருவன் தவறாகப் புரிந்துகொள்வானாயின் அது அவனுக்கு ஒரு பயனும் அளிக்காது.

ஒரு மனிதன் ஒரு பாம்பைத் திறமையாகப் பிடிப்பானாயின் - அப்பாம்பு அவனைக் கடிக்காது - துன்பமும் விளைவிக்காது - அச்சம் அப்போது அகன்றுவிடும் - பதட்டம் அங்கு தீர்ந்துவிடும். அதேபோல் ஒருவன் தம்மத்தைச் சரியாகப் புரிந்து கொள்வானாயின் - நலமும் இன்பமும் தொடரும்". (9)

எவரெல்லாம் தம்ம போதனைகள் நன்கு கற்று ஆராய்கிறார்களோ, அவர்கள் தம்மம் எவ்வளவு நன்கு, வெளிப்படையாய், திறந்ததத்துவமாய்ப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் காண்பர்.

"நேர்வழி நன்கு காட்டப்பட்டுள்ளது
நேராய் முன்னே நடவுங்கள் திரும்பாமல்
விரையுங்கள் நீங்கள் மேலும் மேலும்
விரைந்து அடைவீர் நிப்பாணம் தன்னையே". (34)

புத்தரின் போதனைகளிலிருந்த ஒவ்வொருவரும் சிலவற்றைச் சேகரிக்க முடியும். புத்தரின் போதனைகளில் எப்போதும் தொடர்ச்சியாய்ப் புதுமைகள் தோன்றுகின்றன. அவைகள் காலங்கடந்தவை - உலகம் தழுவியவை.

துன்பமேதும் உமக்குத் தோன்றாதிருப்பதாக.
பிணியேதும் உம்மைப் பீடிக்கா திருப்பதாக.
அபாயமேதும் உம்மை அணுகாதிருப்பதாக.
அமைதியில் நீடுழி வாழ்வீர்களாக.

REFERENCES

1. Nimalasuria, A. 1980. Buddha the Healer.
   The Wheel Vol. ii No.22 -

   Buddhist Publication Society, Kandy, Sri Lanka, 50.

2. The Dhammapada (Dhp.) (Many translations).
   Narada Thera. 1972. The Colombo Apothecaries Co., Ltd. Colombo, Sri Lanka.

   Piyadassi Thera 1974. Buddhist Publication Society, Kandy, Sri Lanka.

   Dhammananda. K.S. 1988. Sasana Abhiwurdhiwardena Society, Kuala Lumpur, Malaysia.

   Medonza, O.R. Felix Printers Ltd. Colombo.

3. Nadara Maha Thera 1973. The Buddha and his teachings.
   The Colombo Apothecaries Co., Ltd. Colombo, Sri Lanka 272-278 ; 105 ; 100 ; 419; 353 ; 411 ; 338 ; 343 ; 642 ; 229 ; 680.

4. Webb, R. 1975. An analysis of the Pali canon-
   The Wheel Vol. XI Nos. 217-220.

   Buddhist Publication Society, Kandy, Sri Lanka.

5. Nyanaponika, 1975. The Simile of the Cloth.
   The Wheel. Vol. IV No.61.

   Buddhist Publication Society, Kandy, Sri Lanka 4.

6. The Young Buddhist Supplement MC (P) 1 : 8.86.
   Singapore Buddha Yana Organisation, Singapore, 45 ; 28 ; 1.

7. Piyadassi Thera. The Buddha.
   The Wheel. Vol. 1. No. 5 A/B.

   Buddhist Publication Society, Kandy, Sri Lanka 37.

8. Bodhi Bhikku 1978. The Brahmajala sutta.
   The discourse on the All-embracing net of views.

   Buddhist Publication Society, Kandy, Sri Lanka, 37.

9. Nyanaponika 1974. Alagaddupama Sutta.
   The discourse on the snake simile.
   The Wheel Vol. iii. No.48-49.

   Buddhist Publication Society, Kandy, Sri Lanka, 29 : 17.

10. Burns, M.D. 1983. Nirvana, Nihilism and Sartori.
    The Wheel Vol. iv. Nos. 117-119.

    Buddhist Publication Society, Kandy, Sri Lanka, 19 ; 5 ; 88.

11. Tevijja sutta - Digha Nikaya, Sutta 13 -
    Adopted from, 'Knowers of Veda', 1977 Prof. T.W. Rhys Davids.
    The Wheel Vol. iii. Nos. 57-58.

    Budhdhist Publication Society, Kandy, Sri Lanka.

12. Narada Thera, 1966, Buddhism in a Nutsheel.
Wheel Publication Special issue.

Buddhist Publication Society, Kandy, Sri Lanka, 40.

13. Saddhatissa, H. 1971. The Buddha's Way.
George Allen and Unwin Ltd. London. 115 ; 39.

14. Medonza, O.R. Ceylon Daily News. 4.4.85.

15. Piyadassi Thera 1989. Vesak Sirisara.
Sri Sddharmadana Samitiya Panadura, Sri Lanka, 125.

16. Narada Thera and Mahinda Thera 1966.
Apannaka sutta (Majjhima Nikaya 60).
The Wheel Vol. V. No. 98-99.

Buddhist Publication Society, Kandy, Sri Lanka. 11.13.

17. Nyanaponika Thera 1981.
Anguttara Nikaya an Anthology,
The Wheel Nos. 155-158 and 208-211.

Buddhist Publication Society, Kandy, Sri Lanka. 85 ; 10 ; 11.

18. Nanamoli Bhikku 1979. The path of Purification.
Visuddhimagga.

Buddhist Publication Society, Kandy, Sri Lanka 1.

19. Nanamoli Thera 1975. Mindfulness of Breathing.
Buddhist Publication Society, Kandy, Sri Lanka. Foreword.

20. De Zoysa, G.H. 1981. Understanding Buddhism -
Gunaratne & Co., Ltd., Colombo 10. 12.

21. Nyanatiloka 1980. Buddhist Dictionary.
Buddhist Publication Society, Kandy, Sri Lanka. 198.

22. Walpola Rahula. 1967. What the Buddha Taught.
The Gordon Fraser Gallery Ltd. Bedford, England 77 ; 78.

23. Ireland, J.D. 1981. Samyutta Nikaya - an Anthology.
The Wheel Nos. 107 - 109.

Buddhist Publication Society, Kandy. 1.

24. Narada Thera and Mahinda Bhikku, 1974.
Ambalatthika Rahulovada sutta.
The Wheel Vol. ii No.33.

Buddhist Publication Society, Kandy, Sri Lanka. 8-16.

25. Nanamoli Thera 1981. The Practice of Loving Kindness.
The Wheel Vol. 1 No. 7.

Buddhist Publication Society, Kandy, sri Lanka. 9-14.

26. Narada Thera and Kassapa Bhikku.
The Mirror of the Dhamma.

Thisara Printers, Moratuwa, Sri Lanka. 19.

27. Vitanage G. 1961. Buddhist Ideals of Government.
Bodhi Leaves Vol. 1 No. ii.

Buddhist Publication Society, Kandy, Sri Lanka. 17.

28. The Sutta Nipata. IV 15. Attadanda sutta.

29. Narada Thera 1979. Everyman's Ethics-Has 4 valuable suttas :
Sigalovada sutta ; Mahamangala sutta ; Parabhava sutta and Vyagghapajja sutta.
The Wheel No. 1 No. 14.

Buddhist Publication Society, Kandy, Sri Lanka. 12, 13, 16, 25-28, 20-21.

30. Piyadassi Thera 1974. The Buddha's Ancient Path.
Buddhist Publication Society, Kandy, Sri Lanka. 20.

31. Malalasekara, G.P. and Jayatilleke, K.N. 1974.
Buddhism and the Race Question.
The Wheel Vol. X Nos. 200-201.

Buddhist Publication Society, Kandy, Sri Lanka. 19-26.

32. Alavaka Sutta. The Sutta Nipata. 192
H. Saddhatissa - The Sutta Nipata 1985.

Curzon Press, London.

33. Dhammika S. 1987. Gemstones of the good dhamma.
The Wheel. Nos. 342-344.

Buddhist Publication Society, Kandy, Sri Lanka. 48.

Reprinted and Donated by
The Corporate Body of the Buddha Educational Foundation
11th Floor, 55, Hang Chow S. Rd. Sec 1,Taipei,Taiwan R.O.C.
TEL:(02)3951198 · FAX:(02)3913415
Printed in Taiwan (This book is not to be sold.)
FOR FREE DISTRIBUTION
1996, APR 10,000 COPIES